Regd. No. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

2 4 NOV 1930

HIFAZATH - UL - ISLAM

உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

மலர் 1. | ஹிஜ்ரி 1349 ஜமாதுல்ஆகிர்மீ 1930 நவம்பர்மீ | இதழ் 10

உள்ளடக்கம் பக்கம்

1.	சூரத்துல் மாஊன் ...	433
2.	நாயக வாக்கியம் ...	436
3.	மார்க்கக் கல்வி ...	438
4.	பரிசுத்த இஸ்லாமின் பரிசுத்தக் கட்டளைகள் ...	441
5.	அபூபக்கர் ஸித்தீக் (ரலி) என்னும் நூலில் தாஊத்ஷா இழைத்த தவறு ...	443
6.	புதக்குடி மத்ரசாவின் பட்டமளிப்பு விழா ...	447
7.	சங்கடம் யாருக்கு ...	454
8.	தாருல் இஸ்லாமும், ஜூம்ஆப்பிரசங்கமும் ...	457
9.	இமாம் கஸ்ஸாலி (ரஹ்.) அவர்களின் திருமுகம் ...	465
10.	உண்மை நாகரிகம் ...	468
11.	ஷரீஅத்தின் படியொழுகுபவனே உண்மை முஸ்லிம் ...	469
12.	விஞ்ஞான விகசிதங்கள் ...	472
13.	குழந்தைகளின் பராமரிப்பு ...	474
14.	செய்தித் திரட்டு ...	476
15.	ஹஜ்ரத் புலைலின் (ரலி) அரிய உபதேசம் ...	477
16.	ஆசிரியர் குறிப்புகள் ...	479

சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின் வெளியீடு.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு	...	ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகளுக்கு	...	,,	4 0 0
தனிப் பிரதி	...	,,	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரேபக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்பட மாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

48, அங்கப்ப நாய்க்கன் தெரு,

G. T. மதராஸ்.

கொண்டிருந்தார்களென ஹதீது ஷரீப்களில் கூறப்பட்டிருக்கின்றது.

இதன் முந்தியவாக்கியத்தில், மகாமேலான உம்முடைய நாயனின் திருநாமத்தைத் தூய்மையாக்குவீராக. எனக் கூறப்பட்டிருக்கின்றது. இதில் தூய்மை யாக்குவ தென்பதற்கு, அல்லாஹ் தஆலா பலவாறான பின்னங்களை விட்டும் தூய்மையாக யிருக்கின்றான் என்றும், அவன் தன்னிலும் தன் வர்ணிப்புகளிலும், செயல்களிலும் நிறை பூர்ணமானவனாக யிருக்கின்றான் என்றும் நிர்ணயங்கொண்டு வாயினாலும் அவ்வாறு கூறுவதற்குச் சொல்லப்படுமென்றும், இந்த இடத்தில் 'இஸ்மு' என்னும் பதம் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதில், அவன் (தாத்) தன் வரையில் யாருடைய அறிவும் செல்லமாட்டாது; அவனது வர்ணிப்புகளைக்கொண்டு தான் அவனை அறிந்துகொள்ள முடியும் என்பன போலொற்ற அனேக விஷயங்கள் பொதிந்திருக்கின்றன வென்றும், 'ரப்பு' (வளர்க்கிறவன்) எனக்கூறப்பட்டிருப்பதில், ஆண்டவன் மானிடனை ஆதிமுதல் வளர்த்து காப்பாற்றிக் வருவதால் மானிடனுடையபுகழுக்கு அவனே பாத்தியஸ்தனாக யிருக்கின்றான் என்றும், 'அஃலா' (உயர்த்தியானவன்) என்று கூறப்பட்டிருப்பதில், அல்லாஹ் தஆலா மானிடர்களது எண்ணம், நினைவு இவைகளை விட்டு உயர்த்தியாக யிருப்பதால் புகழப்படுவதற்கு அவனே பாத்தியஸ்தனாகயிருக்கின்றான் என்றும் இவை போலொற்ற இன்னும் அநேக இரகசியங்கள் அதில் மறைந்திருக்கின்றன வென்றும் உலமாக்கள் கூறியிருக்கின்றார்கள்.

இதன் இரண்டாவது வாக்கியத்தில், சகல வஸ்துக்களையும் படைத்து ஒழுங்குபடுத்தியிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது, அல்லாஹ் தஆலா மானிடர்முதல் யாவற்றையும் படைத்து அதனைத் தக்க முறையில் ஒழுங்குபடுத்தி, எந்த உயிர்ப்பிராணிக்கு எவ்வாறான உறுப்புக்கள், எவ்வளவு பலங்கள், எவ்வகையான கோலங்கள் தேவைப்படுமோ அவைகளைத் தக்கவிதத்தில் அமைத்து வைத்திருக்கின்றான். இக்கோலங்களில் ஏதாகிலும் சற்று விகற்ப மேற்பட்டுவிடுமாயின், அதனுடைய அழகேகெட்டுப்போய் விடுவதுடன் அவைகள் செய்ய வேண்டிய காரியாதிகளிலும் மாறுதலேற்பட்டுவிடும். உதாஹரணமாக, பரவைகளுக்கு இரக்கையையும், ஐவாய் மிருகங்களுக்கு நகங்களையும் மரங்களுக்குத் தொலிகளையும் அமைத்திருப்பது கண்டு நமது புத்திகளெல்லாம் தட்டுத்தடுமாறிக்கொண்டிருக்கின்றது. ஏனவே, ஒவ்வொரு வஸ்துக்களையும் தக்க முறையில் சிருஷ்டித்து, அவைகளுக்கு நேர் வழியையும் காண்பித்திருக்கின்றான். உதாஹரணமாக, பரவைகள், குளிர்காலம், வெயிற்காலம் இவைகளுக்குத் தக்கவிதமாய் தம் இருப்பிடத்தை அமைத்துக்கொள்ளும் சக்தியை அளித்திருக்கின்றான்; புழுபூச்சிகளுக்கு, பூமியின் வளைக்குள் வசிக்கும் சக்தியைக் கொடுத்திருக்கின்றான் என்பதை நோட்டமிட்டுப்பாருங்கள். எரும்பு ஓர் சிறிய உயிர்ப்பிராணியாக யிருந்தபோதிலும் அது எவ்வாறு ஒருவஸ்துவை இழுத்துச் செல்கிறதென்பதையும், அவைகள் ஒன்று சேர்ந்து எவ்வாறு வரிசை வரிசையாக ஒழுங்காய்ச் செல்கிறதென்பதையும் நோட்டமிட்டுப் பார்ப்போமாகில், பெரும் ஆச்சரியமாகத் தோன்றுகிறது. இதுவன்றி மானிடனுக்களித்திருக்கும் காருண்யங்களை உற்று நோக்குவோமாகில், அவன் ஜீவனஞ் செய்யும் வழியைத் தேடிக்கொள்ளும் மார்க்கத்தை அறிவித்துக் கொடுத்திருக்கிறான்; ரயில் வண்டிமுதல் ஆகாயவிமான வரையுள்ள சகல வஸ்துக்களையும் உண்டுபண்ணும் சக்தியை அளித்திருப்பதுடன் மறுமைக்கு இன்றியமையாததாயுள்ள சகல சாதனங்களையும் தேடிக்கொள்வதற்குள்ள கல்வி அறிவுகளையும் அளித்திருக்கின்றான் என்பதை நன்கு தெரிந்துகொள்வோம்.

இதன் ஆறாவது வாக்கியத்தில் நாம் உமக்கு குர்ஆனை ஓதிக் காண்பிப்போம்; நீர் அதனை மறக்கமாட்டீர். எனக் கூறுகின்றான். அதாவது, ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை.) அவர்கள் மூலமாக குர்ஆனை ஓதிக் காண்பிக்கப்பட்டவுடன் எம்பெருமானார் (ஸல்.) அவர்களது ஹிருதயத்தில் அப்படியே அமைந்துபோயிற்று. அதன் காரணமாய் அநேக சஹாபாக்கள் குர்ஆனை மனனஞ் செய்த ஹாபில்களாகத் திகழ்ந்தார்கள். பிறகு அம்மகான்களின் பொருட்டால், இக்காலை ஒவ்வொரு சிற்றூர் முதல் பெரும் பட்டணங்கள்வரையிலுள்ள சகல இடங்களிலும் குர்ஆனை மனனஞ் செய்த அநேக ஹாபில்கள்

ஏற்பட்டிருப்பதுடன் சிறுர்களும், மாதர்களும்குர்ஆன்முழுதையும் மனனஞ்செய்துஹாபிஸ்களாகத் திகழ்வதையுங் காண்கின்றோம். எனவே, இன்று இவ்வுலகின்கண் காணப்படும் குர்ஆன் முழுதும் அழிக்கப்பட்டுப் போய்விடுமாயினும் (நஊதுபில்லாஹ்) ஒரு குக்கிராமத்திலுள்ள ஓர் சிறிய பையன், குர்ஆன்ஷரீபிலுள்ள ஒரு எழுத்தையும் விட்டு விடாது எழுதி வைத்துவிடுவானென்பது திண்ணம். இதர சமுகத்தினர் தங்கள் சமுகத்தில் தோன்றியுள்ள வேதத்தை மனனஞ் செய்திருப்பதாக எண்பிக்க முன்வர முடியுமா? எனவே தவ்ருத், ஜபூர் இன்ஜீல் இவைகளையோ, அன்றி மற்றும் வேதமென்று கூறப்படுபவைகளையோ, மனனஞ் செய்து விட்டதாக யாரும் கூற முன்வரமுடியுமா? ஒருக்காலும் முடியாதென்பது திண்ணம்.

இதன் பதினைன்காவது வாக்கியத்தில் தம்மைத் தூய்மைப்படுத்திக்கொண்டவன் திட்டமாக ஜெயம் பெற்றுவிட்டான். எனக் கூறப்பட்டிருக்கின்றது. இதில் தூய்மை என்பது பலவகையிலுமேற்படுகின்றது.(1)குப்ர்,ஷிர்க், பலவிதமான கெட்டஎிர்ணயங்கள், எண்ணங்கள், துர்குணங்கள், பொருமை, அகப்பெருமை முதலியவைகளைவிட்டு மனம் தூய்மையாகயிருப்பது. (2) சிறுநீர், பெறுநீர் இரத்தம், சீ, இந்திரியம் முதலியவைகளை விட்டு திரேகம், பிடவை இவைகள் பரிசுத்தமாகயிருப்பது. (3) சிறு தொடக்கு, பெருந்தொடக்கு இவைகளை, ஒளு, முளுக்கு முதலியவைகளைக்கொண்டு துப்பறவாக்கி வைப்பது. (4) ஐசுவரியங்களை, ஜகாத் தானதர்மம் முதலியவைகளைக்கொண்டு துப்பறவாக்கி வைப்பது. எனவே இவை யாவற்றையும்விட்டுத் தம்மைத் துப்பறவாக்கி வைத்தவன் நிச்சயமாக ஜெயம் பெற்றுவிட்டான் என்பதேயாம்.

மக்காவிலுள்ள குப்பார்களும், மறுமையின்மீது நம்பிக்கைகொள்ளாதோரும், எங்களுக்கு மன ஓர்மை விஷயத்திலும், தொழுகையிலும் எவ்விதத்திலும்மனத்திருப்தி ஏற்படுகிறதில்லை; ஆதலின் எங்களுக்கு நல்லறிவு கிடையாதா? வென வினவிக்கொண்டிருந்தனர். இதற்கு, நீங்கள் உலகின் அற்ப நாள் வாழ்க்கையையும், அதன் இன்ப சுகங்களையும், மறுமையில் கிடைக்கும் அளவற்ற பாக்கியங்களைப் பார்க்கினும் பெரிதென மதித்து நடந்து வருவதின் காரணமாக, உங்களுக்கு அவ்வாறு தோன்றுகிறதென்றும், மறுமையானது இவ்வுலக வாழ்க்கையைப் பார்க்கினும் மகாசிரேஷ்டமானதென்பது உங்களுக்குத் தெரியாது போய்விட்டதெனவும் அல்லாஹ்தஆலா கூறி, இவ்விஷயங்கள் ஆண்டவனுல் முந்திய நபிமார்களுக்கு அனுப்பப்பட்டிருந்த வேதங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறதென நம்மனோர்க்கு நன்கறிவிக்கிறுன்.

(அல்லாஹ் அஃலம்)

நாயக வாக்கியம்.

நீங்கள் முஸ்லிம் சோதரர்களுடன் அவர்களுக்குக் கஷ்டமேற்படாத முறையில் நடந்துகொள்ளுங்கள். எவன் தன், கைவாயினின்று முஸ்லிம்களுக்குத் தொந்திரை கொடுக்காதிருக்கின்றுனே, அவன் தான் சரியான முஸ்லிமாகுமென எம்பெருமானுர் நபிய்ய கரீம் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றுர்கள்.

முஸ்லிம்கள் தங்களுள், ஒருவர்மீதொருவர் பிரீதிகொண்டவர்களாக ஆயிருத்தல் வேண்டும். நீங்கள் எதுவரை முஃமின்களாக ஆய்விடமாட்டீர்களோ, அதுவரை சுவனபதியடையமாட்டீர்கள். உங்களில் ஒருவர்மீதொருவர் பிரீதிகொள்ளாதவரை நீங்கள் முஃமின்களாகயிருக்கமுடியாதென சற்குணசீலர் (ஸல்.) கூறியிருக்கின்றுர்கள்.

எந்த வஸ்துவை நீங்கள் விரும்புகின்றீர்களோ, அதனையே உங்கள் சகோதிரனுக்கும் தேவையுள்ளதெனக் கருதுங்கள். ஒருவன்எதுவரை தனக்கு திருப்தியுள்ளவைகளை இதரர்களுக்கும் திருப்தியுள்ளதாகக் கருதமாட்டானே, அதுவரை அவன் உண்மையான முஃமினுக யிருக்க முடியாதென எம்பெருமானுர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றுர்கள்.

ஒவ்வொரு முஸ்லிம் சோதரர்களுக்கும் உதவிபுரியுங்கள். மானிடன் தன் சகோதர

னுக்கு உதவி புரிந்துகொண்டிருக்கும் காலமெல்லாம் அல்லாஹுதஆலா அவனுக்கு உதவி புரிகின்றான்.

முஸ்லிம் சோதரர்களுக்கு நஷ்டத்தை விளைவிக்காதீர்கள். மானிடன், எந்த முஃமினுக்கும் நஷ்டத்தை விளைவிக்காமலிருக்கும் காலமெல்லாம், அல்லாஹுதஆலா அந்த மானிடனுக்கு நஷ்டத்தை உண்டுபண்ண மாட்டான்.

எந்த முஸ்லிமையும் ஏமாற்றிவிடாதீர்கள். யாராகிலுமொருவன் தன் முஸ்லிம் சகோதரனை ஏமாற்றுவானாகில், அவன் ஆண்டவனால் சபிக்கப்பட்டவனாய் விடுவானென நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

எந்த முஸ்லிமுடைய பின்னங்களையும் மானிடர்களுக்கு முன் வெளிப்படுத்தாதீர்கள். யாராகிலுமொருவன் இதரர்களின்பின்னங்களை மானிடர்கள்பால் எடுத்துக் காண்பிப்பானாகில், அவனில் மறைந்து கிடக்கும் பின்னங்களை ஆண்டவன் வெளிப்படுத்திவிடுவான் என ஏகத்துவத்தூதர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

அமானிதத்தை மோசஞ் செய்யாதீர்கள்; வார்த்தைப்பாட்டிற்கு மாற்றஞ் செய்யாதீர்கள்; பொய் சொல்லாதீர்கள். முனாபிகீன்களை மூன்று அடையாளங்களைக் கொண்டுத் தெரிந்துகொள்ளலாம். (1) பேசுவானாகில், பொய் பேசுவான். (2) வார்த்தைப்பாடு செய்வானாகில், அதற்கு மாற்றஞ்செய்வான். (3) அமானிதம் வைக்கப்படுமாயின், அதனை மோசஞ் செய்துவிடுவான். என உலகதயாளர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

யார்மீதும் பொறாமை கொள்ளாதீர்கள். ஒரு மனிதனது ஹிருதயத்தில் ஈமானும், பொறாமையும்ஒன்றுசேரமாட்டாதென நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

ஒவ்வொருவருடனும் சற்குணத்தோடு நடந்துகொள்ளுங்கள். எவனில் சற்குணங்கள் காணப்படுகின்றதோ, அவன் ஈமானின் உச்சஸ்தானத்தை அடைந்தவனாகும் என நபி பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

நாவையும் அபத்தையும் பேணுதலாக வைத்துக்கொள்ளுங்கள்; அதை வீணில் போக்கிவிடாதீர்கள். எவன் நாவையும் அபத்தையும் வீணில் செலவு செய்யாதிருப்பதாக உறுதி கூறுகின்றானோ, அவனுக்கு சுவனபதியைக்கொண்டு வாக்குறுதி செய்கிறேனென்ன தயாளசீலர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

எந்த வார்த்தை பேசுவதாயினும், நன்றாக யோசித்து நிதானத்துடன் பேசுங்கள்; எப்போதும் உண்மையே பேசுங்கள். உண்மையானது சுவனபதியளவில் கொண்டுசேர்த்துவிடுவதற்குள்ள தக்க ஔடதமாகும். சதா உண்மை பேசுவதின் மீதே ஸ்திரமாகயிருங்கள்; திட்டமாக உண்மையானது நன்மையின் பக்கல் கொண்டுசேர்த்துவிடும்; நன்மையானது சுவனபதியடையும்படி செய்துவிடும் என எம்பிரான் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

பொய்பேசுவதை விட்டும் தவிழ்ந்துகொள்ளுங்கள். பொய் பேசுவதானது கெட்டவேலை, களவு இவைகளில் கொண்டுசேர்த்துவிடும். அக்கெட்ட காரியங்களானது நரகத்தின் பக்கல் கொண்டுசேர்த்துவிடுமென சத்தியத் திருத்தூதர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

வீண்வார்த்தை பேசுவதை விட்டும் வாயை மூடிக்கொண்டிருப்பது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அத்தியா அவசியமானதாகும். வீண்வார்த்தை பேசுவதைவிட்டு வாயைமூடிக்கொண்டிருப்பது இஸ்லாத்திலுள்ள சிறந்த காரியமாகும்.

எந்த முஸ்லிமைப்பற்றியும் கெடுதியோ, அல்லது குற்றங் குறைகளையோ சொல்லிக்கொண்டு திரியாதீர்கள். ஒருவர்மீது குறை சொல்லிக்கொண்டு திரிவதும், அவர்மீது கெடுதி சொல்வதும் முஃமினுக்குள்ள செயலாகமாட்டாதென நபிகள் நாதர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

உண்மை, அநீதி இவை இரண்டிற்கும் தலையை அசைத்துக் கொண்டிராதீர்கள். இரு கூட்டத்தாரின் செயல்களையும் கண்டு, இரண்டும் சரிதானெனக் கூறிக்கொண்டிருப்பவனுக்கு மறுமையில் நெருப்பினாலுண்டான இருமுகங்கள் ஏற்பட்டுவிடுமென எம்பெருமானார்(ஸல்.)அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

பிறருடைய கடிதத்தை அவரது அனுமதியில்லாது பார்க்கக்கூடாது. எவனொருவன் பிறருடைய கடிதத்தை அவருடைய அனுமதியின்றி பார்க்கின்றானோ, அவன் மறுமையில் நெருப்பைப்பார்ப்பான்.

786

சிக்கனம்.

மானிடர்கள் தங்கள் வாழ்க்கையைச் சீர்படுத்திக்கொள்வதற்கு, சிக்கனமென்பதோர் தக்க ஔஷதமாகும். எனவே மானிடனின் சகல நடவடிக்கைகளிலும் சிக்கனத்தை அனுஷ்டிக்கவேண்டியது மிகமிக அத்தியாவசியமானதாகும். உலக நாகரீகம் மானிடர்களை ஆடம்பரம், படாடோபம் இவைகளின் முன்னணிக்குக்கொண்டு செல்கின்றது. இதனால் மானிடன் இல்லற வாழ்க்கையில் பற்பல விதமான கஷ்ட சங்கடங்களை அடையும்படி ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே முஸ்லிம்கள் தங்களது வாழ்க்கையை எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்களினது வாழ்க்கையுடன் ஒத்துப்பார்த் தொழுகவேண்டியது மிகமிக அவசியமென்பதை யாரே மறுக்க வல்லார்? நபிகள்திலகம் (ஸல்.) அவர்களுடைய ஒவ்வொரு நடத்தையையும் முஸ்லிம்கள் பின்பற்றி நடந்துவரவேண்டுமென்று திருக்குர்ஆன் கட்டளையிடுகின்றது. எனவே, எம்பிரான் (ஸல்.) அவர்களுடைய வாழ்க்கையில் சிக்கனமென்பது எவ்வாறு மிளிர்ந்துகொண்டிருந்ததென்பதை ஈங்கு சற்று கவனிப்போமாக. "எம்பெருமானார் சத்தியத்தூதர்(ஸல்.) அவர்களது குடும்ப வாழ்க்கையானது ஆரம்பமுதல் இறுதிவரை என்னிடம்ஒப்புவிக்கப்பட்டிருந்தது; அது சதாரணமாகவேயிருந்து வந்தன; கதியற்ற—வகையற்ற முஸ்லிம்கள் அங்குவந்து விடுவார்களாயின் எம்பெருமானார் (ஸல்.) அவர்களது கட்டளைக் கேற்ப யாரிடமாகிலும் நான் கடன்வாங்கி வந்து அவர்களுக்கு உண்ண உடுத்தத் தேவைப்படுவைகளை அளித்து விடுவது வழக்கம்" என ஹஸ்ரத் பிலால் (ரலி.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். ஒரு சமயம் ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் நபிபெருமானார் (ஸல்.) அவர்களது வீட்டுக்குச் சென்றபொழுது, அங்கு எதைக் கண்டார்கள்? ஒரு கட்டிலும், பேரீச்ச இலைகளால் நிறப்பப்பட்ட ஒரு தலையணையும், வார்க்கோதுமை நிறைந்த ஒரு மண்பாண்டமும், விரிப்புக்குபயோகிக்கும் ஒரு தோலும், தண்ணீர் வைக்கக் கூடிய சில தோற்பைகளும் மட்டும் அங்கிருக்கக் கண்டார்கள். இவ்வெளிய வாழ்க்கையைப்பார்த்து ஹஸ்ரத் உமர் (ரலி.) கண்ணீர் வடித்தார்கள். எதற்காக அழவேண்டுமென்று நபி பெருமானார் (ஸல்.) அவர்கள் கேழ்க்க, யாரசூலல்லாஹ்! நான் எப்படி அழாதிருக்க முடியும்? கட்டிலிலுள்ள கயிறுகளால் தங்களுடைய சரீரத்தில் தழும்புகள் பட்டிருக்கின்றனவே. தங்களது வீட்டு சாமான்கள் வைக்கப்பட்டிருக்கும் அறை என் பார்வையிலிருக்கின்றதே? ரோம சக்ரவர்த்தியாகிய கைஸரும், பார்ஸீக சக்ரவர்த்தியாகிய கிஸ்ராவும் சந்தோஷத்திலும், ஆடம்பர வாழ்க்கையிலும் மூழ்கியிருக்கின்றார்களே? தாங்களோ ஆண்டவனுடைய நபியாகவும், அவனால் அனுப்பப்பட்ட தூதராகவும், அவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ரசூலாகவும் இருக்க, தங்களது வீட்டு சாமான்களின் நிலைமையோ இவ்வாறிருக்கிறதே? இதனை யான்கண்டு எவ்வாறு அழாதிருக்க முடியும்? என ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் கூறினார்கள். அதற்கு எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் கத்தாபுடைய குமாரரே! அச் சக்ரவர்த்திகள் உலகத்தைப் பெற்றுக்கொள்ளவும், நாம் மறுமையின் வாழ்க்கையை பெற்றுக் கொள்வதற்கும் உங்களுக்கு விருப்பமில்லையா? எனக் கூறினார்கள். இதுவன்றி எம்பெருமானார் (ஸல்.) அவர்களுடைய இதரவாழ்க்கைகளும் மிக சாதாரணமாகவே யிருந்து வந்தனவென்பது வெள்ளிடைமலைபோல் நம்கண் முன் மிளிர்ந்து கொண்டிருக்கின்றன.

தவிர எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் விவாக முதலிய சந்தோஷகரமான காரியாதிகளையும் சிக்கனத்துடனேயேநடத்திவந்திருக்கின்றார்கள். எனவே, காத்தூன ஜன்னத் ஹஸ்ரத் பாத்திமா (ரலி.) அவர்களுடையவிவாகத்தின்போது பேரீத்தம் பழமும், குளிர்ந்த ஜலமும் வலீமாவில் வழங்கப்பட்டிருக்கிறதென்

ருல், மற்ற விஷயங்களில் எவ்வாறு சிக்கன மேற்பட்டிருந்திருக்குமென்பதை நன்குணர்ந்து கொள்ளலாம். எம்பெருமானர் நபிய்ய கரீம் (ஸல்.) அவர்களது ஆரம்பகாலத்தில் தான் இவ்வாருன சிக்கனம் அனுஷ்டிக்கப் பட்டுவந்ததெனக்கருதிவிடவேண்டாம். அவர்கள் மாபெரும் சக்ரவர்த்தியேபோன்று ஜெய பேரிகையுடன் இருந்த காலத்திலுங்கூட இம்மாதிரியான வாழ்க்கையைத்தான் அனுஷ்டித்து வந்தார்கள். நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுடைய தோழர்களும் இவ்வறிய முறையைப்பின்பற்றியேதான் தங்கள் குடும்ப வாழ்க்கையை தக்க முறையில் நடத்தி வந்திருக்கின்ருர்கள். எனவே, அவர்கள் குடும்ப வாழ்க்கையில் சிக்கனத்தைக் கைகொண்டிருந்ததால்தான் இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்கும், பொதுநலச் சேவைகளுக்கும் தேவைப்படும் பொருள்களை தியாகஞ் செய்யப் பின்வாங்கினுர்களில்லை. அதனுலேயே தான் அவர்கள்காலத்தில் இஸ்லாம் தலைசிறந்து விளங்கிற்று. தற்காலத்திலோவெனில், நம்பவர்களின் நிலைமை தலைகீழாய் மாறியிருக்கின்றது. சாதாரணமாக இல்வாழ்க்கை நடத்துவதில் பலவாருன செலவுகள் ஏற்பட்டு விடுவதோடு கல்யாணம்முதலிய விவாகச் சடங்குகளிலும் அபரிமிதமான திரவியங்களைச் செலவுசெய்து விடுகின்ருேம். ஐசுவரியம் படைத்த தனவந்தர்கள் செலவு செய்வதைக் கண்டு சாமான்யர்களும் கடன் வாங்கி செலவு செய்துவிட்டுப் பிறகு கடனுடைய ஹிம்ஸைக்கு ஆளாய் விடுகின்றனர். விவாகச் சடங்குகளில் மட்டுந்தான் இவ்வாறு செலவு செய்கிருேமென்று நினைக்கின்றீர்கள்? கத்னு, காதுகுத்து முதலிய காரியங்களிலும், மரணித்தவர்கள் விஷயத்திலும் ஏராளமாகச் செலவு செய்துவிட்டுப் பிறகு கைசேதமடைந்து உட்கார்ந்திருக்கின்ருேம்.

ஆகவே, நம்சமுகத்தினர் இவ்வாருன சடங்குகளை நிறைவேற்றுவதில் அபரிமிதமான ஐசுவரியங்களைச் செலவு செய்து விடுவதால், முஸ்லிம்களின் முன்னேற்றம், கல்விமுதலிய துறைகளில் செலவுசெய்வதற்கு தைரியமேற்படாது பிற்போக்கடைந்துகொண்டே வருகின்றனர். இது ஒரு பக்கல் கிடக்க, மார்க்க முரணுன—ஹருமான—குப்ர்ஷிர்கை விளைவிக்கக்கூடிய காரியங்களிலும் அளவுகடந்த பொருள்களை வீண் விரயஞ்செய்து விடுகின்றனர். எனவே, சிலஇடங்களில் கூடு, கொடி ஏற்றம் செய்யும் காரியங்களில் முஸ்லிம்களின் பணத்திலிருந்து 5000, 10,000, வரையில் செலவுசெய்யப்பப்பட்டு வீண்விரயமாக்கப்பட்டுவருவது கண் கூடு. ஆகவே, நம்முஸ்லிம் சமுகம் இவ்வாருன கெட்டகாரியாதிகளையெல்லாம் தவிழ்த்து, சடங்குகளில் வீண் செலவு செய்வதை விடுத்து பொது நலச் சேவையி லீடுபட்டுழைக்க முற்படும் காலமே நற்காலமாகுமென்பது திண்ணம்.

கான்ஸ்டாண்டி நோபிளின் வெற்றி

(சென்றமாதத் தொடர்)

காான்ஸ்டாண்டி நோபிளின் மீது முஸ்லிம்களின் நோட்டம்.

இப்பட்டிணத்தைக் கைப்பற்றிவிடவேண்டுமென்னும் எண்ணம் முஸ்லிம்களுக்கு வெகுகாலமாக யிருந்துவந்தது. எனவே, பனூஉமைய்யா வம்சத்திலுள்ள முதல் பாதுஷாவாகிய அமீர்முஆவியா அவர்கள், கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றவேண்டுமென்னும் நோக்கத்தோடு பெரியதோர் பட்டாளத்தை அனுப்பியிருந்தார்கள். ஆனுல் இஸ்லாமியவீரர்கள் தாங்கள் கோரிச்சென்ற காரியம் கைகூடாது திரும்பிவந்து விட்டார்கள். அங்கு சென்ற பட்டாளத்தில் அநேக சஹாபாக்கள் கலந்திருந்ததுடன் ஹஸ்ரத் அபூஅய்யூப் அன்சாரீ (ரலி) அவர்களுமிருந்தார்கள். இவர்களெல்லோரும் திரும்பவருங்காலை, ஹஸ்ரத் அபூஅய்யூப் அன்சாரீ (ரலி) அவர்கள் தெய்வகதியடைந்து விட்டார்கள். எனவே, அவர்கள் அப்பட்டணத்தின் எல்லையில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அவர்

களின் ஞாபகார்த்தமாய் இது காலை கான்ஸ்டாண்டிநோபிளில் அவர்கள் பெயரால் ஓர் மஸ்ஜித் பிரபல்யமாயிருந்துவருகிறது.

இதற்குப் பின்னும் பனூ உமைய்யா, பனூ அப்பாஸிய்யாக்களின் கலீபாக்கள் இப்பட்டிணத்தைக் கைப்பற்றவேண்டுமென எவ்வளவோ முயற்சித்தும் யாதொரு பிரயோசனமு மேற்படாது போயிற்று. கடைசியாக கி. பி. 1288-ம் ஆண்டில் பனூ உத்மானிய்யா வம்சத்திலுள்ள காஜீ சுல்த்தான் முஹம்மத் கான்தானீ, உத்மானீ அவர்கள் கான்ஸ்டாண்டி நோபிள் நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டு அதில் இஸ்லாத்தின் ஜெயக் கொடியை நாட்டினார்கள்.

உத்மானிய அரசர்கள் குஸ்தந்தனியாவைக் கைப்பற்ற உறுதிகோண்டது.

கி. பி. 1288-ம் ஆண்டில் உதுமானிய வம்ஸத்தின் ஆதி பிதாவாகிய காஜீசுல்த்தான் உதுமான்கான் அவர்கள், ஏஷியா மைனரில் உதுமானிய அரசாக்ஷியின் அஸ்திவாரக் கல்லை நாட்டிய கால முதற்கொண்டு, கான்ஸ்டாண்டுநோபிளை ஜெயித்த சுல்த்தான் முஹம்மத்பாத்திஹ் அவர்கள் காலம்வரை எத்தனை இராஜர்கள் ஏற்பட்டனரோ, அவர்கள் யாவரும் எவ்விதத்திலும் அப்பட்டிணத்தைக் கைகொண்டு அதனை உதுமானிய அரசாங்கத்தின் தலைநகராக ஆக்கிக்கொள்ள வேண்டுமென்னும் அவாவுடையவர்களாகவே யிருந்துவந்தார்கள். ஆனால் சகல வஸ்த்துக்களின்மீது அபார சக்தியினையுடைய நாயனது நாட்டமோ, மகத்தான இவ்வெற்றியின் ஜெயமானது முஹம்மத்தானீ அவர்களின் கரங்களாலேயே ஏற்பட வேண்டுமென்றிருந்ததுபோலும். எனவே, சுல்த்தான் முஹம்மத்தானீ, அவர்களது காலத்திற்குமுன் ஏற்பட்டுள்ள அரசர்கள் யாவரும் அப்பட்டிணத்தைக் கைப்பற்றி விடுவதற்காக எவ்வளவோ பஹீரதப்பிரயத்தினஞ் செய்து பார்த்தும் யாருடைய முயற்ச்சியும் கைகூடாது போயிற்று. அதாவது, கி. பி. 1288-ம் ஆண்டில் காஜீ உத்மான் அவர்கள் ஏஷியா மைனரில் ஓர் இஸ்லாமிய அரசாக்ஷியை ஏற்படுத்திய பொழுது ரோம கிறிஸ்தவ அரசாங்கமானது, தமக்கருகாமையில் ஓர் முஸ்லிம் அரசாங்கமிருப்பதைப் பார்க்க மனஞ் சகியாதவையாய் உதுமானிய அரசாக்ஷியின்மீது போர் தொடுக்க முற்பட்டு, அப்புதிய அரசாங்கத்தை இல்லாதொழித்துவிட சங்கணங் கட்டிக்கொண்டு அவ்வேலையிலீடுபட முற்பட்டு விட்டது. ஆனால் அல்லாஹ் தஆலாவோ, புதிதாய் ஏற்பட்டுள்ள இஸ்லாமிய அரசாக்ஷிக்குத் தக்க சக்தியை அளித்து, ஒவ்வொரு நாளும் அவ்வரசாங்கம் முன்னேக்கிச் செல்லும் படிக்கும், எதிரிகளின் அரசாங்கம் இருந்த இடந் தெரியாது அழிந்தொழிந்து போகும்படியும் செய்து விட்டான்.

காஜீ உத்மான்கான் அவர்கள், எதிரியாகிய உரோமச் சக்கரவர்த்தி கெட்ட எண்ணங்கொண்டிருப்பதைக்கண்டு, தங்கள் முழு கவனத்தையும் அவ்வரசாங்கத்தின்மீதே செலுத்த ஆரம்பித்துவிட்டார்கள். எனவே உத்மானிய சேனைகளானது, ஒவ்வொரு யுத்தக் களங்களிலும் ஜெயபேரிகை அடைந்தவைகளாய் புரோஸா வரை போய்ச் சேர்ந்து அதனையும் உத்மானிய அரசாக்ஷியின்கீழ் செய்து கொண்டது. காஜீ உத்மான்கான் அவர்கள் மரணமடைந்தபின் அவர்களுடைய குமாரரான ஆதர்கான் அவர்கள், சிம்மாசனத்திலமர்ந்து தங்களது அரும் தந்தையாரவர்களைப் பின்பற்றி அரசுபுரிந்து வந்ததின் காரணமாய் ஏஷியா மைனர் முழுதையும் ஜெயித்துக்கொண்டு ஐரோப்பாவிலும் கால் வைத்துவிட்டார்கள். பிறகு ஆதர்கான் காலஞ்சென்றபின் அவர்களுடைய குமாரரான முராத் சுல்த்தான் அவர்கள், முராத் அவ்வல் என்னும் பெயருடன் விளங்கினார்கள். அவர்கள் தங்களுடைய சுத்த வீரியத்தினல் தங்களது அரசாக்ஷி காலத்தில் எத்தனையோமுறை கியாதிவாய்ந்த ஐரோப்பிய வல்லரசுகளை எல்லாம் தோல்வி அடையும்படி செய்துவிட்டு, ஐரோப்பாவிற்குள் தங்களது அரசாங்கத்தை விஸ்தீரணப்படுத்தினார்கள். முடிவாக அவர்கள் உரோம அரசாங்கத்தையே அழித்தொழித்துவிட்டு கான்ஸ்டாண்டி நோபிளைக்கைப்பற்றிகொண்டால் சதாவும் யுத்தத்தொந்திரவேஇல்லாதொழிந்து போய்விடுமெனக் கருதினார்கள். அதற்குக் காலநிலைமை இடங்கொடுக்காது போய்விட்டது. பின்னர் பாயஜீத் என்னும் இராஜகுமாரர் தங்களது அருமைத் தந்தையாரின் மரணத்திற்குப்பின் அதிகாரமென்னும் கடிவாளத்தைத் தங்கள் கையில் பிடி

த்து ஐரோப்பாவில் எதிர்பாராத வெற்றியை அடைவதற்கு ஆரம்பித்து, கான்ஸ்டாண்டி நோபிளையும் கைப்பற்ற வேண்டுமென்னும் உறுதியுங்கொண்டார்கள். அதுகாலை அமீர் தைமூர், அவ்வரசாக்ஷியின்மீது போர்தொடுக்க ஆரம்பிக்கவே, பாயஜீத் அவர்கள் தங்களது முழு கவனத்தையும் அதில் செலுத்த வேண்டியிருந்ததால், தாங்கள் கோரிய காரியங்களில் கவனத்தைச் செலுத்த முடியாது போயிற்று. எனவே தங்கள் வர்க்கத்தைச் சார்ந்த விரோதியாகிய அமீர் தைமூருடன் எதிர்ப்புப் புரிவதிலேயே கவனத்தைச் செலுத்தவேண்டிய தாயிற்று.

இதற்குப்பின் அவர்களது இளைய குமாரரான முஹம்மத்அவ்வல் அவர்கள்அதிகாரத்திலமர்ந்து அமீர்தைமூரினல் ஏற்பட்ட நஷ்டங்களை எல்லாம் சொற்பகாலத்தில் ஒழுங்குபடுத்தி இராஜங்கத்தின் பலக்குறைவைப் போக்கிப் பழைய நிலைமைக்குக் கொணர்ந்து வைத்தார்கள். அதனல்அவர்களைஉதுமானிய இராஜியத்தைமறுமுறை ஸ்தாபித்தவர்களெனக் கூறுவதும் பொருந்தும்.இவர்களுடைய காலத்தில், இவர்களது தமையனரின் குமாரரான மூஸா என்பார் கான்ஸ்டாண்டிநோபிளை முற்றிகையிட்டும் அதனல் யாதொரு பிரயோசனமு மேற்படவில்லை.

பின்னர் சுல்தான் முஹம்மத்கான் அவர்கள் காலகதி அடைந்துவிடவே, அவர்களுடைய குமாரரான முராத்தானீ அவர்கள் சிம்மாசனமேறியவுடன் ரோமச்சக்கரவர்த்தியாகிய கைஸருனவன் அதிக்கிரமஞ் செய்ய முற்பட்ட மையால், அவ்வக்கிரமத்தைச் சகிக்கமுடியாது.கஷ்டமடைந்துஅவனுடைய இராஜதானிப்பட்டணமாகிய கான்ஸ்டாண்டிநோபிளின் பக்கல் சென்று அதனை முற்றுகையிட்டுக்கொண்டார்கள். ஆனல் துர் அதிர்ஷ்டவசமாய் அக்காலைக் இவ்வரசரின் சகோதிரர் ஏஷியா மைனரில் இவர்களுக்கு விரோதமாய் சதியாலோசனைபுரிய முற்பட்டுவிட்டமையால், அதற்காக சுல்தான் அவர்கள் முற்றுகையைவிட்டுத்திரும்பி அங்கு செல்லவேண்டிய தேற்பட்டுவிட்டது. எனவே அங்குசென்றுசதியைஒழித்துவிட்டுத்திரும்ப வந்து மறுமுறை முற்றுகையிட முயற்சித்த பொழுது, ரோமசக்ரவர்த்தியானவன் தாமிழைத்த தவறுகளுக்கெல்லாம் மன்னிப்புத் தேடிக்கொண்டு சுல்த்தான் அவர்களுக்கு வரிகட்டுவதாகக் கூறிக் கொண்டமையால், சுல்தான் அவர்கள் மறுபடியும் முற்றுகையிடவேண்டு மென்னும் எண்ணத்தை மாற்றிக்கொண்டார்கள். இதற்குப் பின் சற்றேறக்குறைய முப்பதாண்டுகள்வரை அவர்கள் அரசுபுரிந்துவிட்டு காலகதி அடைந்துவிட்டார்கள்.

சுல்தான்முஹம்மத்கான் உத்மானீ.

முஸ்லிம்களின் மனதில் பல நூற்றாண்டுகள்வரை மறைந்துகிடந்த விருப்பத்தைப் பூர்த்திசெய்வதற்காக வேண்டியே மகாபுருஷராகிய முஜாஹிதஅஃலம் சுல்த்தான்முஹம்மத்தானீ, பாத்திஹ குஸ்தந்தனியா, அவர்கள் கி. பி. 1429-ம் ஆண்டில் இப்பூஉலகின்கண் தோன்றினர்கள். எனவே, இராஜகுமாரரான முஹம்மத் அவர்கள் இப்பூஉலகின்கண் ஜனனமானது முதற்கொண்டு அவர்களது அருமைத்தந்தையாராகிய சுல்த்தான் முராத்கான்தானீ அவர்கள் அளவற்ற சந்தோஷமுடையவர்களாகவே இருந்துவந்தார்கள். பிறகு தங்களது குமாரர் சற்று விவேகமுடையவராய்விடவே, அவரை தக்க உபாத்தியாயர்களிடம் ஒப்பித்து விட்டார்கள் எனவே அவர்கள் துருக்கிபாஷைமட்டுமின்றிஅரபி பார்ஸீ யூனனீ லத்தின் முதலிய பாஷா ஞானங்களிலும் தக்கப் பாண்டித்தியம் பெற்று விளங்கினர். இதனல் அவரை ஒரு சுத்த வீரிய பராக்கிரமசாலி என்று கூறப்பட்டதுடன் அக்காலத்தின் மாபெரும் கல்விமானென்றும் கருதப்பட்டு வந்தது எனவே அவர்களை ஒருநேரத்தில்சுத்தவீரியர்களின் ஜாபிதாவில் கணக்கெடுக் கப்பட்டாலும் மற்ருெரு நேரத்தில் கல்வி மான்களின் தலைவராகவும் கருதப்பட்டு வந்தது,

இதனல் சுல்த்தான் முராத்தானீ அவர்கள் தங்களது அருமை குமாரர்மீது அளவற்ற பிரீதிகொண்டிருந்தமையால், ஒரு நிமிஷமேனும் தங்கள் பார்வையின்றுமறைந்திருப்பதைச் சகித்துக்கொள்ளாதவர்களாகவேயிருந்துவந்தார்கள். இவ்வாறு பிரீதிமேலிட்டுவிட்டதால் அவர்களுடைய சிறுபிராயத்திலேயே முஹம்மதை சிம்மாசனத்திலமரச்செய்துவிட்டு, அதிகாரத்தைத் தங்கள்வசமே வைத்திருந்தார்கள். மறுபடியும் ஒருமுறை முஹம்மதை சிம்மாசனத்தில் அமரச்செய்தார்கள். ஆனல் எதிர்பாராச் சம்பவத்தினல்

சுல்த்தான் முராத்தானீ அவர்கள், தாங்களே இராஜபரிபாலஞ் செய்வதாய் அறிக்கைவெளியிடும்படியான சந்தர்ப்ப மேற்பட்டுவிட்டது. அக்காலத்திலுள்ள சிறுபிராயமுடைய அரசர்கள் அமைதியோடு அச்சமற்று இராஜபரிபாலனஞ் செய்துகொள்ள முடியாதிருந்ததே அதற்குக் காரணமாகும். தவிர, சுல்த்தான் அவர்கள் பிரீதியின்மேலீட்டால் யுத்த காலங்களில் தங்கள் குமாரரைக்கூடவே வைத்திருந்தார்களாயினும் அதனால் இளவரசருக்கு அநேகப் பிரயோசனங்களேற்பட்டு விட்டன. எனவே யாருக்காகிலும் யுத்தங்களங்களிலுள்ள பயங்கள் எடுபட்டுப்போய் கண் திறந்து போகுமாயின், பிறகு அவர்களுக்கு வேறெதிலும் பயமேற்படுவதில்லை. கடைசியாக, முஹம்மதின் தந்தையாராகிய சுல்த்தான் முராத் அவர்கள் முழு அதிகாரத்தையும் தம் குமாரரிடம் ஒப்புவித்து விட்டார்கள். எனவே சுல்த்தான் முஹம்மத் அவர்கள் தங்கள் 24-வது பிராயத்தில் மூன்ரும் முறையாக சிம்மாசனத்திலமர்ந்தார்கள். அதுபொழுது அவர்கள் முன்போல் சாதாரணமாக யில்லாது மாபெரும் சுத்த வீரியராகவே திகழ்ந்தார்கள். ஆனால், ரோமச் சக்ரவர்த்தியாகிய கைஸரோவெனில் அவர்களை சாதாரண சிறு வயதினை யுடையவர்களாக எண்ணியதினாலும், சுல்த்தான் முராதும் காலஞ் சென்று போய்விட்டதினாலும் தம்முடைய பழைய விரோதங்களை எல்லாம் முற்படுத்தி வைத்துஅதைக்கொண்டு வீண்சண்டையிழுக்க முற்பட்டான். எனவே, அவன்சுல்த்தான் அவர்களிடம் ஒரு தூதரை அனுப்பி வைத்து, சிறைசெய்து தம்மிடம் வைக்கப்பட்டிருக்கும் சுல்த்தான் அவர்களின் சகோதரரான ஆதர்கானுக்காகக் கொடுக்கப்பட்டு வரும் செலவுத்தொகை போதியனவாக யில்லாதிருப்பதால் அதனை அதிகமாக்கிக் கொடுக்காவிட்டால், அவரை விட்டுவிடும்படி நேரிடுமென தெரிவிக்கும்படி செய்திருந்தான். இதனைக் கேட்டவுடன் சுல்த்தான் அவர்களுக்கு அதிகக் கோப மேற்பட்டு விட்டது. ஆனால் அக்காலை அதனை அடக்கிக்கொண் டிருப்பது தான் சிரேஷ்டமாகத் தோன்றியமையால், ஏற்கனவே கொடுத்து வந்ததுடன் சிறியதோர் தொகையையும் சேர்த்துக் கொடுக்க உத்திரவிட்டார்கள். கைஸர் இதனைக் கண்டு சந்தோஷமடைந்து தமது காரியத்தில் ஜெயம் பெற்றுவிட்டதாக எண்ணி மகிழ்ந்தான். அதனால் அவனுக்கு சுல்த்தான் விஷயமாய் ஏற்பட்டிருந்த பயமெல்லாம் நீங்கி, அவன் பலவாறு நடக்க முற்படவே, கடைசியில் பெரும் கஷ்ட நஷ்டத்திற் காளாகும்படி நேர்ந்துவிட்டது.

ஏற்கனவே, சுல்த்தான் முஹம்மத் அவர்களுக்கு, ஜெயம்பெற்று விளங்கும் தங்களது படையினுடைய குதிரையினது குளம்புகளினால் கைஸருடைய இராஜங்கத்தை மிதித்தழித்துவிட வேண்டுமென்னும் எண்ணமேற்பட்டிருந்ததாயினும் பிறகு மேலேகூறப்பெற்றுள்ள தூதர்வந்துசென்ற பிறகு அவ்வெண்ணம் எறிகிற தீயில் எண்ணெய் வார்த்தது போலாய்விட்டது. இதனால் சுல்த்தான் அவர்கள், கான்ஸ்டாண்டிநோபிளை ஜெயித்து, மமதைகொண்டு திரியும் கைஸரின் அகத்தை—அக்கிரமத்தை அடக்கி ஒடுக்கி விட வேண்டுமென்று திடமான உறுதி கொண்டார்கள். எனவே இதே நோக்கத்தோடு பெரிய யுத்தத்திற்குள்ள முஸ்தீப்புகளடங்கலையும் செய்ய முற்பட்டார்கள். சாதாரணமான ஒரு மிருகம் துயில்புரிந்துகொண்டிருக்கும் ஒரு புலியைப் பார்த்து அதனால் தனக்கு யாதொரு கெடுதியும் சம்பவிக்கமாட்டாதெனக் கருதியிருப்பதுபோல், கைஸரும் ஏமார்ந்துபோயிருந்தான். சுல்த்தான் அவர்களோவெனில், அந்தரங்கத்தில் யுத்தத்திற்குள்ள சகல முஸ்தீப்புக்களையும் செய்துகொண்டு யுத்தம் புரிவதற்கு முற்பட்டு, கைஸர் இடைவிடாது செய்துவரும் அதிக்கிரமங்களுக்குத் தக்கப் பரிகாரஞ் செய்ய ஆரம்பித்தார்கள். எனவே ஆரம்பத்தில் ஆதர் கானுக்காகக் கொடுத்துவந்த செலவு தொகையை உடனே நிறுத்திவிடும்படியும், உத்தியோகத்திலிருக்கும் உரோமர்கள் யாவரையும் வேலையை விட்டு நீக்கி விடும்படியும் கட்டளையிட்டார்கள். இதனைக் கைஸர் கண்டஞ்சி தமது ஆழ்ந்த நித்திரையினின்று எழுந்து கைசேதப்பட்டு, தாம் புரிந்துகொண்டிருந்த துயிலின்மீது வருந்தினன். ஆனால் கைவிட்டுத் தவறிப்போன வஸ்த்து திரும்பக் கைக்குக் கிட்டாதென்பது அவனது அறிவுக் கெட்டாது போனமை வருந்தத்தக்கதேயாகும். அதன்பின் சுல்த்தான் முஹம்மத் அவர்கள்

ஒரு தந்திரமான முறையைக்கை கொண்டதால், கைஸர் பயந்து எஞ்சியிருந்த தமது அறிவை யிழந்து விட்டான். எனவே துரிக்கியர்களின் சேனைகள் சுத்த வீரியத்துடன் திரண்டுவந்து தம்முன் நிற்பதுபோல் அவனுக்குத் தோன்றிற்று. அவன் அதனைப் பார்த்தவுடன் தமது இராஜங்கமெல்லாம் சின்னாபின்னப் படுத்தப்பட்டுப் போய்விடுமென பயந்து உடனே சுல்த்தான் அவர்களுக்கு அளவற்ற காணிக்கைகளை அனுப்பிவைத்து, மிகத் தாழ்மையோடு மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். அக் காணிக்கைகளில் ஐரோப்பியதேசத்து அழகுபொருந்திய கன்னிகைகளைக் கவரத்தக்க மாதர்களு மிருந்தனர். ஆனால் வெள்ளம் புறண்டோடும் பொழுது சுல்த்தான் அவர்கள் எவ்வகையிலும் தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள முடியாதிருந்தது.

(தொடரும்.)

சொர்ப்பனத்தின் தத்துவம்.

"ஆதமும் ஹவ்வாவும் (அலை) படைக்கப்படுவதற்கு முன்னிருந்தே கனவுகள் காணப்பட்டு வருகின்றன" என்று மேனாட்டார் ஒருபழமொழியை மிகப்படுத்திக் கூறிக்கொண்டு வருகின்றனர். இந்த முதுமொழியானது, சொர்ப்பனத்தின் உண்மையை ஸ்திரப்படுத்தக் கூடியதாக இருக்கின்றது.

தவிர பூர்வீக காலந்தொடுத்தே மக்கள் சொர்ப்பனத்தின் இயற்கைத்தத்துவங்களைப் பற்றி ஆராய்ச்சியும் செய்து வந்துள்ளார்கள். எனவே, பல திறப்பட்ட ஜனங்கள் கனவைப் பற்றி பலவாறான அபிப்பிராயங் கொண்டுள்ளார்களென்பது வெளிப்படை. இவ்வாறே முற்காலத்தினருங்கூட சொர்ப்பனத்தில் அமைந்துள்ள மர்மமான நுட்பங்களை உணர்ந்து அதனை வெளிப்படுத்தி இருக்கின்றார்களெனத்தெரிய வருகின்றது.

பண்டைய காலத்தில் சொர்ப்பனத்துக்கு பலாபலன் (தஃபீர்) சொல்வது ஒரு தனிப்பட்ட விந்தையாக இருந்து வந்துளது. எனவே சாதாரண மக்கள் கல்விஞானமுள்ள பெரியார்களிடஞ் சென்று தாங்கள் கண்ட கனவுகளுக்குள்ள பலாபலன்களை (தஃபீரை) விசாரித்துத்தெரிந்துகொள்வது வழக்கமாக இருந்துவந்தது. உதாஹரணமாக, ஹஜ்ரத் யூஸுப் (அலை) அவர்கள் கனவுகட்கு தஃபீர் (பலாபலன்) சொல்வதில் மகாஆற்றல் வாய்ந்தவர்களாயிருந்தார்களென்பதும், எகிப்தரசனான பிர்அவ்ன், புக்தெநஸர், ஹஜ்ரத் தானியால் (அலை) முதலியோர் கண்டகனவுகளும் அதற்குள்ள பலாபலன்களும் சரித்திரங்களில் எழுதப்பட்டு இன்னும் பாதுகாக்கப்பட்டுவருவதும் வெளிப்படை.

எனவே மேலேகூறப் பெற்றுள்ள விஷயங்களினின்று, கனவின் தன்மையும், அதற்குப் பலா பலன் கூறும் விஷயமும் பண்டைகால முதற்கொண்டே அனுஷ்டிக்கப்பட்டு வருகிறதென்றுஐயமறத்தெரிந்து கொள்கின்றோம். கல்வி ஞானமும், விவேக முன்னேற்றமும் தலைசிறந்துவிளங்கும்இந்நவநாகரீககாலத்தில் தான் கனவிற்குப்பலாபலன் உண்டென்னும் விஷயம் சிறிது கைவிடப்பட்டு வருகின்றது. ஆயினும், கனவைப் பிரதானமாய்க் கருதி, அதற்குத்தாத்பரியம்யாதாகுமோவென்னும் எண்ணம் மட்டும் ஒவ்வொருவரின் தன்மையிலும்இருந்துவருகின்றது. மேலும் கனவின் பலாபலனைப்பற்றி பல தேசங்களிலும் பல பாஷைகளிலும் பலவிதமான புத்தகங்கள் வெளியிடப் பட்டிருக்கின்றன. எனவே பொதுமக்களும் அறிவாளிகளும் அதன்மீது அபரி மிதமான நம்பிக்கைக்கொண்டே இருக்கின்றார்கள்.

ஸைன்டிபிக் (விஞ்ஞானவாதம்) புரிவோர், சொர்ப்பனத்தின்தன்மையைஒப்புக்கொள்வதில்லை. ஆனால் தற்கால விஞ்ஞானிகளிலொருவரான டாக்டர் செக்மண்டுபர்யூட் என்பார் தாம் எழுதி வெளியிட்டுவரும் வியாசங்களில், கனவுகட்குப் பொருள் அறிவது நவநாகரிக வழக்கமாகுமென்று வற்புறுத்திவருகின்றார். உதாஹரணமாக, அந்த டாக்டர் ஒரு நூல் எழுதி வெளியிட்டுள்ளார். அதில் அவர் எழுதி யிருப்பதாவது :—ஒவ்வொரு சொர்ப்

பனமும் மானிடனது ஏதாவதொரு அபிலாஷையுடன் சம்பந்தப்பட்டதாகவே இருக்கும். அதாவது, மனிதனானவன் தான் என்னுவதையே கனவாகக் காணுகின்றான்; அக்கனவானது, அவனுடைய தன்மையைச் சார்ந்ததாகவோ, அல்லது அவனது கோரிக்கைக்குச் சம்பந்தப்பட்டதாகவோ இல்லாத, வியர்த்தமானவைகளை அவன் அநேகமாய்க் காணுவதே யில்லை" என்பதாகும்.

சமீபத்தில், ஒரு ஐரோப்பிய அறிஞரான மிஸ்டர் பிரைடர்குபாரிஸ் என்பார் "டிரீம்ஸ் அண்டு பர்ஸினலிட்டி" (கனவும் அதன் பலாபலனும்) என்று ஒரு புஸ்தகம் எழுதி வெளியிட்டுள்ளார். அதில் அவர், மேற்கூறப்பட்ட டாக்டர் செக்மண்டுபர்யூட் என்பார் வெளியிட்டுள்ள அபிப்பிராயத்தை அனுசரித்து மிக விளக்கமான ஆராய்ச்சி புரிந்து அநேக புதிய விஷயங்களை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

நிற்க, மிஸ்டர் பிரைடர்குபாரிஸ் என்பார் சென்ற பன்னிரண்டு வருடகாலமாக கனவுகளின் தன்மைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்த பின்னரே மேற்படிபுஸ்தகத்தை எழுதி வெளியிட்டுள்ளார். அதில் டாக்டர் செக்பண்டு பர்யூட் கூறிய விஷயங்களை யெல்லாம் இவரும் ஆதரித்துப் பேசியிருக்கின்றார். எனவே, "கனவானது மனிதனுடைய ஆர்வங்கள் சம்பந்தப்பட்ட தாகவே இருக்கும்" என்ற விஷயத்தில் இவருக்கும் ஆழ்ந்த நம்பிக்கை இருப்பதாகத் தெரிகிறது.

எனவே, டாக்டர் மிஸ்டர் பிரைடர்கு பாரிஸ் என்பார், பொதுவாக கனவுகளை பதினெட்டு வகைகளாகப் பிரித்திருக்கின்றார். அவ் வகைகளினின்று ஒரு வகைக்கனவானது, யாதொரு உட்பொருளுமில்லாமல் வீணதாகவு மிருக்கின்து எனத்தெரிகிறது.

தவிர, பண்டைய கால மக்களிலுள்ள ஒருவருடைய கனவைப் பற்றியும், அதன் பலாபலனை (தஃபீரை)ப் பற்றியும் இங்கு ஆராய்வோம். அதாவது, எகிப்தின் அரசரான அஜீஸுடைய வேலைக்காரனொருவன், "தான் தனது எஜமானனுக்காகவேண்டி திராக்ஷைக் குலைகளினின்று சாறு பிழிந்து கொண்டிருப்பதாய்" கனவு கண்டு அதற்குள்ள (தஃபீர்) பலாபலனைப்பற்றி நோட்டமிட்டுப் பார்த்ததில், "அவன் எஜமானின் வேலையாளாக நீண்டநாள்வரை உத்தியோகம் புரிந்து கொண்டிருப்பான்; எஜமான் அவன்மீது விருப்பங் கொண்டிருப்பார்" என்று தெரிய வந்தது எனவே இக்கனவானது அந்த வேலைக்காரன் கொண்டிருந்த ஆர்வத்துக்குத் தக்கபடியே தான் இருக்கின்றது. இவ் விஷயத்தைத் தான் டாக்டர்பர்யூட் தமது நூலில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இதுவன்றி கனவில் காணப்படும் ஒவ்வொரு விஷயத்திற்கும் பிரத்தியேகமான நோக்க மொன்றிருக்கும். உதாஹரணமாக, யாரேனுமொருவன், பிற மனிதனொருவனுடைய மறைமுக மான குற்றத்தைக் கண்டு பிடிப்பதாய், அல்லது அன்னிய மனிதன் ஏதேனுமொரு பொருளைக்கொண்டுவந்து தம்மிடம் கொடுப்பதாய்க் கனவு கண்டால், அக்கனவானது, "அந்த மனிதன் பிறமனிதனொருவனுடைய குற்றத்தைக் கண்டு பிடிப்பான் அல்லது அவ் வன்னிய மனிதனே தன் குற்றத்தை வெளியிடாதே என்று இவனுக்கு ஏதேனும் பொருள் கொடுப்பான்" என்று தாத்பரியம் கொள்ள வேண்டும் என டாக்டர் பர்யூட் கூறியுள்ளார். இன்னம் யாரேனு மொருவர் 'படகில் ஏறிக்கொண்டுபோய் ஒரு அழகிய வசந்த தீவுடைய காட்சியைக் காண்பதாய் கனவு கண்டுகொண்டிருக்கும்போது திரும்பத் தன் ஊருக்குப்போய்ச் சேரவேண்டுமென்ற எண்ணம் அவருக்கு ஏற்படுமானால் அந்த கனவானது மறுதினமாவது அல்லது அதற்குப் பிறகாவது பிரத்தியக்ஷமாய் பல னளிக்குமென்று மேற்படிடாக்டர் கூறுகின்றார்.

மிஸ்டர் பீரிஸ் என்ற அறிஞர் எழுதிய நூலில் அவரே சுயமே கண்டனுபவித்த ஓர் கனவின் வரலாற்றையும் அதன் பலனையும் பின்வருமாறு பிரஸ்தாபித்துள்ளார் :— "அதாவது என்னுடையவிடுதியின் அறையில் சில விருத்தாபியர்கள் உட்கார்ந்து பேசிக் கொண் டிருந்தார்கள்; அச் சமயத்தில் பூமிக்குள்ளிருந்து ஸ்தூபி (மினார்) ஒன்று வெளிப்பட்டு உயர்ந்துகொண்டே போயிற்று; இறுதியில் வீட்டு முகடுவரைக்கும் அந்த ஸ்தூபி போய் எட்டி விட்டது. யானும் அந்த ஸ்தூபியின் மீது ஏறியிருந்துகொண்டேன். இது யான்கண்ட கனவின் வரலாறு.

இதற்கு யான் அனுபவித்த பலாபலன் (தஃபீர்) யாதெனில்:—

அங்கு கூடி உட்கார்ந்திருந்த கிழவர்களைக் கொண்டு கருத்து, உலகின் பலவாறான சங்கடங்களாகும்; பூமியிலிருந்து ஸ்தூபிஉயர்ந்து வருவதின் கருத்தானது தாம் மேன்பதவி அடைவதின் அடையாளமாகும் என்பதே'' ஆதலின் அவர் கண்ட கனவின் கருத்தானது அவர் உயர் பதவி அடைந்துவிடுவா ரென்பதாகும்.

டாக்டர் மிஸ்டர் பிரைடர்கு பாரிஸ் வகுத்துள்ள 18 வகை சொர்ப்பனங்களிற் சில மதனினுக்கு வரப்போகும் மகாப் பெரிய சங்கடத்தைபபற்றி முன்னறிவிப்புச்செய்வதாயுமிருக்கின்றது; இன்னுஞ் சில கனவுகள் மனதிலுள்ள ஆர்வத்தைவெளிப்படுத்திவிடக் கூடியதா யிருக்கின்றது; மற்றுஞ் சில கனவுகள், கவலையும் அவஸ்தையும் பட்டுக்கொண்டிருப்பவர்க்கு மனச் சாந்தியும் கஷ்டநிவர்த்தியும் உண்டாகப்போகிற தென்ற சுபச் செய்தியை முற்கூட்டியே அறிவிக்கக்கூடியதா யிருக்கின்றது. "எதுவரையில் சுவாச முண்டோ அதுவரையில் ஆசையு முண்டு'' என்ற பழமொழிக்கொப்ப, ஒவ்வொரு மனிதனும் ஏதேனு மொருவிஷயத்தின் மீது பிரீதிகொண்டேதா னிருப்பான். இவ்வாறான மனிதன் தான் பிரீதி கொண்டுள்ளவைகளை அடிக்கடி கனவாகக் காண்பது சகஜமா யிருந்துவருகிறது.

மானிடன் அளவற்றசஞ்சலத்திலும் கஷ்டநஷ்டத்திலும் மூழ்கி யிருந்தபோதிலும், தனக்கு மனச்சாந்தியும், மகிழ்ச்சியும் உண்டாகவேண்டுமென வெகுஆர்வத்தோடு எதிர் நோக்குகின்றான். தன் வறுமையெல்லாம் தொலைந்து, தான் ஒரு சிமானைவிட சந்தர்ப்பங் கிடைக்குமென்றும் எதிர்ப் பார்க்கின்றான். இது மானிடவர்க்கத்தின் இயற்கைச் சுபாவமாக யிருந்துவருகிறது. மனிதனுடைய இவ்வாறான இயற்கைச் சுபாவ அபிலாஷைகளே கனவுகளில் பிரத்தியக்ஷமாய்த் தென்படுவதுமுண்டு. ஒருமானிடனின் ஆர்வ விஷயமானது, எத்துணைகிரமமானதாகவோ, அன்றி அசாத்திய மானதாகவோ யிருந்த போதிலும், கனவில் அது வெகு எளிதில் முடிந்து ஜயம் அளிப்பதாய்ப் புலப்படுவதுமுண்டு. இவ்வாறான கனவுகளினால், சதாகவலையும் கஷ்டமும் அனுபவித்துக் கொண்டிருக்கும் மானிடன், தனக்கு இனியசுகமும், மனமகிழ்ச்சியும் கிடைக்கப் போகிறதென்று எண்ணி நிம்மதியடைகின்றான். இதனால் அவனுடைய கவலைகுறைகின்றது. இவ்வாறான பிரயோஜனம் உண்டாவது எதனால்? கனவுக்குப் பலாபலன் (தஃபீர்) பார்ப்பதலேயாம்!

டாக்டர்பிரைடர்குபாரிசின் சொற்படிக்கு, மகா சிரேஷ்டமும் பிரயோஜனமுமான சொர்ப்பனம் எதுவெனில், மனிதனின் உணர்ச்சியையும் உழைக்கும் சக்தியையும் தூண்டிவிட்டு உற்சாகம் புகட்டக்கூடிய விதத்தில் காணப்படும் கனவேயாகும். மேலும் ஒரு கனவைக் கண்டதனால் சோம்பலும் கவலையும் நீங்கி உழைப்பதற்கு ஆசையும் உற்சாகமும் உண்டாய் விடுமானால், அதுவே மகாமேலான கனவாகும். உதாஹரணமாகசோம்பற்சுபாவமும், கவலையானசிந்தையும்கொண்டு உழன்று கொண்டிருக்கும் ஒருமனிதன், உற்சாகமாக உழைப்பதாயும் அவ் வுழைப்பினால் அளவற்றப் பிரயோஜனம் உண்டாவதாயும் அப்பிரயோஜனத்தால் துக்கமும்கஷ்டமும் நீங்கி உயரியஸ்தானம் கிடைக்கப் பெறுவதாயும், தொழிலிலும்சம்பாத்தியத்திலும் உபாயமாய் உதைத்து வருவதுகொண்டு பெரும்மிதமான வெற்றியும் இலாபமும் பெற்றுய்வதாயும், இவ்வாறே வாழ்க்கையில் எதிர்பார்க்கப்படும் ஆர்வம் கைகூடி ஜயமுண்டாவதாயும் கனவு காண்பானாயில், அதன் பலாபலனை (தஃபீரை)க்கருதி அவன், தன் சோம்பலையும், வீண் கவலைகளையும் விட்டுப் புத்துணர்ச்சியும் புதிய ஊக்கமும் ஏற்பட்டு மேன்மைக்கு வரமுயலுகின்றான். கனவினால் ஏற்படும் பலனில் இஃதோர் பெரும் பிரயோசனமாகும். இப்படிப்பட்ட கனவுகளின் பலன்கள் அநேகமாய் அனுகூலமாகவே முடிவதுண்டென்றும், வழி தவறி கெட்டலையும் மனிதனுக்கு இஃதோர் நேர்வழி காட்டியாகு மென்றும் டாக்டர் பர்யூர்ட்சொல்லியிருக்கிறார். ஆகவேகனவின் பலாபலனை (தஃபீரை) அறிந்து அது வழி காட்டியபடி புத்துணர்ச்சியும்புதியஊக்கமும் பெற்று உழைத்தால் மாந்தர் முன்னுக்கு வருவதற்கு வழியுண்டாகு மென்பதை ஒவ்வொருவரும் கவனத்தில் வைத்துய்வார்களாக.

ஆலம்கீர் ஔரங்ஜேபின் நீதிமுறை.

சரித்திரப் பூர்வமான ஓர் சிறிய கதை.

1-வது அத்தியாயம்.

இளவரசனான பர்ருக் மிர்ஸா தமது சிற்றின்ப உணர்ச்சிகளை பகிரங்கமாக நிறைவேற்றிக்கொள்ள சற்றும் தைரிய மில்லாதவனாகயிருந்துவந்தான். ஏனெனின், அவன் ஆலம்கீர் ஔரங்ஜேப் பாதுஷாவின் சுபாவத்தையும், அவர் நியாயம், சத்தியம் இவைகளை நிலைநிறுத்துங்கால் அன்பு விசுவாசம், தன்னுணர்ச்சி ஆகியவற்றை அப்பால் தூக்கி எறிந்துவிடும் சுபாவத்தை யுடையவரென்பதையும் நன்கறிந்திருந்தான். ஆயினும் அவ்விளவரசன் அவிவேகத்தின் காரணமாய் தீய சகாக்களின் உதவியினால் சிற்றின்ப சம்பந்தமான சேஷ்டைகளி லீடுபட முற்பட்டான்.

பலநாட்கள்வரை பர்ருக் மிர்ஜாவின் தீயத் துணைவர்களுடைய மாயவலையில் எப் பெண் மணியும் சிக்கிக்கொள்ளவில்லை. எனவே, பர்ருக் மிர்ஜா அத்தீயசகாக்களி லுள்ளநாதிர் என்பானை நோக்கி, 'ஏ நாதிர்! நீர் நல்லவிதமாக முயற்சிக்கவில்லைபோல் தெரிகிறது இன்றேல் ஒருத்திகூடவா நம் வேட்டைக்கு அகப்படாமற் போவாள்?' எனக் கூறினான். அதற்கு,

நாதிர்:—அதிபரே! யான் தங்கட்கு ஊழியம் புரிவதில் அசிரத்தைகொண் டிருப்பதாகக் கருதுகின்றீர்கள்? அதிபதியாகியதங்களின் சுகபோகத்துக்காக எம்மாலான சகாயஞ் செய்யவேண்டுமென்றே யான் இரவும் பகலும்சிரத்தையோடு முயற்சித்து வருகின்றேன். அதன்பயனாய் இன்று புதியதோர் செய்திகிடைத்துள்ளது. அதாவது, நம் சிப்பாய்களில் ஒருஇரஜபுத்திரவாலிபனுக்கு சமீபத்தில்தான் விவாகமாகியிருக்கின்றது. பதிமூன்றே வயதான அம்மாது அழகுக்கே அணிகலமாய் ஆயிரத்தில் ஒருவளாய் விளங்குவதாய்க் கேள்விப்பட்டேன். ஆகையால் யான், அந்த இரஜபுத்திர சிப்பாயைப்பல வழிகளிலும் மயக்கி ஏமாற்றிப் பார்த்தும் யாதொரு பயனு மேற்படவில்லை. அதுவிஷயமாய் தங்களுக்கு ஏதேனும் உபாயம் தோன்றினால் தெரிவியுங்களெனக் கேட்டுக்கொண்டான். அதற்கு,

இளவரசன்:—இஃதொரு கஷ்டமானகாரியமல்லவே! கூடிய சீக்கிரத்தில் தக்ஷிணப் பிரதேசத்துக்கு ஒருபட்டாளம் செல்லப் போகின்றது. யான் சேனாதிபதிக்கு இரகசியமாகத் தெரிவித்து, அந்த இரஜபுத்திர வாலிபனையும் சேனையில் ஒரு சிப்பாயாகச் சேர்த்து அனுப்பிவிட ஏற்பாடு செய்கிறேன். அதன்பின் நம் வேட்டைக்கு மைதானம் விசாலமாகி விடும் எனக் கூறினார்.

நாதிர்:—அரசே! தங்கள் யோசனையை யான் பெரிதும் போற்றுகின்றேன். இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டு விடுமாயின் அதன்பின் அந்த சுந்தராங்கியை ஏமாற்றி நமது வலையில் சிக்கவைத்துவிடுவது ஒரு பெரிய காரியமல்ல.

2-வது அத்தியாயம்.

தக்ஷிணப் பிரதேசத்துக்குச் சென்ற சேனைப்படையுடன்சுல்த்தான் ஆலம்கீர் அவ்ரங்ஜேபவர்களும் சேர்ந்து செல்லவேண்டியிருந்ததால், அச்சேனைகளுடன் அங்கு சென்றார்கள். எனவே, அவர்கள் தக்ஷிணப்பிரதேசத்திலிருந்து வந்தகாலை, இளவரசர் பர்ருக்மிர்ஜா தம் சயன அறையில் அன்றிரவு கொல்லப்பட்டு போனாரென்றும், கொன்ற பாதகன் இன்னாரென்று தெரியவில்லை என்றும் திடுகூறான செய்தி ஒன்று கிடைத்தது.

ஔரங்ஜேப் ஆலம்கீர் அவர்கட்கு தன் அன்புக்குரிய பர்ருக் மிர்ஜாவின்மீது அளவற்ற விசுவாசமும் வாஞ்சையும் இருந்தமையால் அச் செய்தியானது அவரது உள்ளத்தைக் குழப்பத்திலாக்கிவிட்டது. அச்சமயத்தில் நல்லதிர்ஷ்ட வசமாக தக்ஷிணப்பிரதேச யுத்தமும் முடிவடைந்து போயிருந்தமையால் ஆலம்கீர் தலைநகராகிய ஆக்ராவுக்குப் புறப்படுவதற்கு ஆயுத்தப்பட்டுக்கொண்டுதா

கிருந்தார். அச்சமயத்தில் இந்த துக்ககரமான செய்தி கிடைக்கவே, எஞ்சியுள்ள காரியாதிகளை தமது கீழதிகாரிகள் வசம் ஒப்புவித்துவிட்டு சுல்த்தான் ஔரங்ஜேப் அதிகத் துரிதமாய் ஆக்ராவுக்குப் புறப்பட்டு அதி சீக்கிரமாக அங்கு வந்து சேர்ந்துவிட்டார்.

இளவரசரைக் கொன்று கொலைச்செய்த குற்றவாளி அகப்படவில்லை யென்பதும், பிரயாசைப்பட்டுத் தேடியும் தகவல் யாதொன்றும் கிடைக்கவில்லை யென்பதும் சுல்த்தான் அவர்களுடைய வியப்பை அதிகரிக்கச் செய்துவிட்டது. ஏனெனின், இளவரசரின் சயன அறையானது ஒரன்னியனும் பிரவேசிக்க முடியாத பந்தோபஸ்தானஇடமாயிருந்தும், வேற்றுனல் கொலை செய்யப்பட்டதும், பிறகு அக்கொலைஞன் அகப்படாதொழிந்ததும் மகா வியப்பான விஷயங்களன்றோ? எனவே, ஔரங்ஜேப் தம் காவல்காரர், வேலையாளர் ஆகியோர் அக்காரியத்துக்கு உடந்தையாகயிருந்திருக்கலாமென்று சந்தேகித்து அவர்களையடித்து பயமுறுத்திப் பார்த்தார்; கட்டிப்போட்டு துன்புறுத்திப் பார்த்தார்; சிறையிலடைத்து விசாரித்துப் பார்த்தார். எனினும் கொலை செய்த நபர் சம்பந்தமாக எத்தகைய தகவலுங் கிடைக்கவேயில்லை.

இளவரசன் பர்ருக் மிர்ஜா இறந்துபோனதானது ஆலம்கீர் ஔரங்ஜேபுக்குத் தன் சொந்தப் புத்திரன் இறந்துபோனதைப் பார்க்கினும் அதிக விசனத்தை யளித்துவந்தது. பர்ருக் மிர்ஜா ஆலம்கீர் பாதுஷாவின் சொந்தப் புதல்வனன்று, அவரது நெருங்கிய பந்துக்களிலுதித்த ஒரு சிறுவன். இச்சிறுவனது பாலியப் பிராயத்திலேயே அவனது பெற்றோர் இறந்துபோய் விட்டதால், அவ்வனாதையை ஔரங்ஜேப் எடுத்து வளர்த்துவந்து தன்சொந்த புத்திரனைப்போல் பாவித்து சர்வசுதந்திரமுமளித்து பக்ஷமாய் வளர்த்து சம்ரக்ஷித்து வந்தார்.

3-வது அத்தியாயம்

தக்ஷிணப் பிரதேசத்துக்குச் சென்றிருந்த பட்டாளங்கள் அங்கேயே தங்கியிருந்துகொண்டு தங்கள் வெற்றிக்குள்ளான பிரதேசத்தின் நிர்வாக சம்பந்தமான வியவகாரங்களில் ஈடுபட்டிருந்தது. எனவே, ஆங்கு நடைபெறும் ஒவ்வொரு காரியாதிகளைப் பற்றியுள்ள அறிக்கைகள் தயார்செய்யப்பட்டு ஒவ்வொரு வாரமும் ஆலம்கீர்பாதுஷாவுக்கு அனுப்பப்பட்டு வந்தது. ஆலம்கீர்பாதுஷாவோ, அவை யாவற்றையும் ஒழுங்காய்ப் படித்துப் பார்த்து அதற்காகுமானவற்றைச் செய்துகொண்டு வந்தார். ஆயினும் ஒருநாள் கிடைத்த அறிக்கையைப் படித்ததும்பாதுஷா திக்பிரமையடைந்து விட்டார். அவ்வறிக்கையில் எழுதப்பட்டிருந்ததாவது :—

“பதின்மூன்று அல்லது பதினான்கு வயதுள்ள ஓர் அழகிய இரஜபுத்திரமங்கை, நம் பட்டாளம் தங்கி இருக்குமிடத்தில் தட்டுத்தடுமாறி அலைந்துகொண்டிருந்தாள். அவள் மீது சந்தேகங்கொண்டு அவளைக் கைது செய்து அவளிடமிருந்து வாக்குமூலம் வாங்கியதில், அவளுடைய புருஷன் நம்பட்டாளத்தில் சிபாய் உத்தியோகம் புரிந்துவந்ததாயும், தக்ஷிணப்பிரதேச யுத்தத்தை முன்னிட்டு அனுப்பப்பட்ட சிபாய்களில் அவனும்அனுப்பப்பட்டதாயும், அவ்விருவர்க்கும் மிகச் சமீபகாலத்துக்கு முன்தான் விவாகம் நடைபெற்றதாயும், இராஜகட்டளையை முன்னிட்டுத் தன் புருஷன் தன்னைத்தனியே விட்டு வந்துவிட்டாமையால் தான்பல சங்கடத்துக்கு ஆளாகிப்பிறகு, ஆக்ராவைவிட்டுத் தன்புருஷனைத் தேடிக்கொண்டு வந்ததாயும் தெரியவந்தன. அப்பெண்பாலை சோதனை செய்து பார்த்ததில் அவளிடத்தில் விலையுயர்ந்த சில இரத்தினங்களும், வைரமிழைத்த மோதிரமொன்றுங் காணப்பெற்றன. அந்த மோதிரமானது கொலை செய்யப்பட்டுக் காலஞ்சென்ற (மர்ஹூம்) இளவரசருடையதென்று தெரியவருகிறது ஆகவே அப்பெண்மணியை கடுமையான பாதுகாப்பில் வைத்திருப்பதாயும், அவளது கணவன் மட்டும் சந்தித்துப்பேசுவதற்கு அனுமதித்துள்ளோமென்றும், இனி இதுவிஷயத்தில் தங்களின் மேலான கட்டளைப்படி நடக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்” என்பதாகும்.

இதனைப் படித்துப்பார்த்தபின் சுல்த்தான் ஆலம்கீர் பலவாறான சிந்தனைகளில் தம்முழு கவனத்தையும் செலுத்தி அதிலேயே வெகுநேரம் ஆழ்ந்திருந்தார், பிறகு ஒருவாறான முடிவிற்குவந்து, ‘சந்தேகத்தின் மீது சிறைசெய்து வைக்கப்பட்டிருக்கும் அந்தப் பெண்மணியை அவளது கணவன் சகிதம் தன் தர்பாருக்கு அனுப்பிவைக்கும்படிக்

குள்ள ஓர் உத்திரவை, தக்ஷிணத்திலுள்ள தம் அதிகாரிக்குத் தெரியப்படுத்தினர். அதன்படியே அவ்விரஜபுத்திரப் பெண்ணும் அவளது கணவனும் ஆலம்கிர் பாதுஷாவின் முன்னிலையில் கொணர்ந்து நிறுத்தப்பட்டனர்.

ஆலம்கிர் பாதுஷா :—அப்பெண்ணையும் புருஷனையும்நோக்கி, "இப்போது யான்உங்களைக் கைதியாகக் கருதவில்லை. இனி நீங்கள் பாது காப்பிலும் வைக்கப்படமாட்டீர்கள். நீங்கள்எவ்விதக் குற்றமும் புரிந்ததற்காக இங்கு கொண்டுவந்து நிப்பாட்ட படவில்லை. ஆனால் 'ஏ நங்காய்! நீ ஓர் எளிய பெண் பாலாயிருந்தும் ஆக்ராவிலிருந்து வெகு தூர தேசமாகிய தக்ஷிணத்துக்குப் போய்ச் சேர்ந்த உமது சாமர்த்தியம் போற்றத்தக்கனவேயாகும். ஆயினும் உம்மீது சில சந்தேகங்களுக்கு இடமுண்டா யிருக்கின்றது. நீயுன் கணவன்மீதுகொண்டுள்ள அன்பினல் இவ்வாருன கஷ்டங்களை அனுபவித்தனையா? அல்லது வேறெதுவும்அசம்பாவிதமான காரணங்களேற்பட்டு விட்டதா? பரிதாபகரமாகக் கொலைசெய்யப்பட்டுப்போன மர்ஹூம் இளவரசன் பர்ருக் மிர்ஸாவுடைய மோதிரமும் மற்றுஞ்சில நவரத்தினங்களும் உன்னிடம் காணக்கிடைத்தனவே அவை உனக்கு எவ்வாறு கிடைத்தது? ஓர் சாதாரண ஏழை சிப்பாயின் எளிய மனைவியாகிய உம்மிடம் இவ்வரும்பெரும் பொருட்கள் இருப்பது வியப்பாகுமன்றே? ஆதலின் இச்சம்பவங்கள் உம்மீது சமுசயத்தை யுண்டாக்கி விட்டன. ஆகையால் இளவரசனைக் கொன்ற நபரின் சம்பந்தம் உம்முடைய யாத்திரையின்மீது ஏற்பட்டிருக்க வேண்டும். அல்லது அக்காரியத்தில் நீ சம்பந்தப்பட்டவளாகயிருக்கவேண்டும். ஆகவே இதுசம்பந்தமான விஷயங்களை நீ உள்ளது உள்ளபடியே யாதொன்றையும் ஒளிக்காமல் ஸ்பஷ்டமாய் கூறிவிடுவாயாகில், நியாய தர்மப்படி யான் இந்த விவகாரத்தை விசாரித்துத் தீர்ப்பளிப்பதோடு, உன் விஷயத்திலும் நியாயமாகவும் காருண்யமாகவும் நடந்துகொள்ளுவேன்" என்று கூறினர்.

ஆலம்கிர் ஔரங்ஜேப் பாதுஷாவுடைய ஆக்ஞைக்கு பயந்து நடுங்கிக்கொண்டிருந்த இரஜ புத்திர சிபாயானவன், சுல்தான் கூறிய வார்த்தைகளைக்கேட்டு தைரியமடைந்தவனாய் கூறலானான்.

சிப்பாய் :—காருண்ய வள்ளலே! நன்றி மறவா ஏழை வேலைக்காரனாகிய யான் தக்ஷிணப் பிரதேசத்துக்கு அனுப்பப்பட்டேனென்பதும், இளவரசர் கொல்லப்பட்ட நேரத்திலும் யான் அதே இடத்தில்தான் யிருந்துவந்தேனென்பதும் தாங்களறிந்த விஷயமாகும். அங்ஙனமிருக்க இளவரசர் கொல்லப்பட்டுப்போன விஷயத்தில் யானும் சம்பந்தப்பட்டிருக்கக் கூடும் என்று என்மீது சமுசயங் கொள்வது இடம் பாடில்லாத விஷயமாகும். ஆனால் இவ்வடியேனின் மனைவியோவெனின், அவள் மிகவும் சிறு பிராயமுடைய இளநங்கை. அவள் உலகவியலின் நன்மை தீமைகளைப் பகுத்தறிய ஆற்றலில்லாதவள். அங்ஙனமிருக்க, இவள் ஓர் இளவரசரைக்கொல்லும் விஷயத்தில் துணிவு கொள்வதோ, அன்றி துணிந்தவர்களோடு துணையாயிருப்பதோ எவ்வாற்றும் முடியாத காரியமாகும்.

மேலும் விலையுயர்ந்த மோதிரம் என்மனைவியினிடம் இருக்கிறதென்பது உண்மையே. ஆனால் இது காலஞ்சென்ற இளவரசருடையதுதானென்பதற்கு எவ்வித அத்தாக்ஷியுமில்லை. இதுபோலொற்ற வேறொரு மோதிரத்தை ஜனங்கள் இளவரசரிடம் பார்த்திருக்கக்கூடும். உலகின்கண் எத்தனையோ வஸ்துக்கள் ஒன்றுக்கொன்று நிகரானதாகவும் ஒப்பானதாகவு மிருக்கின்றன. ஆகையால் அம்மோதிரம் இளவரசருடையதுதானெனக் கூறுவது தவறுகவு மிருக்கலாம். தவிர, என் மனைவியினிடத்தில் காணப்பட்ட விலையுயர்ந்த இரத்தினங்கள் புதிதாய் எங்கட்குக் கிடைத்தவைகளல்ல. எங்கள் மூதாதைகள் வழியாய் அவர்கள் வாழ்ந்திருந்த காலத்திலிருந்து குடும்ப சொத்தாயிருந்து வருகின்றது. எம் மூதாதைகளும் நன்றிமிக்க உத்தம ஊழியர்களா யிருந்துள்ளார். அன்னோர்கள் அநேக யுத்தங்களில் கலந்து கொண்டுள்ளார்கள். அங்ஙனம் புரிந்த யுத்தங்களில் எதிரிகளைக் கொன்றுவிட்டு அவர்களிடமிருந்து அவைகள் கவரப் பட்டதாயு மிருக்கலாம்.

தவிர என்மனைவி ஆக்ராவைவிட்டு தக்ஷிணப்பிரதேசத்துக்குஎன்னைத்தேடிக்கொண்டு ஓடிவந்து விட்ட விஷயம் வியப்புக்குறியதல்ல.

இதுவிஷயமான உண்மை வரலாற்றை அவளிடமிருந்து விசாரித்தறிய எனக்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. அவள் பிரயாணத்தை முடித்துக்கொண்டு என்னை சந்திப்பதற்கு முன்பாகவே பாதுகாப்பில் வைக்கப்பட்டுவிட்டாள். நாங்கள் இருவரும் சந்தித்துப்பேசுவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள நேரமும் மிகச் சொற்பமானதேயாகும். ஆகையால் தாங்கள் கூறியவைகளுக்கு என் மனதில் தோன்றியவைகளைக்கொண்டு பதில் கூறிவிட்டேன். ஆனால் தாங்கள் என் மனைவியையும் விசாரித்துப்பாருங்கள்" என்று கூறினான். அதன் பின்,

ஆலம்கீர் ஔரங்ஜேப்:—அந்த இளமங்கையை நோக்கி "நங்காய்! குடிஜனங்கள் இராஜாவுக்குப் புத்திரர்கள் போலாவர். ஆகையால் நீயும் என் புத்திரியைப் போலாவாய். ஆதலின் யான் உன்னை அன்பாகவும் நியாயமாகவும் கவனிப்பேன். நீ ஆக்ராவை விட்டு தக்ஷிணப் பிரதேசத்துக்கு ஓடிவிட்டதற்கு ஏதேனும் சரியானகாரண மிருக்குமாயின் அதனைத் தெரிவிப்பாயாக! ஒருக்கால் ஏதேனும் உம்மால் தவறுகள் ஏற்பட்டிருக்குமாயினும் அதனைக்கொண்டு உன்னைத் தண்டிக்கவேண்டுமென்று யான் உன்னை விசாரிக்கவில்லை. இளவரசன் கொல்லப்பட்டுப்போன மர்மத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றே விசாரிக்கின்றேன்" என்று கூறினர்.

மங்கை:—ஔரங்ஜேப் பாதுஷாவின்முன் தைரியமாய் நின்று என் பிதாவைப்போன்ற நற்குணம் வாய்ந்த அரசரே! யான் கூறுவதை கடைசிவரை நிம்மதியோடுகேளுங்கள். யான் ஓர் துரதிருஷ்டசாலியான பெண். எவ்விதமான தண்டனையை அனுபவிப்பதற்கும் யான்தயாராகவே இருக்கின்றேன். எனினும் யான் தங்களைப் பிதாவைப்போல் பாவிப்பதாலும், தாங்கள் அன்பும் மன்னிக்குந்தன்மையும் மிகுந்த பாதுஷாவாகையாலும் நிச்சயமாய் என்னை மன்னித்து உயிர்பிச்சை யளிப்பீர்களென்று ஆதரவு வைக்கின்றேன்.

இளவரசர் கொல்லப்பட்டதை யொட்டிய உண்மை இரகசியங்களை நன்கறிந்தவன் எல்லாம் வல்ல இரக்ஷகனாகிய ஆண்டவன் ஒருவனேயாகும். ஆயினும், உலகானுபவமாய் எனக்குத் தெரிந்த விஷயங்கள் மிகச்சொற்பமே. எனினும் யான் சொல்லும் விஷயங்களை என் நாதரோ, அன்றி காலஞ்சென்ற இளவரசரோ மறுத்துக்கூற முடியாது. எனவே யான் கூறுபவையாவும் மிகவும் உண்மை யானதேயாகும். அவ்விஷயங்கள் உண்மையா? அல்லவா? என்பதை ஆராயுந் தன்மையும், தீக்ஷண்ணிய புத்தியும், நியாய விசாரிப்பும், தெய்வ பக்தியும் நிறைய அமைந்து காணப்படும் தாங்கள் அவைகளை நன்கறிந்து கொள்வீர்கள். அதாவது:—

"காலஞ் சென்ற இளவரசரானவர் சகவாச தோஷத்தினால் சிற்றின்ப சாகரத்தில் மூழ்கியிருந்தார். அவரது இச்சைகளைத் தூண்டிவிட்டு கெட்டுழல்வதற்குரிய உதவிகளைச்செய்துகொண்டிருந்தவன் நாதிர் என்ற தோழனாவன். அவன் சுயநலத்தை முன்னிட்டே இளவரசருக்கு உதவிபுரிந்து தூண்டிவந்தான். உண்மையில் இளவரசர் தூய்மையான மனத்தினையுடைய உத்தமராக யிருந்தாராயினும் நாதிர்போன்ற கெட்ட தோழர்களின் சகவாசத்தினாலேயே இவரும் கெடுதியிலீடுபட்டு அதிலேயே உழலலானார். எனவே யான் அழகு சௌந்தரியத்தில் மிகச் சிறந்தவள் என்ற விஷயம் முதலில் என் குடும்பத்துக்குள் மட்டுந்தான் தெரிந்திருந்தது. பிறகு, யான் மணமுடிக்கப்பட்டு என் கணவன் வீட்டுக்கு வந்துவிடவே, என் அழகு சௌந்தரியப் பிரஸ்தாபம் எங்கள் வர்க்கத்தாருக்குத் தெரிந்துவிட்டது. பிறகு அவ்விஷயம் அன்னியர்களிடையேயும்பரவி, இறுதியாய் துஷ்டனாகிய நாதிருக்கும் தெரிந்து விட்டது போலும். பிறகு அவன் இளவரசரிடம் சென்று என்னைப்பற்றியும் என் அழகு சௌந்தரியத்தைப்பற்றியும் அளவுக்கதிகமாய்ப் புகழ்ந்துப்போற்றிக் கூறி, இளவரசருக்கு என்மீது காமாந்தகாரமான ஆசையைப் புகட்டிவிட்டான். ஆகையால் இளவரசர் என்னை சந்தித்து இன்பமனுபவிக்கலாமென்று முடிவு செய்துகொண்டார். இதற்கு என் புருஷர் இடையூறு யிருப்பாரெனக் கருதி அவரை ஏமாற்றி ஆசை மொழி கூறி ஏய்க்கப் பார்த்தனர். அதற்கவர் சிறிதும் இடங் கொடுப்பதா யில்லை. இவர்களின் கபடமான எண்ணம் முழுதும்என் புருஷருக்குத் தெரியாது போயிற்று. ஆகவே என் புருஷர் ஊரில் இருக்கும்போது என்னைச் சேர்வது

முடியாதென்றும், அப்படி பலாத்கார மாய்ச்சேர முயற்சித்தாலும் அவமான மடைய நேரிடுமெனவுங் கருதி, வேறு தந்திர மான உபாயம் புரியலானார்கள். அதன்படி இளவரசரும் நாதிர் என்பவனுடைய தீயா லோசனைக்குடன்பட்டு, என் புருஷனை தக்ஷி ணப்பிரதேசத்துக்குச் சென்ற பட்டாளத் தில் சேர்த்து அனுப்பிவிட்டார். உண்மை யில் என் கணவர் இந்தப் பட்டாளத்தின் தொகுதியில் சேர்ந்தவரல்ல. தாங்கள் பட் டாள சிப்பாய்களின் ஜாபிதாவை எடுத்துப் படித்துப் பார்ப்பீர்களானல் இந்த உண்மை யைத் தெரிந்துகொள்வீர்கள். இதுசம்பந்த மாயுள்ள மர்மமான ஏற்பாடுகள் எனக்கு முன்னமேயே தெரியாதிருந்தன. எனது கணவர் இராஜ ஆக்ஞையை மதித்து, கட் டளைப்படி பட்டாளத்தில் சேர்ந்து தக்ஷி ணப் பிரதேசத்துக்குச் சென்றுவிட்டார். பிறகு, இளவரசரின் துணைவனான நாதிர், தான் ஆக்ராவின் ஏதேச்சாதிகாரம் பெற்ற அதிபன் போல் நடிக்கமுற்பட்டு தலைகால் தெரியாது அதிக்கிரமங்கள் புரியத் தலைபட்டு விட்டான். எனவே ஒருநாள் மாலைநேரத்தில் அந்தநாதிர் என் அனுமதியின்றி வீட்டுக்குள் வந்து நுழைந்து எனக்குப் பலவிதமான ஆசை மொழிகளைக்கூறி, என்னை கெட்ட காரியத்துக்குக்காகச் சம்மதிக்கச் செய்து விடுவதற்கு என்னென்னமோ கூறிப்பார்த் தான். எனவே என்னைப் பெரிய சீமாட்டி யாக்கி விடுவதாயும், என் கணவரைத் தலை மை உத்தியோகத்தில் அமர்த்தி விடுவ தாகவும் ஆசை மொழிப்பகன்றான். எனி னும் யான் என் அபிப்பிராயத்தை வெளி யிடாமல், ஓர் உத்தம ஸ்திரீயின் கற்பைக் குலைப்பதின் கெடுதிகளைப்பற்றியும், கெட்ட நடத்தையின் தீங்குகளைப்பற்றியும் உபதே சஞ்செய்து அச்சமான மொழிகளைக்கொண்டு அவனதுமனதை நல்வழியில் திருப்பப்பார்த் தேன். எனினும் எமது முயற்சி அவன் விஷயத்தில் பலிக்கவில்லை. ஆயினும் அவன் என்னை மென்மேலும் வற்புறுத்தி "நீயே நல்ல தன்மையாய் வந்துவிட்டாலாயிற்று, இன்றேல் உன் வாயில் துணியைவைத்தடை த்து கைகால்களைக்கட்டி பலாத்காரமாய்த் தூக்கிக் கொண்டுபோய்விடுவோம்" என்று சபதம்கூறினன். எனவே யான் அச்சமடைந் தேனயினும் தந்திரஉபாயத்தால் ஜெயம்பெற வேண்டும் என்னும் எண்ணங் கொண்டு அவனுடன் சென்று இளவரசரைக் கண்டு பரி தாபகரமாய் நிலைமையை எடுத்துக்கூறி முறை யிட்டுக் கொண்டால், கிருபையுள்ள இள வரசர் மனந்திரும்பி என்னைத் திரும்ப அனுப்பிவிடுவாரென் றெண்ணி அந்த நாதி ருடன் இளவரசரிருக்குமிடத்துக்குப் புறப் பட்டுச்சென்றேன். அங்குபோய் இளவரச ரின் நிலைமையையும், குணப்போக்கையும், நடத்தையையும் யான்காணவே, என் நம்பிக் கையாவும் சோர்வடைந்தன. இளவரசர் குடி த்துப் போதையுற்று காமாந்தகாரமான சிந் தையினராய் என்னையே எதிர்நோக்கிக் கொண்டிருப்பதைத் தெரிந்தேன். எனவே குடித்துமதிகெட்டிருந்த இளவரசரின்காதில் முறைப்பாடும், கெஞ்சுதலும் ஏறவேயில்லை. இந் நிலைமையில் யானும் இளவரசரும் தனித்திருக்கும் காலையில், நாதிரானவன் கதவை மூடிக்கொண்டு வெளியே போய்விட் டான். அதனல் யான் பெரிதும் திகிலடை ந்து இளவரசரின் மதிகெட்டச் செயலைவிட் டும் தப்பிக்க யாது வழியிருக்கிறதென்று பார்த்தேன். அதுகாலை ஓர் உபாயமும் என் புத்திக்குப்புலனுகவில்லை. இறுதியில் உயிரை விட கற்பே மேல் எனமதித்து உயிர்த்தியா கம் புரிந்துகொள்வதே சரியென தீர்மானித் தேன். எனவே யான், துணிவுகொண்டு சட்டெனப்பாய்ந்து இளவரசருடைய வாளை எடுத்து இளவரசரையே குத்திக் கொன்று விட்டேன். பிறகு கிடைக்கப்போகும் மரண தண்டனையில் என் உயிரை தியாகம் செய்யத் தயாராயிருந்தேன். எனினும் யாரும் அது சமயம்வந்து என்னைக் கைதுசெய்துகொண்டு போகவில்லை. எனவே யான் அவ்வறையை விட்டும், பிறகு கோட்டையை விட்டும் வெளிப்பட்டு செல்லலானேன். இதற்கு முன் யான் நகரையோ, நகரின் வெளிப்புறங் களையோ சுற்றிப் பார்த்தது கிடையாது. எனவே இன்ன வழியாக இந்த இடத்துக் குப் போகிற தென்பதும் எனக்குத் தெரியாது. யான் இளவரசரைக் கொன்ற போது என் உயிரை தியாகஞ் செய்ய உத்தே சித்திருந்தே னுகையால், யான்தான் இளவர சரைக்கொன்ற பாதகி என்ற விஷயம் ருஜு வாக வேண்டியதற்குச் சாக்ஷியாக யிருக்கும் பொருட்டு இளவரசரின்கைமோதிரத்தையும், அவர்வசமிருந்த விலையுயர்ந்த சிலஇரத்தினங்

களையும் எடுத்துக்கொண்டு சென்றேன். அவைதான் இப்போது என்கைவசமிருக்கும் மோதிரமும் இரத்தினங்களுமாகும். அதன் பின் யான் என்மனம் போனபோக்கின் படியே பலநாட்கள்வரை நடந்து சென்று இறுதியாய் தக்ஷிணப்பிரதேசத்துக்கு திடு கூராகவே வந்து சேர்ந்தேன். அவ்விடத்தி லுள்ள சிப்பாய்கள் என்மேல் சந்தேகங் கொண்டு, என்னைச் சிறைப்படுத்தி, நியாய குணம் மிக்க பாதுஷாவாகிய தங்களது திருச் சமுகம் கொண்டுசேர்த்துவிட்டனர். இனி யான் பிழைப்பதும் அல்லது மரணதண்டனை யால் மரிப்பதும் தங்கள், நியாயமும் தர்மமு மான திர்ப்பைப் பொறுத்திருக்கின்றது. தாங்கள் வாக்களித்தபடி எனக்கு உயிர் பிச்சையளித்தாலுஞ்சரியே, தண்டனைவிதித் தாலுஞ் சரியே தங்கள் சித்தம்'' என்று அங் நங்கை கூறி முடித்தாள்.

நியாய தர்மசித்தரான ஆலம்கீர் ஔரங் ஜேப் பாதுஷா அவர்கள், அந்தப் புத்திசாலி யான பெண்மணியின் வாக்குமூலத்தைக் கேட்டு பேராச்சரியமும் வியப்பு மடைந்து சிந்தனையிலாழ்ந்து இரஜபுத்திரப் பெண்மணி யின் வீரதீரத்தை மெச்சினார்கள். அப்பெண் ணின் மொழிகளைக் கேட்டுக்கொண்டிருந்த சபையினரும் ஆச்சரிய மடைந்தார்கள். அதன்பின் ஆலம்கீர்பாதுஷா அந்தப்பெண் ணை நோக்கி, "நங்காய்! நீயுன்கற்பை மதித்து ஒருகொலை புரிந்துவிட்டாய். பெண்கள் தன்பதிவிரதாத்தன்மையைப்பாதுகாப்பதற் காக ஒன்றல்ல எழுபது கொலைபுரியினும் அது குற்றமாகா. ஆகையால் உன்னை யான் மன்னிப்பதோடு,உன்னைப்போற்றுகின்றேன் இனி நீ என் புத்திரியைப்போ லிருந்துவரு வாயாக! இனி உன்புருஷன் சுப்பாய் உத்தி யோகத்தைவிட்டு எதேச்சையாக இருந்து வரட்டும். உங்கட்குக் தக்க ஜாகீரும் அளிக் கின்றேன்'' எனத் தீர்ப்புக்கூறி ஆதரித்தார். அத்துடன் கொடியவனை நாதிருக்குத் தக்க தண்டனையும் விதித்தார்.

என்னே! சுல்தான் ஆலம்கீர் ஔரங்ஜேப் பாதுஷாவின் பெருந்தன்மையான நீதி? தன் இளவரசரைக்கொன்ற நபர் ஹிந்துவா யிருந்தும் குரோதமில்லாமல் நியாயத்தைக் கைக்கைகொண்டுமன்னிப்பளித்த ஔரங்ஜே பைத்தான் இக்கால ஹிந்துக்கள் மதக்குரோ தம் படைத்த ஔரங்ஜேப்என்று தூற்றுகின் றனர் இது காலத்தின் கோலமன்றோ?!

தா. இ. ஹாபிஸின் தடுமாற்றம்.

(M. V. அப்துல் ஜப்பார் சாஹிப் வரைவது)

சோதரீர்!

"தாருல் இஸ்லாம்'' பத்திரிகாசிரியர்கள், அன்னவர்களின் பத்திரிகைகளிலும், நூற்களிலும் ஹராமை ஹலாலென்றும், ஹலாலை ஹராமென்றும்,இதுபோன்றஇன்னு மநேக மார்க்க விரோதமான விஷயங்களைத் திரித்திப் புரட்டி எழுதி வருவதும், அத் தவ றான விஷயங்களைப் பொதுமக்கள் நம்பி வழி சறுகிப் போகாவண்ணம் பாதுகாப்பான் வேண்டி, நம் "ஸைபுல் இஸ்லாமும்'', "ஹிபாஜத்துல் இஸ்லாமும்'' அத் தவறு களை விளக்கிஅவற்றைக்கண்டித்து வருவதும் நேயர்கள் நன்கறிந்த விஷயங்களேயாகும். எனவே, தா. இ. ஆசிரியர்கள் அம் மறுப்புக் களுக்கு பதில் சமாதானங் கூற முடியாமல் மௌனஞ் சாதித்து வருதல் வெளிப்படை. "ஸைபுல் இஸ்லாம்'' "ஹிபாஜத்துல் இஸ் லாம்''ஆகியவைகளில், மார்க்க முரணான தவ றுகளைக் கண்டுபிடித்து மறுப்பெழுத இடங் கிடைக்காமற் போகவே, ஹாபிஸ் வெகு கால மாக மிக சிரமத்துடன் ஆராய்ச்சி செய்து முடிவில், "ஹிபாஜத்துல் இஸ்லாம்'' என் னும் பதத்தில் அரபி இலக்கண இலக்கிய வழுவேதோ இருப்பதாய் தவறாக நினைத்துக் கொண்டு பிரயோசனமற்றவும், உண்மை யற்றவுமான எழுத்து விதண்டாவாதத்தை 7-10-32 தா. இ. மூலம் கிளப்பினார். அவரது தவறான விதண்டாவாதத்திற்கு அக்டோபர் மாத ஹி. இ. மூலம் சுருக்கமாக பதில் கூறப் பட்டது. நான் கூறிய பதிலை செவ்வனே

விளங்கிக்கொள்ளச் சக்தியற்று எனது பதிலுக்கும் 11-11-32 தா. இ-த்தில் மேலும் குதர்க்கவாதம் புரியத் துடங்கியிருக்கின்றார். ஆனதுபற்றி ஓர் ஆரம்ப மாணவனுக்கு அறிவுறுத்தும்தோரணையில் சிலவிஷயங்களை விவரமாக அக்குருட்டு விளக்கமுடைய ஹாபிஸுக்கு வரைந்து காண்பிக்கவேண்டிய அவசியம் எனக்கேற்பட்டிருப்பதால், அதனை இதன் கீழ் வரைய விரும்புகின்றேன்.

இவ் விவாதத்திலிருந்து, பொதுமக்களுக்குப் பிரயோசனமற்ற வீண் விதண்டா வாதங்களைக்கிளப்பி பத்திரிகையை நிரப்பிவிடுவது ஸை. இ, ஹி. இ. இவைகளா? அன்றி தா. இ. ஆசிரியர்களா? என்பனவற்றை நேயர்கள் நன்குணர்ந்து கொள்வார்களாக.

தா. இ. ஹாபிஸின் விதண்டா வாதமும், அதற்குரிய பதிலும் வருமாறு:—

"ஹிபாஜத்" என்னும் பதம் ஹபில, எஹ்பலுவின் மஸ்தரென்று கூறப்படின், அது "பஇல" எப்அலு வென்னும் வஜனைச் சார்ந்ததாகும்; அந்தவஜனில் தேயைக்கொண்டுள்ள மஸ்தர் வருவதில்லை என்பதே அவரது விவாதத்தின் சாரமாகும்.

அதற்கு ஹி. இ. த்தின் அக்டோபர் மாத சஞ்சிகையில், நான் கூறிய பதிலில் "வலிய" என்னும் மாலிக்கு "விலாயத்" என்று மஸ்தர் வந்திருப்பதே போல், ஹபிலவுக்கும் ஹிபாலத் என்று மஸ்தர் வரலாமென்று ஒரு சில ஆதாரங்களுடன் அறிவுறுத்தப்பட்டது.

அதற்கவர், 4-11-32 தா. இ. த்தில் வலிய என்னும் மாலீ, ஹபில என்னும் மாலியின் வஜனுக்கு ஒற்றிருந்தாலும், இவ்விரண்டினுடைய முலாரிஉவின் வஜன்கள் என்ன? அதனைத்தெரியப்படுத்தினால் இன்னபாபைச் சேர்ந்ததென்று அறிந்துகொள்ள ஹேதுவாயிருக்குமென்னும் ஓர் வீண் பிரச்சினையைக் கிளப்பினார்.

மஸ்தருடைய விவாதம் நடந்துகொண்டிருக்குமிடத்து முலாரிஉவின் பிரச்சினையைக் கிளப்புவது அறிவற்றதனமாகும். எனவே ஹாபிஸ் என்பார், இவண் முலாரிஉவின் பிரச்சினையைக் கிளப்பியதிலிருந்து ஆசாமி ஸர்பு விஷயத்திலும் சுத்த "சைபர்" தான் என்பது விளங்கிப்போயிற்று. மஸ்தருடைய வஜன்களின் வித்தியாசம் மாலியைப் பொறுத்திருக்கிறதேயன்றி முலாரிஉ வைப் பொறுத்ததன்று. இதனால் ஹாபிஸ் சற்றேனும் தேர்ச்சியில்லாத யாரோ ஒரு மாணவரின் பேச்சைக் கேட்டுக் கொண்டு இவ்விவாதத்தில் தலையிட்டு விட்டாரென யூகிக்க வேண்டியிருக்கிறது.

இதுவன்றி, இது சம்பந்தமான விஷயங்கள் நன்கு துலக்கப்பட்டுள்ள கிரந்தங்களை இவர் பார்த்து அக்கிரந்தங்களில் ஒன்றிருக்க அவைகளுக்கு மாற்றமாய் தப்புந் தவறுமாய் ஒன்றை விளங்கிக்கொண்டு 11-11-32-ல் வெளிவந்துள்ள தா. இ. த்தில் பலவாறு உளறிக் கொட்டியிருக்கின்றார். அவைகளை கவனிக்கு முன், ஹபில வின் மஸ்தர்களைப் பற்றி இங்கு சற்று துலக்கவேண்டிய தவசியமெனக் கருதுகின்றேன். எனவே அதற்கு "ஹிப்லன்" என்றொரு மஸ்தரும், "ஹிபாலதன்" என்று மற்றொரு மஸ்தரும் அரபிகளின் பழக்க வழக்கத்திலிருந்து வருவதைத் தெரிந்து கொள்கின்றோம். "ஹபில"வானது பஇல என்னும் வஜனைச் சார்ந்ததாகும்; இந்த வஜன் முத்த அத்தியாக யிருக்குமாயின், அதற்குச்சாதாரணமாய் வரவேண்டிய மஸ்தர், "பஃலுன்" என்பதாகும். இது விபரம் அல்பியாவினுடைய "அப்னியத்துல் மஸாதிரி"ன் முந்திய கவியில் கூறப்பட்டிருக்கிறது. உதாஹரணமாக பஹிமவுக்கு பஹ்மன் வந்திருப்பதுபோல. ஆனால் ஹபிலவுக்கும், அலிமவுக்கும் மஸ்தர் ஹிப்லன், இல்மன் என்று அரபிகளின் பழக்க வழக்கத்திலிருந்து வருகிறது. இதற்கு "சமாஈ" மஸ்தரெனப்படும். கியாஸீ மஸ்தராக மாட்டாது. கியாஸீ என்பது சட்ட வரைக்குட் பட்டதாகும்; ஸமாஈ என்பது சட்டத்திற்கு மாற்றமாய் அரபிகளின் பழக்க வழக்கத்திலிருந்து வருவதாகும். எனவே அரபிகளின் பழக்க வழக்கங்களும் ஓர் சட்டமாகவே கருதப்படுகிறது. அவ்வாறு பழக்கத்திலுள்ள மஸ்தர்கள் அரபிகளின் பழக்க வழக்கத்தில் எவ்வாறு இருந்து வருகின்றனவோ, அவ்வாறேதான் கூறப்படல்வேண்டுமென அல்பியாவினுடைய அதே பாடத்தின் 8-வது கவியில் கூறப்பட்டிருக்கின்றது. எனவே, அரபிகளின் பழக்க வழக்கத்திற்கு மாற்றமாய் ஹபில, அலிம வுக்கு ஹப்லன், அல்மன் என்று சட்டப்படி மஸ்தர் வரவேண்டுமென்று ஹாபிஸ் கூறுவாராயின்,

அதனை இலக்கண இலக்கிய வழுவென்றே தீர்மானிக்கப்படும்.

அரபியர்கள் ஹபிலவுக்கு ஹிப்ஜன் என்னும் மஸ்தரை வழங்குவதுபோல ஹிபாஜத்தையும் மஸ்தராக வழக்கத்தில் உபயோகப்படுத்தி வருகின்றார்கள். ஆகவே மஷ்ஹூரான சொற்படிக்கு பஇல என்னும் வஜன் லாஜிமாகயிருந்து, யாதொரு தொழில் அல்லது அதிகாரம் இவைகள்மீது அறிவிக்கக் கூடியதாகயிருக்குமாயின், அதனுடைய கியாஸீ மஸ்தராகிறது, பிஆலத் என்னும் வஜனில் வருவதாகயிருக்கும் (தஸ்ரீஹ். வா. 2 பக்கம் 18-ல் பார்க்க!) எனவே இதுபொழுது நம் விவாதத்திலிருக்கும் "ஹபில" என்னும் பெஃல் லாஜிமா? முத்தஅத்தியா? என்னும் பிரச்சினை ஏற்படுகின்றது. முத்த அத்தியான பெஃல்களுக்குச் சில சந்தர்ப்பங்களில் லாஜிமான பெஃல்களின் அருத்தம் கொடுப்பது வழக்கத்திலிருந்து வருகிறது. உதாஹரணமாக, "கத்தம" (முற்படுத்தினான்) என்னும் பெஃலுக்கு தக்த்தம (முந்தினான்) என்னும் அர்த்தம் கொடுக்கப்படுவதுபோல, எனவே ஹபில (காப்பாற்றினான்) என்னும் பெஃலுக்கு தஹப்பல (தற்காப்புச் செய்தான்) என்று அர்த்தங் கொள்ளலாம். அது சமயம் அதனை முத்த அத்தியாக ஆக்க வேண்டுமாயின், 'அலா' போலொற்ற ஜர்ருடைய எழுத்துக்களைக் கொண்டு முத்த அத்தியாக ஆக்கிக் கொள்ளலாம். எனவே காவல் புரிவதென்பது ஒரு தொழிலானபடியால், இதன்படி ஹபிலவுக்கு ஹிபாலத் என்று மஸ்தர் வருவது சட்ட பூர்வமானதாகும்.

மேலும் ஹபிலவை முத்தஅத்தியாகக் கருதப்படினும் அதுபொழுதும் தோஷமொன்றுமில்லை. ஏனெனில் அல்லாமா ஷைகு முஹம்மதுல் கிள்ரீ அவர்கள், தங்கள் கிரந்தத்தின் 2-ம் வால்யம், 28-ம் பக்கத்தில், "மூன்றெழுத்துக்களுடையமுத்தஅத்தியான பெஃல்கள் அதன் நடு எழுத்து ஜபருடையதாக யிருந்தாலுஞ்சரி, ஜேர் உடையதாக யிருந்தாலுஞ் சரி ஏதேனுமோர் தொழிலின்மீது அறிவிக்கக் கூடியதாக யிருக்குமாயின், அதற்குச் சட்டப்படி வரவேண்டிய மஸ்தராகிறது. "பிஆலத்" என்னும் வஜனாகும்" எனவரைந்திருக்கின்றார்கள். அல்லாமா உஷ்மூனி அவர்கள், தாங்கள் அல்பியாவுக்கு எழுதிய ஷரஹ் என்னும் விரித்துரையில் "யாதொரு தொழில் அல்லது அதிகாரத்தின்மீது அறிவிக்கக்கூடிய பெஃல்களில் நடு எழுத்து ஜபர் உடையதா யிருக்குமாயின், அவைகளில் பிஆலத் என்னும் வஜனில் மஸ்தர் வருவது பிரபல்யமாக யிருக்கின்றது; அதன் நடுஎழுத்து ஜேர் உடையதாகயிருக்குமாயின், அவைகளில் பிஆலத் என்னும் வஜனில் மஸ்தர் வருவது அபூர்வமாகயிருக்கின்றது" என்று வரைந்திருக்கின்றார்கள். அல்லாமா உஷ்மூனி, பிஆலத் என்னும் வஜன் மஸ்தராக வரலாமென்று கூறியுள்ள "பெஃல்கள்" லாஜிமாகயிருப்பினும் முத்த அத்தியாக யிருப்பினும் அதன் மஸ்தர் பிஆலத் என்னும் வஜனில் வரலாமென்று இதற்குமேல் வியாக்கியானஞ்செய்யும் அல்லாமா ஸப்பான் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். மேலும் அதே இடத்தில் முத்தஅத்தியான பெஃல்களின் சட்டதிட்டங்களைக் கூறுமிடத்தும், மூன்று எழுத்துக்களையுடைய முத்தஅத்தியான பெஃல்களும் தொழில்மீது அறிவிக்கக்கூடியதாக யிருக்குமாயின், அதன் மஸ்தர், பிஆலத் என்னும் வஜனில் வரலாமென்று வரைந்திருக்கின்றார்கள். (சப்பான் 2-ம் வால்யம் ப. 257, 258 பார்க்க) இச்சிறந்த ஆதாரங்களைக்கொண்டு 'ஹபில' முத்தஅத்தியாக யிருப்பினும் அதற்கு சட்டப் பூர்வப்படி "ஹிபாஜத்" என்பது மஸ்தராக வரலாமென்று தெரிய வருகிறது.

விஷயமிவ்வாறிருக்க, ஹாபிஸ் என்பார், 11—11—32-ந் தேதியுள்ள தா. இ-ல் ஹபிஜ என்னும் மாலிக்கு ஹிபாஜத் என்னும்மஸ்தர் வரக்கூடாதென்று கூற முற்பட்டு என்னென்னவோ வாயில் வந்தவைகளை எல்லாம் உளறிக் கொட்டியிருக்கின்றார். எனவே அவர் இது சம்பந்தமாய் எழுதி யிருப்பதாவது:—

......அல்லாமா நஹ்வீ உஷ்முனி என்பாரும் பிஆலத் என்னும் வஜனிலும் பயில என்னும் லாஜிமான மாலிக்கு மஸ்தர்வரலாமென்று சொல்லி விலாயத் என்னும் பதத்தையே தான் அவரும் உவமையாகக் காட்டியிருக்கின்றார். ஆனால் இந்த வியாக்கியானத்துக்குமேல் வியாக்கியானஞ் செய்யும் சப்பான் இதே பக்கத்தில், இந்த லாஜிமான பெஃலுக்காக விலாயத்தென்னும் பதத்தை உவமையாய்க் காட்டி யிருப்பதை நாம் ஒப்

புக்கொள்ளமுடியாது. என்னனின், விலாயத் என்பது லாஜிமைச் சேர்ந்ததல்ல என்று சண்டமாருதத்துடன் அறைந்து நிற்கின்றது. எனவே அல்லாமா உஷ்மூனி தமக்குரிய “தவ்லீஹ்” என்னும் நஹ்வு புஸ்தகத்தில் பஇல என்னும் லாஜிமான பெஃலுக்கு பிஆலத் என்னும் மஸ்தர் வரலாமென்று சொல்வது உண்மையே. ஆனால்அவர்காட்டியிருக்கும் உதாஹரணந்தான் சரியாய் இல்லை. என்று அல்லாமா சாஹிபுஸ்ஸப்பான் கூறுகின்றார்.”

என வரைந்திருக்கின்றார்.

இவ்விடத்தில் குருட்டு ஸர்பீ எத்தனை தவறிழைத்திருக்கிறாரென்பதை நேயர்கள் கவனித்து அவர் ஸர்புடைய இல்மில் எவ்வளவு தூரம் தடுமாற்ற மடைந்திருக்கிறாரென்பதை நன்குணர்ந்து கொள்வார்களாக!

முதலாவதாக அல்லாமா உஷ்மூனி அவர்கள், பிஆலத் என்னும் வஜனுக்கு விலாயத்தைஉவமையாகக் கூறியிருப்பதாக ஹாபிஸ் வரைகின்றார். அல்லாமா அவர்கள் அவ்வாறு கூறவேயில்லை.

ஆனால் அவர்கள் அக் கிரந்தத்தில் “தொழில் அல்லது அதிகாரத்தின்மீது அறிவிக்கக்கூடிய லாஜிமான பெஃலுக்கு மஸ்தரானது, “வலிய அலைஹிம்விலாயதன்” என்பது போல பிஆலத் என்னும் வஜனில்வரும்” என தவ்லீஹில் வருவதாகக்கூறி, அதன்மீது இவ்வாறு வருவது நடு எழுத்து ஜபர்உடையதில் தான் மிகுதமென்றும், “வலிய அலைஹிம் விலாயதன்”போல் (நடுஎழுத்து ஜேர் உடையதில்) வருவது (நாதிர்) சுருக்கமென்றும் ஒரு குறிப்பெழுதியிருக்கின்றார்கள். இதனை ஹாபிஸ் நன்கு விளங்கிக்கொள்ளாது அல்லாமா அவர்களே விலாயத் என்னும் பதத்தை உவமையாகக் காட்டியிருப்பது போல் நினைத்துக் கொண்டு அவர்கள்மீது குதர்க்கவாதஞ்செய்ய முற்பட்டிருப்பது ஹாபிஹின் குருட்டு வாதமன்றோ?

(2) சப்பானில் விலாயத் என்பது லாஜிமைச் சேர்ந்ததல்லவென்று சண்டமாருதத்துடன் அறைந்து நிற்பதாக ஹாபிஸ் வரைகின்றார். இதுவும் ஹாபிசின் பெருந்தவறாகும். ஏனெனில் தவ்லீஹ்வுடையவர் லாஜிமுக்காகக் கூறியுள்ள உவமையைச் சரிப்படுத்துவதற்காக “அலா”வைக்கொண்டு முத்தஅத்தியாக ஆக்கி “வலிய அலைஹிம் விலாயதன்” என்று வரைந்திருப்பதாக சாஹிபுஸ்ஸப்பான் கூறியிருக்க, உஷ்மூனியின் பேரில் அறைந்திருப்பதாகக்கூறுவது மிகவும்தவறேயாகும். வலிய லாஜிமாகயிருப்பதால் தான் அலாவைக்கொண்டு முத்தஅத்தியாக ஆக்கியிருக்கின்றார்கள் என்றும், ஆனால்வலிய லாஜிமாகவும் முத்த அத்தியாகவும் வழக்கத்திலிருந்து வருகிறதென்றும் சாஹிபுஸ்ஸப்பான் கூறியிருக்கின்றார்களேயன்றி ஹாபிஸ் கூறுவதுபோன்று அது லாஜிமல்லவென்று அவர்கள் கூறவில்லை.

மேலும் சாஹிபுஸ்ஸப்பான் அவர்கள் இதேவிஷய விரித்துரையின் கடைசியில்,லாஜிமான பெஃலாயினுஞ்சரி, முத்தஅத்தியான பெஃலாயினுஞ்சரி அதன் மஸ்தர் பிஆலத் என்னும் வஜனில் வருமென்று கூறியிருக்கின்றார்கள். இந்நிலைமையில் அவர்கள் உஷ்மூனியைக் கண்டித்தெழுதியிருப்பதாகக் கூறுவது ஹாபிஸின் அறிவீனமேயாகும். மேலும் ஹாபிஸ் என்பார், தவ்லீஹ் என்பது அல்லாமா உஷ்மூனிக்குள்ள கிரந்தமென்று கூறுகின்றார். இவரின் அறியாமைதானென்னே! பிரபல்யமான இக்கிரந்தத்தின் ஆசியரையுங்கூட, இன்னாரென்று தெரிந்து கொள்ளாமல், ஸர்புடைய கலையில் தமக்கேதோ பெரிய ஆராய்ச்சி ஏற்பட்டிருப்பதாக முன்வந்து “ஸர்பு” செய்ய ஆரம்பித்திருப்பது விந்தையிலும் விந்தையே!

தவிர ஹாபிஸ் என்பார், 7-10-32-ல் வெளிவந்துள்ள தா. இ. வில் “பயில எப்அலு என்னும் வஜனுக்கு மூலமானமஸ்தரில் இந்த ‘த்’தை அறிவிக்கும்-தே-யைக் கொண்ட மஸ்தர் இல்லை என்பது திண்ணம்” என்று வரைந்திருக்கின்றார். ஆனால் 11-11-32-ல் வெளியான தா. இ. ல் “பயில என்னும் லாஜிமான மாலிக்கு பிஆலத் என்னும் வஜனில் மஸ்தர் வரலாமென்பதில் யாருக்கும் எவ்வித ஆக்ஷேபமுமில்லை” யென்று முரண்பட வரைகின்றார். ஹாபிஸின் தடுமாற்றத்தின் டிக்ரிதானென்னே! எனவே பயில என்னும் மாலிக்கு பிஆலத் என்னும் மஸ்தர் அறவே வராதெனப் பிதற்றிக்கொண்டிருந்த இவர், எம்மால் வெளியிடப்பட்ட வெடிகுண்டைக் கண்டு பயந்து இதுபொழுது அந்த வஜன் லாஜிமாகயிருந்தால் “பிஆலத் என்னும் வஜனில் மஸ்தர் வரலாமென்பதில் எவ்வித ஆக்ஷேபனையுமில்லை. ஆனால்“...............

முத்த அத்தியாக யிருக்குமாயின், பயில என்னும், மாலிக்கு பிஆலத் என்னும் வஜனில் மஸ்தர் வரலாமா? வரக்கூடாதா? வென்பதையும் தெரியப்படுத்தினல்..........." என்று கூறி ஆர்பாட்டஞ் செய்கின்றார். ஆனல் இதுபொழுது எம்மால் விடப்பட்டிருக்கும் "பாம்" களைக் கண்டஞ்சி முத்த அத்தியான பெஃல்களினும் பஇல என்னும் மாலிக்கு பிஆலத் என்னும் வஜனில் மஸ்தர் வரக்கூடு மென்பதை நன்குணர்ந்து விதண்டாவாதங்களை விட்டொழித்து "ஹிபாஜத்" என்பதும் ஹபிஜவின் சரியான "மஸ்தர்" தானென்பதை நன்குணர்ந்துகொண்டு இது விஷயத்தில் சந்தேகத்தில் ஆழ்ந்து கிடப்பதாக அவர் கூறும் மாணக்கர்கட்கும் தெரியப்படுத்தி விடுவாராக.

ஏகத்துவத் தூதரும், தா. இ. ஹாபிஸு—ம்.

(M. V. அப்துல் ஜப்பார் சாஹிப் வரைவது)

சோதரீர் !

ஸையித் சுலைமான் சாஹிப் நத்வீ அவர்களால் இயற்றப்பெற்றுள்ள "ரசூலவஹ்தத்" என்னும் நூலை மொழிபெயர்த்து வெளியிடப்பட்டதில், அதன் சிலபாகங்கள் விடப்பட்டிருந்ததன் காரணங்களை நம் ஹி. இ. யின் மூலம் வெளியிட்டிருந்தேனென்பது வாசகர்கள் நன்கறிந்தவையாகும். அக்காரணம் சரியானதல்லவென்று தா. இ. ஹாபிஸ்கூறி, ஒரு மறுப்பு வெளியிட்டிருக்கின்றார். அதில் ஸையித் சுலைமான் சாஹிப் நத்வீ அவர்கள், வீரத்துந்நபியில் "ஸ்ரீ கிருஷ்ண, ராமர், ஜர்தஷ்த், புத்தர் ஆகியோர்கள் நபியாகயிருக்கக்கூடுமென்பதில் சந்தேகமில்லை" என்று எழுதியிருப்பதால் ஹி. இ. மொழிபெயர்ப்பில் இப்பாகங்கள் விடுபட்டுப்போனது தவரென்று குறிப்பிட்டிருக்கின்றார். ஹாபிஸின் இக்கூற்று மிகமிகப் பொருத்தமற்றதேயாகும். எனவே நத்வீசாஹிப் அவர்கள், வீரத்துந்நபியில் மேலே கூறப்பட்டவர்களைக்குறிப்பாய் நபிகளென்று கூறுவது எல்லையைக்கடந்து செல்வதாகுமென்று கூறி, அதற்கு ஹதீதுஷரீப்களில் எவ்விதக் குறிப்புகளும் காணக்கிடைக்காததேகாரணமென்று வரைந்திருக்கின்றார்கள். இவ்வாக்கியங்களைஹாபிஸ் என்பார் திரித்து, நத்வீசாஹிப் இந்நாலுவர்களையும் நபிமார்களென்று கூறியிருப்பதாக வரைந்திருக்கின்றார். எனவே, ஸையித் சாஹிப் அவர்கள் இந்நால்வர்களையும் நபிமார்களெனக் கூறுவதற்கு ஹதீதுகளில் எவ்வகையான ஆதாரங்களும் காணப்படவில்லை என்றுகூறியிருக்கும்நிலைமையில், ஹாபிஸோவெனில், அன்னோர்களை நபிமார்களென்று ஸ்திரப்படுத்துவதற்கு முயற்சிக்க முற்பட்டிருக்கின்றார். ஆகவே அன்னோர்களை நபிகளென்று தக்க ஆதாரங்களைக் கொண்டு நிரூபிக்க முன்வந்து, இவர்கள் விஷயமாய் ஹதீது ஷரீப்களில் ஏதாவது கூறப்பட்டிருக்கின்றனவா என்பதை வெளிப் படுத்த இவர்தான் கடமைப்பட்டிருக்கின்றார்.

மேலும் நபிமார்களுக்குள்ள இலக்ஷணங்கள் இன்னின்னவைகளென்று அகாயித்கிதாப்களில் வறையப்பட்டிருப்பதால், அவர்களுக்குள்ள இலக்ஷணங்களிலேதேனும் இன்னேரில் காணப்படுகிறதா வென்பதை ஹாபிஸ் நிரூபிக்க முன்வர முடியுமா ?

தவிர இன்னேரின் பெயர்கள் ஹிந்துக்களுடைய புராணங்களன்றி வேறெதிலாகிலும் காணப்படவில்லை என்பது திண்ணம். ஆகவே அப்புராணங்களில் அன்னோர் விஷயமாய்க் குறிப்பிடப்பட்டிருப்பவைகளிலிருந்து அவர்கள் ஒருக்காலும் நபிகளாய் இருக்க முடியாதென நன்கு புலனகிறது. மேலும், மேலே குறிப்பிடப்பட்டவர்கள் குறிப்பாய் நபிகளாய் இருக்கின்றார்களென்று கொள்வதுதான் எல்லையைக் கடந்து செல்வதாகுமென்று நத்வீ சாஹிப் வரைந்திருக்கும் நிலையில், நத்வீ அவர்கள், இன்னேர்களை நபிகளென்று கூறிவிட்டதாகக் கூறுவது ஹாபிஸின் அறியாமை என்று தான் சொல்ல வேண்டியிருக்கின்றது.

ஆதலின் நம் நேயர்கள் இதனை நன்குணர்ந்து பார்ப்பார்களாயின் எவ்வகையிலும் அன்னோர்களை நபிகளெனக்கூற முடியாதென்பது நன்கு புலனாகும். எனவே ஹி. இ. மொழி பெயர்ப்பில் அவ்விஷயங்கள் போதிய காரணத்தோடுதான் விடுபட்டிருக்கிறதென்பதை நண்பர்கள் நன்கறிந்துகொள்வார்களாக.

"இவ்வாறு விடப்படின், திருக்குர்ஆனுடைய மொழிபெயர்ப்பிலும், மொழிபெயர்ப்பாளர்களுக்குப் பிரியமில்லாதவைகளைவிட்டு விடலாமென்றல்லவோ ஏற்படும். அப்படியாயின் அது விபரீதமாகவன்றோ வந்துவிடுந்துவிடு"மென்று ஹாபிஸ் வரைகின்றார். இவர் குர்ஆனை இதர நூல்களுக்கு ஒப்பிட்டெழுவது மிகத் தவறாகும். திருக்குர்ஆனில் கூறப்பட்டிருப்பவைகள் யாவையும் முஸ்லிம்கள் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். அதனை யாராலும் மறுக்கவோ, கூட்டவோ, குறைக்கவோ முடியாத காரியமாகும். இதரர்களால் எழுதப்படும் நூல்களின் தன்மை அவ்வாறன்று என்பதை ஹாபிஸ் தெரிந்துகொள்ளாது போனமைக்குத்தான் நாம் வருந்த வேண்டியிருக்கிறது. எனவே அவைகளில் குர்ஆன் ஹதீதுகளுக்கு முரணாகக் காணப்படும் விஷயங்களை விட்டுவிட வேண்டியது தான் முஸ்லிம்களின் கடமையாகும்.

இமாம்களால் கூறப்பட்டுள்ள விஷயங்களையுங்கூட சீர்தூக்கிப் பார்த்து, அது தலீலுக்கு விரோதமாக யிருக்குமாயின், அவைகளை எடுத்தாளக் கூடாதென்று ஹாபிஸ் என்பார் ஸயகூல்ஜுஸ்வின் தர்ஜுமாவென்று வரைந்திருக்கும் நூலின் முகவுரையில் எழுதியிருப்பதை இதுபொழுது அவரே மறந்துவிட்டார் போலும். எனவே இனியாகிலும் ஹாபிஸ் என்பார் இவ்வாறான வீண்விதண்டா வாதங்களில் தமது நேரத்தை செலவு செய்யாது உண்மையைக் கடைப்பிடித்தொழுகுவாராக.

ஷஃபான் மாதச் சிறப்பு.

"ஷஃபான் என்னுடைய மாதமாயிருக்கும். ரமலான் அல்லாஹ் தஆலாவின் மாதமாயிருக்கும்" என எம்பெருமானார் நபிய்யகரீம்(ஸல்)அவர்கள்கூறியிருக்கின்றார்கள். அதாவது ரமலான் ஷரீபிற்குப்பின் அதிக மேன்மை பொருந்திய சிறப்பினையுடைய மாதமாகிறது,ஷஃபானாகயிருக்கும்.எனவே, சாலிஹீன்கள் அல்லாஹ் தஆலாவுக்கு பயந்து நடப்போர்கள் இம்மாதத்தை நற்கிருபைகள் புரிவதற்கேற்ற மாதமென்று கருதுகின்றார்கள். எம்பெருமானார் (ஸல்)அவர்கள் ஷஃபான்மாதம் தங்களுடையதென்று கூறியிருக்கும் நிலைமையில் அது ஏன் சிறப்புப் பொருந்தியதாக யிருக்க முடியாது?

தவிர, "ஷஃபான் மாதமானது, ரஜப், ரமலானுக்கிடையிலுள்ள சிறப்புத்தங்கியதோர் மாதமாகும். இதனுடைய கீர்த்தி மகிமை முதலியவைகளை மானிடர்கள் அறியாதவர்களாகவே இருக்கின்றார்கள். இச்சிறப்பினையுடைய மாதத்தில் மானிடர்களது (அமல்) கிரியைகள் யாவும் அல்லாஹ் தஆலாவுக்கு எடுத்துக் காண்பிக்கப்படுகிறது. ஆதலின் நான் நோன்பாளியாகயிருக்கும் நிலைமையில் என்னுடைய அமல்கள் ஆண்டவனது சன்னிதானத்தில் எடுத்துக் காண்பிக்கப்படுவதை பிரியம் வைக்கிறேன்" என, எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

மேலே கூறப்பட்டுள்ள இரு ஹதீதுகளைக் கொண்டு, சிறப்பினையுடைய இம்மாதத்தின் கீர்த்தி, மகிமை முதலிய யாவும் நன்கு அறியக்கிடக்கின்றது. ஆகவே இவ்வருஞ் சிறப்பினையுடைய மாதத்தில் நாம் என்னசெய்ய வேண்டும்? எம்பெருமானார் (ஸல்) என்ன செய்து கொண்டிருந்தார்கள்? என்பனவற்றை நன்கு ஆராய்ந்துப்பார்த்து அதைப் பின்பற்றி நடக்க முற்படுவோமாக.

இம்மாதத்தில் மானிடர்கள் புரியும் அமல்கள் யாவும் அல்லாஹ் தஆலாவின் சமுகத்தில் எடுத்துக் காண்பிக்கப்படுவதால், தாங்கள் நோம்பாளியாகயிருக்கும் நிலைமையில், தங்களின் அமல்கள் ஆண்டவனது சமுகம் எடுத்துக் காண்பிக்கப்பட வேண்டுமென்பதைக் கருதி, எம்பெருமானார் (ஸல்) அவர்கள் இம்மாதத்தின் அனேக நாட்கள் நோம்பு நோற்றிருப்பதுடன் சஹாபாக்க

ளிடமும் அவர்கள்து சக்திக்குத் தக்கவாறு நோன்பு நோற்கும்படியும் கூறியிருக்கின்றார்கள்.

நாம் செய்யவேண்டுவ தென்ன?

நாம் இம்மாதத்தில் நற்கருமங்களைப் புரிவதற்கு முற்பட்டு, அடியில் குறிப்பிடப்படுபவைகளைத் தக்க முறையில் செய்து வருவோமாக. (1) நம்மால் இயன்றவரையில் நோன்பு நோற்க வேண்டும். குறைந்த பக்ஷம் 15-ம் திகதியிலாகிலும் நோன்பு நோற்கவேண்டும். (2) கூடியவரையில் ஆண்டவனை வணங்குவதிலும், அவனுக்குத் தொண்டு புரிவதிலும் பராக்காயிருக்க வேண்டும். (3) நாம் செய்த பாவங்களை நினைத்து வருந்தி, அதற்கு மன்னிப்புத்தேடவேண்டும். (4) குறிப்பாய் 15-ம் இரவை ஆண்டவனுடைய வணக்கத்தில் போக்கி, நம் பாவங்களைப் பொருத்துக் கொள்ளும்படி கேழ்ப்பதுடன் அன்று பகலிலும் நோம்பு நோற்க வேண்டும்.

ஷஃபான் மாதத்தின் 15-ம் இரவில்நீங்கள் வணக்கம் புரியுங்கள்; பகலில் நோன்பு நோறுங்கள். அன்றிரவில், அல்லாஹ்தஆலா மானிடர்களை நோக்கி, "தன்பாவங்களை மன்னிக்கத் தேடும்படியாகியு அடியான் யார்? நான் அவனுடைய பாவங்களை மன்னித்து விடுகின்றேன். தன் (ரஜக்) இரணத்தைத் தேடுபவன் யார்? நான் அதனை விஸ்தீரணமாக்கி வைக்கின்றேன். கஷ்டத்திலகப்பட்டுக்கொண்டு அதனை நிவர்த்தியாக்கிவைக்கக் கேழ்ப்பவன் யார்? அவனுடைய கஷ்டத்தை நான் இலேசாக்கிவைத்து விடுகின்றேன். என அல்லாஹ் தஆலா அன்று அதிகாலைவரை கூறிக்கொண்டிருப்பதாக எம்பெருமானார் (ஸல்) அவர்கள் அருளியதாக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைத்தொட்டும் ரிவாயத்துச்செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, நாம்இம்மகத்தானமாதத்தில், அதிலும்குறிப்பாய் 15-ம் இரவில் நற்கருமங்கள் புரிந்தும், நம்மால் நடைபெற்றிருக்கும் துற்செயல்கள் மீது வருந்தி, அதனை மன்னிக்கும்படி ஆண்டவனிடம் கேட்டும், அன்று பகலில் நோன்பு நோற்றும் மகத்துவம் பொருந்திய அந்நாளின் பொருட்டால் ஜெயசீலர்களாகத் திகழ்வோமாக.

விஷயமிவ்வாறிருக்க, நம்மிலனேகர், சிறப்புத்தங்கிய அந்த இரவை வீண்விளையாட்டிலும், ஆட்டம்பாட்டத்திலும் போக்குகின்றனர். தவிர, அன்றிரவில் ஹல்வா போலொத்த இன்பமான வஸ்துக்களைச் செய்து சாப்பிடும் வழக்கமும் சிலரிடையே இருந்துவருகிறது. இதுபெரும் விந்தைக் குறியவிஷயமாகும். தவிர, அன்றிரவில் சில இடங்களில் பாணவேடிக்கைகளும் செய்யப்படுகிறது. இக்காரியங்களுக்கும்,சிறப்புத்தங்கிய அவ்விரவிற்கும் என்ன சம்மந்தமிருக்கிறதென்பதுதான் நமக்குப் புலனாகவில்லை? எனவே, மகத்துவம் பொருந்திய மேலான அவ்விரவில் யாது செய்யவேண்டுமென்று சன்மார்க்கம் கூறுகின்றதோ அவைகளை நன்குணராது தங்கள் மனம் நாடியதைச் செய்வதிலீடுபட்டு நப்ஸுக்கு ஆளாகி உட்கார்ந்திருக்கின்றனர். ஆகவே, நம் முஸ்லிம் சோதரர்கள், தூய்மை வாய்ந்த அவ்விரவில் விழித்து நபில் முதலிய வணக்கங்கள் புரிவதுடன் அன்று நோன்பு நோற்று தூய்மை யுள்ளவர்களாகத் திகழ்வார்களாக.

இன்னமுமா குதர்க்க வாதம்?

(அபுல்ஹஸன் மத்ராஸீ வரைவது)

நேயன்மீர்!

கிராப்வைக்கும் விஷயமாய் வினவப்பட்ட வினவுக்கு ஹாபிஸென்பார், 20-10-32-ல் வெளியான தா. இ. ல் "தலைக்குமேலேயிருக்கும் கேவலம் உரோமம் எப்படியுமிருக்கலாம். ஆனால் தலைக்குள்ளிருக்கும் வஸ்துவே நன்றாய் இருக்கவேண்டும்" எனவிடையளித்திருந்தார். அதற்கு, எம்பெருமானார் (ஸல்.)அவர்கள்,கிராப்வைப்பதைவிலக்கியிருக்கின்றார்கள்என்பதை தக்கஅத்தாக்ஷியுடன் எடுத்துக் காட்டி அவராலளிக்கப்பட்ட பத்வா தவறாகுமென ஹி.இ. அக்டோபர்மீ மாசிகையின்மூலம் நிரூபிக்கப்பட்டது. அதற்கு 18-11-32-ல் வெளியான தா. இ-ல், ஒரு

வாறு எம்பெருமானர் (ஸல்.) அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள ஹதீதை மறுத்தும், ஒருக்கால்அந்த ஹதீதுசரியானதென ஒப்புக் கொள்ளப்படினும், நபி பெருமானர் (ஸல்.) அவர்கள் காலத்தில் வைக்கப்பட்டிருந்த கிராப்பைப்போலதான் தற்காலத்தில் வைக் கப்பட்டிருக்கும் கிராப்பும் இருக்கிறதென்று எவரே அறிவிக்கமுடியும் என்றும், "எழுத் துடன் கருத்தும் வேண்டும்" என்னும் மகு டத்தின்கீழ் என்னென்னவோ உளரிக்கொட் டியிருக்கின்ருர். சன்மார்க்கத்தில் ஒருசிறிதள வேனும் ஆராய்ச்சியுள்ள எம்மனிதனும் இவ் வாறு உளரிக்கொட்ட முன்வரமாட்டான். ஆதலால் ஹாபிஸின், கூற்றுக்களை முஸ்லிம் சோதிரர்கள் பொருட்படுத்த மாட்டார்க ளென்பது திண்ணம். என்ருலும் அவர், கக்கி யிருக்கும் விஷங்களை நேயர்களுக்கு எடுத்த றிவிக்கவேண்டிய அவசியமேற்பட்டிருக்கின் றது.

தவிர, கிராப் வைக்கும் விஷயமாய் ஹாபிஸ் அளித்திருக்கும் விடையிலிருந்து, எமது சன் மார்க்கத்தில் உரோமங்கள் சம்பந்தமாய் எவ்வித நிபந்தனையுங் கிடையாதென யூகிக்க இடமேற்படுகிறது. மேலும் தாடி, மீசை போலொற்ற உரோமங்களைப் பொருத்தும் (ஷரீஅத்)சன்மார்க்கம் எவ்வித நிபந்தனையும் ஏற்படுத்தவில்லை எனவும் சந்தேகிக்கவேண்டி யிருக்கின்றது. இது மிகமிகத் தவருனதென் பது உலகப்பிரசித்தமாகும். இவ்வாறு மார்க்கமுரணன பத்வா அளித்ததுஒருபக்கல் கிடக்க, அதற்கு அவர் சமாதானங்கூற முற் படுமிடத்து, அவர் குளரிக்கொட்டியிருக்கும் விஷயங்கள் தான் மகாத்தவருகக் காணப் படுகின்றது. இதனைக்கண்டு முற்காலத்தில் நிகழ்வுற்ற சிறிய சம்பவமொன்று என் கவனத்துக்கு வருகின்றது, அதாவது:— அபூநவாஸ் என்னும் விகடர் ஒரு நாளன்று ஹாருன்ரஷீத் பாதுஷாவினிடம் வார்த்தை யாடிக்கொண்டிருக்குங்கால், பாதுஷாவான வர் அபூநவாஸை நோக்கி, ஓ அபூந வாஸே! நீர் ஒரு குற்றம் புரியவேண்டும்; அதற்கு நீர் சொல்லும் சமாதானம் அதை விடப் பெருங்குற்றமாக யிருக்கவேண்டும். இம்மாதிரி நீர் ஓர் விகடம் புரியவேண்டுமெ னக் கூறினர். அதனை அபூநவாஸ் ஏற்று சில காலம்வரை அதைப்பற்றி யாதொரு பிரஸ் தாபமும் செய்யாதிருந்து விட்டு, ஒரு நாளன்று பாதுஷாவிடம் பேசிக்கொண்டி ருக்குங்கால், பாதுஷாவானவர் (பைத்துல் கலா) கக்கூசுக்குப் போவதற்குப் புறப்பட்ட பொழுது, அபூநவாஸும் அவருடன் பேசிக் கொண்டு கூடவே சென்ருர். ஏதோ பேசிக் கொண்டு வருகிருரென்று பாதுஷாவும் செவி மடுத்துக்கொண்டு கக்கூசுக்குள் புகுந்தார். அபூநவாஸும் கூடவே செல்ல ஆயுத்தமா ஞர். இது பாதுஷாவுக்குப் பெரிய ஆச்சரி யத்தைக் கொடுத்தது. ஈதென்ன இப்படிச் செய்கின்றீர்? என வினவினர். அதற்கு அபூ நவாஸ், ஆகா! பேகம் சாஹிபாவென்றல்ல வோ நினைத்துக்கொண்டு தங்களுடன் வந்து விட்டேன். என்னை மன்னிக்க வேண்டு மென்று சமாதானங் கூறினர். இதைக் கேட்டு பாதுஷாவுக்குப் பெரும் ஆத்திர மும், ஆச்சரியமுமேற்பட்டுவிட்டது. அத ஞல் பாதுஷாவுக்குக் கோபாக்கினி சுடர்விட் டெழும்புவதைக் கண்ட அபூ நவாஸ் என் பார், அமீர் அவர்களை நோக்கி, எஜமான வர்களே! மலபாதையை முடித்துக்கொண்டு வாருங்கள். நான் கூறியவைக்குச் சமாதானஞ் சொல்கின்றேன் என மன்ருடிக்கொண்டார். எனவே அமீர் அவர்கள் மல பாதையை முடித்துக்கொண்டு அவசரமாக வந்தார்கள். அதுபொழுது அபூநவாஸ் அமீரை நோக்கி, எஜமான் அவர்களே! கோபம் வேண்டாம். சிலகாலத்திற்குமுன் நமக்கிடையில் ஓர் சம்பிரதாய மேற்பட்டிருந்த தல்லவா? அதனை உத்தேசித்துத்தான் நான் அவ்வாறு செய்தேன். குற்றத்திற்குக் கூறும் காரணம் குற்றத்தைவிடப் பெரிதாக யிருக்கவேண்டு மென்று தாங்கள் சொல்லியிருந்தீர்கள். ஆதலால், முதலாவதாகத் தங்களுடன் கக்கூ சுக்குள் புக எத்தனித்தது தவருகும். பிறகு அதற்குச் சமாதானங் கூறியது அதை விடப் பெரிய குற்றமுடையதாகத் தங்களுக் குத் தோன்றிற்று. இது நமக்கிடையிலேற் பட்டிருந்த சம்பிரதாயத்தை உத்தேசித்து கூறப்பட்டதாகும் எனத் தெரிவித்துக் கொண்டார். இதனைக் கேட்டவுடன் பாது ஷாவுக்கு அளவற்ற மகிழ்ச்சி ஏற்பட்டுவிட் டது. இதே போன்று ஹாபிஸ் என்பார், தப்பான பத்வாக்களை விடுத்துவிட்டு அதற்கு அவர்கூறும் காரணங்கள் அதைவிடத் தப் பானதாகயிருக்கின்றது. எனவே விடக பத் வாக்கள் விடுக்கும் விஷயத்தில் ஹாபிஸை

அபூந்வாசின் சகோதிரரென்றே கருதவேண்டும்.

ஆகவே அதுசம்பந்தமாய் ஹாபிஸ் கூறியிருக்கும் கூற்றுக்களிற் சிலவற்றை நம் நேயர்களின் பார்வைக்கு அப்படியே தருகின்றேன். அதாவது:—

> உதாஹரணமாக நாம் இங்கு ஒருவிஷயத்தை கவனிக்கலாம். தலையில் கிராப் வைப்பது கூடாது என்று நாயகம் (ஸல்) அவர்கள் விலக்கி யிருப்பதாய் ஒரு மாசிகை கூறுகின்றது. இவ்விலக்கல், உண்மையில் நடைபெற்றதா? இல்லையா? அப்படியிருந்தாயின் அது தற்காலத்தில் காணப்படும் கிராப்பைபோலவா யிருந்தது? ஆம் என்றால், 1300 வருடங்களுக்கு முன்னிருந்தவர்கள் வைத்துக்கொண்டிருந்து நாயகம்(ஸல்.) அவர்களால் விலக்கப்பட்ட கிராப்பையும், இதுசமயம் நம் கண்முன்னே காணப்படும் கிராப்பையும் பார்த்து இவ்விரண்டும் ஒன்று தான் என்று சொல்லுபவர் யார்? இத்தனை விதமான மடுக்களையும், நதிகளையும், ஏரிகளையும் கடந்து சென்றதன்பின் வள்ளல் (ஸல்.) அவர்கள் விலக்கியிருப்பது தற்காலத்தில் காணப்படும் கிராப்பே என்று வைத்துக் கொள்வோம். இங்ஙனம், கிராப் வைப்பது விலக்காயின் இது மக்றூஹ் அல்லது ஹறாம் அல்லது றித்தத்து இவைகளுள் எதைச் சேர்ந்ததாக யிருக்கின்றது என்பதை...... தெரியப்படுத்துவார்களா? என்பதே

கிராப் விஷயமாய் ஹாபீஸுக்கு அளவு கடந்த தடுமாற்ற மேற்பட்டுப்போயிருக்கின்றது. அவர் படித்த மன்திக், பல்ஸபா முதலிய யாவற்றையும் இதிலேயே உபயோகிக்க முனைந்து விட்டார். இவ்வாறு தடுமாறக் கூடிய இவர், உரோமங்களை எப்படியும்வைத்துக்கொள்ளலாம் என கைகூசாது வரையமுற்படாது மௌனமாக யிருந்திருப்பாராயின், உத்தமமாக யிருந்திருக்கும்.

முதலாவதாக, அவர் கிராப்சம்பந்தமாய்க் கூறப்பட்டிருக்கும் ஹதீதுகளை சந்தேகிக்கின்றார். அந்த ஹதீதுகள் சரியான ஹதீதுகளென்று ஒப்புக் கொள்ளப்படினும் தற்காலத்தில் வைக்கப்படும் கிராப்பும், எம்பிரான் (ஸல்.) அவர்கள் காலத்தில் வைக்கப்பட்டிருந்த கிராப்பும் ஒரேமாதரியாகத்தானிருந்ததென்று 1300 வருடங்களுக்கு இப்பால் சொல்பவர் யார்? என வினவுகின்றார். பேஷ்? இவருடைய இஜ்திஹாத்தானென்னே! எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் காலத்தின் நடவடிக்கைகளை அக்காலத்திலிருந்த ஸஹாபாக்களே இப்பொழுது வந்து நேர்முகமாய் இவருக்கு அறிவிக்க வேண்டு மென்று இயம்புகின்றார்போலும். இவருடைய அறிவு சென்றவாறுதானென்னே? ஆகவே ராவிகள் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கும் ஹதீதுகளை இவர் ஒப்புக்கொள்ளமாட்டார் போலும். கிராப் விஷயத்தில் இவ் விபரீத மனப் பான்மை கொண்ட இவர், இதரமார்க்க விஷயங்களிலும் இவ்வாறு குதர்க்கமும், விபரீதமுமான வழிகளில் இறங்கமாட்டாரென நினைப்பதற்கில்லை. உதாஹரணமாக, நாயகம் (ஸல்.) அவர்களின் காலத்தில் ஹஜ்ஜைநிறைவேற்றியவர்கள், இந்தியர்கள் ரயிலேறி, கப்பலேறி மோட்டார் ஏறி ஹஜ்ஜை நிறைவேற்றுவதுபோலவா செய்தார்கள்? ஆதலால் இந்தியர்கள் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றவேண்டியது அவசியமில்லைஎன்று ஒருக்கால் கூறிவிடவும் கூடும்.

இவ்வித மனப்பான்மை கொண்டவர்களிற் சிலர், நோம்பு நோற்பது, தொழுகை நிறைவேற்றுவது முதலிய காரியங்களும் அக்காலத்திலுள்ள முரட்டு சுபாவம் படைத்த அரபியர்களுக்காக ஏற்பட்டிருந்ததேயன்றி நமக்காக ஏற்படவில்லை என்று கூறுகின்றனர். பிறகு அதற்குத் தக்க வாயாப்புப் பெற்று அடங்கினர். இதேபோன்று ஹாபிஸும் எம்பெருமானார் (ஸல்.) அவர்களால் விலக்கப்பட்ட கிராப்பானது, அவர்கள் காலத்தி லேற்பட்டிருந்த கிராப்பைத்தான் குறித்து நிற்கிறதெனக் கூறத் துணிந்திருக்கின்றார். இவரது புத்தியின் தீக்ஷணியந்தானென்னே? தவிர, தற்காலத்தில் காணப்படும் கிராப்பானது, நபிகள் நாதர் (ஸல்.) அவர்கள் விலக்கிய கிராப்பைப்போலதானிருக்கிறதென்று வைத்துக்கொண்டாலும், அது மக்றூஹா? ஹறாமா? றித்தத்தா? வென்று இயம்பி, இது விஷயமாய் பிக்ஹு கிரந்தங்களில் யாது கூறப்பட்டிருக்கிறதென்று வினவுகின்றார். அவைகளை இவருக் கெடுத்தறிவித்தாலும் அது இவருக்குப் பிரயோசனமளிக்காதென்பது திண்ணம். ஏனெனின், ஜவாஹிருல் புர்கானின் நான்காவது வெளியீட்டின் முகவுரை 2, 3-வது பக்கத்தில், பிக்ஹு சட்டங்கள் குர்ஆன் ஹதீதுகளுக்

குப் பொருத்தமாக அமைந்திருக்கவில்லை என்றும், ஜனங்கள் இந்த பிக்ஹு சட்டத்தையே உடும்புப் பிடியாய் பிடித்திருக்கின்றார்களென்றும் கூறி, பிக்ஹை ஏளனஞ்செய்து, அதனை மானிடர்கள் எடுத்துக் கையாளக் கூடாதென்னும் தோரணையில் வரைந்திருக்கின்றார். ஆதலின், பிக்ஹு சட்டத்தை இவருக்கெடுத்துரைப்பது செவிடன் காதில் ஊதிய சங்குக்கொப்பாகவே வந்து முடியும் என்பதில் என்ன சந்தேகம்? எனவே, அவரின் வீண் விதண்டாவாதங்களை ஒரு பக்கல் ஒதுக்கிவிட்டு, இது விஷயமாய் எம்பெருமானார் (ஸல்.) அவர்களைத் தொட்டும் அறிவிக்கப்பட்டிருக்கும் ஹதீதுகளை கவனிப்போம். அதாவது, கிராப் வைக்கும் விஷயமாய் சஹீஹ்புகாரி, சஹீஹ் முஸ்லிம் என்னும் பிரதான ஹதீது கிரந்தங்களில், இரண்டு ரிவாயத்துகள் காணப்படுகின்றன. (1) ஒரு சிறுவனது தலையின் உரோமத்தின் சில பாகம் எடுக்கப்பட்டும் சில பாகம் விடப்பட்டும் இருந்ததை எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் கண்டு, அவ்வாறு செய்யவேண்டாமென விலக்கி, உரோமங்கள் யாவற்றையும் எடுத்துவிடுங்கள், அல்லது யாவற்றையும் விட்டுவிடுங்கள் எனக் கூறியதாக இப்னு உமர் (ரலி.) அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். (முஸ்லிம்) (2) எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் "கஜஉ" செய்வதை விலக்கினார்கள். அது யாதாகுமென வினவப்பட்டபோது, தலை உரோமங்களிற் சிலதை விட்டுச் சில பாகத்தை எடுத்து விடுவதாகுமெனக் கூறியதாக இப்னு உமர் (ரலி.) அவர்களைத் தொட்டும் நாபிஉ ரிவாயத்துச் செய்திருக்கின்றார்கள். (புகாரி, வ முஸ்லிம்) இதில் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள், தலை உரோமங்களை எப்படி வைத்துக் கொள்ளவேண்டும்; எவ்வாறு வைத்துக்கொள்ளக் கூடாதென்பதை விபரமாய் விளக்கியுள்ளார்கள். எனவே, தலை உரோமங்களில் சில பாகத்தை வைத்துக்கொண்டு, சில பாகத்தை எடுத்துவிடுவது கூடாதென ஹதீதில் அறிவிக்கப்பட்டிருப்பதால், ஹிந்துக்களே போன்று தலை உரோமங்களின் முன்பாகத்தைச் சிறைத்துக் கொண்டு பின்பக்கத்தில் வைத்துக்கொள்வதும், அல்லது தலையின் உச்சியில் வைத்துக் கொண்டு அதன் சுற்றுப்பக்கங்களை எடுத்துக்கொள்வதும் அல்லது முன்பக்கத்தில் வைத்துக்கொண்டு பின்புறமாயுள்ளதை எடுத்துவிடுவது முதலிய யாவும் கூடாதென்பதை நிச்சயமாய்த் தெரிந்து கொள்கின்றோம்.

தவிர எம்பெருமானார் (ஸல்.) அவர்களால் அருளப்பெற்றுள்ள ஹதீதில் கூறப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்துக்கள் துலக்கமாகவும், யாவரும் எளிதில் விளங்கிக்கொள்ளக் கூடியதாகவுமிருக்கின்றது. எனவே, அதன் கருத்தில் எவ்வித சந்தேகமும் கொள்வதற்கு இடமில்லாதிருக்கும் நிலைமையில், ஹாபிஸ் என்பார், எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுடைய திருவாக்கியங்களுக்கு ஏதோ கருத்திருப்பதாக நடித்து "எழுத்துடன் கருத்தும் வேண்டும்" என்றும், எழுத்தை மட்டும் கட்டிக்கொண்டு எல்லாவிடங்களிலும் ஆதாரங்காட்டி அட்டகாசம் செய்யக்கூடாதென்றும், வேறு என்னென்னவோ உளறிக் கொட்டுகின்றார். எனவே மேலே கூறப்பட்டுள்ள எம்பெருமானார்(ஸல்.)அவர்களின் இரண்டு ஹதீதுகளில் கிராப் விஷயத்தைத் தவிர்த்து வேறு ஏதாகிலும் கருத்தமைக்க முடியுமா? வென்பதை நேயர்கள் கவனிப்பார்களாக. அதற்கு வேறு கருத்தமைக்க முடியுமென்று ஹாபிஸ் கூறுவாராயின், அதனை வெளிப்படுத்தி அந்தக்கருத்து இன்னதெனக் கூறுவது ஹாபிஸின் கடமையாகும்.

மேலும் அக்கட்டுரையில் இஸ்லாத்தின் சட்டதிட்டங்கள் இரண்டுவகையாய்க்காணப்படுகிறது; அதில் முந்தியது கலிமாச் சொல்வது, தொழுவது, ஜகாத் கொடுப்பது, பரலான நோன்பு நோற்பது முதலியவைகளைப்போல் எவ்வித மாறுதல்களும் வித்தியாசங்களும்அடையாதவைகளாகுமென்றும்,இரண்டாவது வகை கஃபத்துல்லாவை முன்னோக்கித்தொழுவதுபோல, உலக மக்களின் நடைமுறைக்குத் தக்கவாறுமாறுதலடையக்கூடியதென்றும்கூறி, அதற்குப் புகைவண்டியில் பிரயாணஞ்செய்துகொண்டிருக்கும்போதும், யுத்தத்தில் கலந்துகொண்டிருக்கும்போதும், நான்கு திசைகளையும் நன்கு அறிந்துகொள்ள முடியாத ஒரு பெரிய வெட்ட வெளி மைதானத்தில் இருக்கும்போதும் கிப்லா மாறுதலடைவதை உதாஹரணமாகக் குறிப்பிட்டு, இவர்கள் கஃபதுல்லாவையே முன்னோக்கித் தொழுகவேண்டுமென்று சொன்னால் அது பெரும் தவறாகவே வந்து முடியும். ஆதலின்

காலபேதத்திற்கும், மக்களின் நிலைமைக்கும் தக்கவாறு சட்டங்களை நிர்மாணிக்க வேண்டுமென்று வரைகின்றார். இது இவருடைய அறிவீனமேயாகும். எனவே, இச்சமயங்களில் கிப்லா மாறுதலடைவது காலபேதத்தையும் மக்களின் நிலைமையையும் உத்தேசித்தன்று. வெட்டவெளி மைதானத்திலிருக்கும்போது கிப்லாவைப் பகுத்தறிந்து கொள்வதில் சங்கட மேற்பட்டு விடுகிறது, புகைவண்டியில் சவாரி செய்யும் போதும், யுத்தத்தில் சம்பந்தப்பட்டிருக்கும்போதும் ஏறுவாகனங்கள் குறிபிட்ட திசையைவிட்டு மாறிவிடுகின்றது. இச்சங்கடங்களை நிவர்த்திசெய்வதற்காக கிப்லாவை முன்னோக்கவேண்டுமென்னும் சட்டம் மாறுதலடைகின்றது. இஃதோர் அசம்பாவிதமான சங்கடத்தினாலேற்படுகின்றதேயன்றி வேறில்லை. கிப்லாவை முன்னோக்கவேண்டுமென்னும் சட்டதிட்டம் எக்காலத்திலேற்பட்டதோ, அதுபொழுதே அதன் திசையை அறிந்துகொள்வதில் சங்கடமேற்படும்பொழுது, கிப்லா மாறுதலடையும் விஷயமும் ஏற்பட்டுவிட்டது. எனவே, ஹாபிஸ் கூறுகிறபடி அது பிற்கால மக்களின் நிலைமையைக்கருதி செய்யப்பட்ட சட்டமன்று. ஆகவே, இதைக் கொண்டு விவாதத்திலிருந்துவரும் கிராப் விஷயத்தை கிப்லாவின் விஷயத்திற்கு ஒப்பிட்டு காலபேதத்திற்கேற்ப இதுவும் ஆகுமென்று ஹாபிஸ் உளறிக்கொட்டியிருப்பது அவரின் அறிவீனமேயாகும். கிராப் வைப்பதில் அவ்வாறுள்ள என்ன அசம்பாவிதம் ஏற்பட்டுவிட்டதென்பதுதான் நமக்கு விளங்கவில்லை. இவர்தான் இவ்வாறான சட்டம் நிர்மாணிக்க முற்பட்டிருக்கின்றாரா? அல்லது இதற்குமுன் யாரேனும் இவ்வாறு கூறியிருக்கின்றார்களா? என்பதைக் கூறமுன்வருவாரா? தவிர, எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் கிராப் வைக்கக் கூடாதென்று விலக்கியிருக்கும் நிலைமையில், தற்காலையுள்ளவர்கள் கிராப் வைத்துக்கொள்வதற்கு என்ன அசம்பாவிதம் ஏற்பட்டிருக்கிறதென்பதை அவர் விளக்கிக்காட்டவில்லை. இவரின் விபரீதக் கூற்றின் போக்குத் தானென்னே! மேலும் அவர் கூறுவதாவது:—

> இப்படிப்பட்ட தாராளமான மனப்பான்மை கொள்ளாதவரை முஸ்லிம் பத்திரிகாசிரியர்களும் நூற்களியற்றும் கிரந்தகர்த்தாக்களும் உண்மையில் இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் நன்மையைச்செய்வதைக் காட்டினும் தீமையையே அதிகஞ்செய்யும் விரோதிகளாகவேதானிருக்கின்றனர்என்று சொல்வது மிகையாகாது என்பதே.

ஹாபிஸ் என்பார் இவ்வாறான மனப்பான்மை கொண்டிருப்பதால்தான் அவர் குர்ஆனுக்கும் ஹதீதுகளுக்கும் தப்பான வியாக்கியானங்கூறி, காலத்திற்கேற்றவாறு தம்பேனாமுனை தேயத்தேய கிறுக்கித் தள்ளுகின்றார்போலும். இதனால், நமது தாராளக் கொள்கையைத்தான் மக்கள்பால் உபயோகித்துவருகிறாரென்பது நன்கு புலனாகின்றது. இவ்வாறான மனப்பான்மை கொண்டவர்களால் இஸ்லாத்திற்கு எவ்வாறான கெடுதிகள் விளையுமென்பது நேயர்கள் நன்குணர்ந்தவையே. மக்கள் திருக் குர்ஆனையும் ஹதீதுகளையும் பின்பற்றியொழுகுவது சிறிது கஷ்டமாகத்தான் தோன்றும். அதனைச் சகித்து நேர்வழியில் நடக்கவேண்டுமென்று போதிக்கவேண்டியதிருக்க, அவர்களின் மனோ இஷ்டப்படி நடப்பதற்கு, குர்ஆன் ஹதீது இவைகளின் கருத்துக்களைத் திரித்து அமைக்கவேண்டுமென்று கூறுவது, மக்களை வழிகேட்டி லாக்கிவைப்பதற்கு அனுஷ்டிக்கும் தந்திரமே யன்றி வேறில்லை என்பது திண்ணம். தவிர,

> கிராப் வைப்பவர்கள் கொடியவர்கள் என்றால், இவர்கள் லார்டு ஹெட்லி அல்பாரூக்கையும் இங்கிலாந்திலுள்ள எல்லா நவ்முஸ்லிம்களையும் குறிப்பாய் நவ்முஸ்லிம்காலித் ஷெல்ட்ரேக்கையும் அமெரிக்காவின்பால் காணப்படும் எல்லா முஸ்லிம்களையும் பின்னர் ஜர்மனியிலும் துருக்கியிலும்......கிராப் வைத்துக்கொண்டிருக்கும் முஸ்லிம்களெல்லாம் நல்லவர்களா? அல்லவா?

என்று ஹாபிஸ் வினவுகின்றார்.

ஹாபிஸும் அவரதுகோஷ்டியாரும் தாங்கள்தான் பகுத்தறிவுடையவர்களென்று பறைசாற்றிவருகின்றனர். என்னே இன்னோரின் பகுத்தறிவின் விநோதவிந்தை? கிராப் வைத்துக்கொள்ளும் விஷயமாய் நமது சன்மார்க்கம் என்ன கட்டளையிடுகின்றது என்பது பற்றிய விவாதம் நடக்குங்காலை, எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் கிராப் வைப்பதுகூடாதென்று விலகியிருக்கின்றார்களென்று நிரூபிக்கப்பட்டுப் போயிருக்கும் நிலைமையில், அவர் கிராப் வைத்திருக்கிறார்;

இவர் ஜேக் வைத்திருக்கின்ருர்; உவர் அப்படிச்செய்கின்ருர்; இவர்களெல்லாம் கொடியவர்களா? எனக் கூறி, கிராப் வைத்துக்கொளலா மென்பதற்கு ஐரோப்பியர்களுடையவும், ஜர்மன் வாசிகளுடையவும், மொரோக்கோ மனிதர்களுடையவும், ஒரு சில மாகாண வாசிகளுடையவும் செயல்களை ஆதாரமாகக் காட்டுகின்ருன். இவைகளை ஆதாரமாகக் கொண்டுதான் கிராப்வைக்கலாமென்றுகூறி, மானிடர்களை வழி கெடுக்க முற்பட்டிருக்கிருர் போலும். இவர் கற்றகல்வியில் இவ்வாருன மானிடர்களின் செயல்களை ஆதாரமாகக் கொள்ளலாமென்று கூறப்பட்டிருக்கிறதா வென்பதை தெரியப்படுத்துவாரா? தாங்கள் தான்பகுத்தறிவுடையவர்களென்று நடித்துவரும் இக்கோஷ்டியினர், முன்னேர்களான இமாம்கள் வலிமார்கள்முதலிய பெரியார்களின் நடவடிக்கைகளை ஆதாரமாக எடுத்து நடக்கக்கூடாதென்று கூறும் நிலைமையில், தற்காலநவநாகரீகத்தைப் பின்பற்றிவரும் சாமான்யர்களின்நடத்தைகளை ஆதாரமாக எடுத்துக் காண்பிப்பது விந்தைக் குறியதல்லவா? மேலும் தலை உரோமங்கள் தாடி மீசைகள் முதலியவற்றை இவ்வாறு தான் வைத்துக் கொள்ளவேண்டுமென்று நம் சன்மார்க்கம் கூறுகிறதென நான் தெரிவித்திருந்ததற்கு ஹாபிஸ் என்பார்,

> அப்படியாயின்...மத்ரஸயெ பாக்கியாத் துஸ்ஸாலி ஹாத்தின் ஆசிரியர்களிற் சிலர், மீசையை அடிமட்டும் வெட்டி மீசையில்லாததுபோல் செய்துவிடுகின்றனரே, மற்றும் பல ஆசிரியப் பெரியார்கள் மீசையை சிறிது வெட்டி அழகுபட வைத்துக்கொண்டிருக்கின்றனரே.........இவர்களுள் யாருடைய மீசையை மார்க்கம் வேண்டி நிற்கிறதென்பதை அறிவிப்பாரா?

என வரைகின்ருர்.

நமது சன்மார்க்கத்தில் கூறப்பட்டிருக்கும் இச்சிறியவிஷயத்தையுங் கூடத்தெரிந்துகொள்ளாதிருக்கும் இவர், பத்வாக்கொடுக்க முற்பட்டிருப்பதுதான் விந்தையாக யிருக்கின்றது. மீசையை நிமை அளவுக்கு வைத்துக் கத்தரித்துவிடலாமென்றும், அடியோடு வெட்டிவிடலாமென்றும் இன்னும் இது சம்பந்தமான அநேக விபரங்களும் தக்க ஆதாரங்களோடு பிக்ஹு கிதாபுகளில் வரையப்பட்டிருப்பதால், இரண்டுவிதமான மீசையையுந்தான் மார்க்கம்வேண்டி நிற்கிறதென்பதை ஹாபிஸ் நன்குணர்ந்து கொள்வாராக. தவிர,

> என் நண்பர் மார்க்க சம்பந்தமாய் ஏதேனும் எழுதுவதற்கு முன் தாம் எங்குள்ளவர்? என்ன செய்பவர்? எங்கு மார்க்கக் கல்வி கற்றவர்? எப்பொழுது கற்றவர்? எத்துணை கற்றவர்? என்பதை முதல் முதலாய் நம் நண்பர்களுக்கெல்லாம் தெரியப்படுத்திவிட்டு, எம்போன்ற உண்மையிலேயே படித்துள்ளவர்களைத் தூஷிக்கும் பல்லவியைப் பாடினல் பாருலகமக்கள் உண்மையை உணர்ந்துகொள்வார்கள்.

என ஹாபிஸ் வரைகின்ருர். ஓ ஹாபிஸே! உம்மைப்போன்று யான் ஆதாரமில்லாது கிராப் வைப்பது ஆகுமென்று பத்வாக் கொடுத்து விடவில்லை. எம்பெருமானர் (ஸல்.) அவர்களால் கூறப்பட்டவைகளின் அத்தாக்ஷியைக்கொண்டு கிராப் வைப்பது ஆகாதென்றே நிரூபித்திருக்கின்றேன். அதனல் உண்மையாகவே படித்தவர் யார் என்பது நன்கு விளங்கிவிடும். இந் நிலைமையில் எனது கல்வித் திறமையை நீர் அறிந்து கொள்ளவேண்டிய அவசியமில்லை என்பது வெள்ளிடை. எனவே, கிராப் வைக்கக்கூடா தென்பதற்கு நான் கூறிய ஆதாரங்களையும் அதனை மறுத்து நீர் உளறிக்கொட்டியிருக்கும் பலவாருன வீண் விதண்டாவாதங்களையும் பார்க்கும் எந்தச் சாமான்யரும் நமது கல்வியின் தன்மை இத்தகையதென்பதை நன்கு தெரிந்துகொள்வர். ஆனல் நான் உம்மைப்போன்று பட்டத்தைப் பறிகொடுத்தவனுமல்லன்; பட்டத்தைப் பறிகொடுத்துவிட்டு வெட்கங்கெட்டு பாக்கவீயை உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டு நிற்பவனுமல்லன். நான்சொல்லுவது சன்மார்க்கத்துக்குச் சரியாயிருக்கிறதா? அன்றி தப்பாகயிருக்கிறதா? என்பதை நீர் கவனித்துத் தெரிந்துகொள்ள வேண்டியதுதான் முக்கியமேயன்றி, நான்யார்? எங்கு மார்க்கக் கல்விகற்றவன்? எப்பொழுது கற்றவன் என்பனவற்றை நீர் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமில்லை என்று நினைக்கின்றேன். ஆதலின் நீர் எவ்விஷயத்திற்கும் குதர்க்கவாதம் புரிவதற்கு முன்வராமல் சத்தியம் எதிலிருக்கிறதென்பதை நன்கு கவனித்துப் பார்த்து அதற்குத் தலைசாய்த்து நடக்கமுற்படுவீராக.

இந்தியரின் தினசரி சுகாதார வாழ்வு.

பாலானது ஓர் பூர்ண ஆகாரமாகும். இதில் ஆகாரத்தின் எல்லா பாகங்களும் அடங்கியுள்ளன. குழந்தைகளுக்குத் தாய்ப் பால் சிரேஷ்டமாகும். பாலினால் அநேக வஸ்துக்கள் செய்யப்பட்டு கடைகளில் விற்கப்படுகின்றன. அவையாவன: ஏடு எடுத்த பால், மோர், பாற்கட்டி, வெண்ணெய், நெய், தித்திப்புப் பலகாரங்கள் முதலியனவாகும். ஆனால் பாலும் அதன் மூலமாய்த் தயாரிக்கப்படும் வஸ்துக்களும், கெட்ட வஸ்துக்களுடன் கலப்படம் செய்யப்பட்டு, அதனால் பாலின் போஷணை சக்தி குறைந்து போகிறது. இந்தக் கலப்பட வஸ்துக்களுடன், தொத்து வியாதி சம்பந்தமான வஸ்துக்கள் சேர்ந்தால், அபாயகரமான தொத்துவியாதிகள் உண்டாகின்றன.

மனிதன் உண்ணும்படியான மாமிச ஆகாரங்களில், கல்லீரல் சிரேஷ்டமானதாகும். இதில் கார்போ ஹைட்ரேட்டும் ஜீவஸத்துப் பொருள்களும் நிரம்ப இருக்கின்றன. இந்தக் கல்லீரலில் சிவப்பு செல்லுகளின் உற்பத்தியைத் தூண்டுவதற்கான ஒரு வஸ்து இருக்கிறது. ஆனதுபற்றி, சகலவித 'இரத்தமின்மை' என்னும் வியாதிகளுக்கும் இதனை ஏராளமாய் உபயோகப்படுத்தப்படுகிறது.

பாலுக்கும், கல்லீரலுக்கும் அடுத்தபடியாக முட்டைகள் பிரயோசனமளிக்கின்றன. இவைகள் இலேசாக வேகவைப்பதுகொண்டு சடுதியில் ஜீரணமாய்விடுகின்றன.

மீன்கள், முட்டைகள், கல்லீரல், மாமிசம், மூளை முதலிய உறுப்புக்கள் யாவும் திராவகத்தை உண்டுபண்ணக்கூடிய ஆகாரங்களாகும். ஆனதுபற்றி மாமிச பக்ஷிணிகள் அதிகமாய்க் காய்களையும் பழவர்க்கங்களையும் சாப்பிட்டு வரவேண்டும். அதனால் இரத்தமும், தேகநீர்களும் சரியான ஸ்திதியிலிருக்கும்.

சாகபக்ஷிணிகள், இயந்திரத்தால் தீட்டப்பட்ட அரிசி, கோதுமை இவைகளைத் தவிர்த்து கையால் குத்தப்பட்ட தானியங்களையே உண்ணவேண்டும். இந்த தானியங்களுடன், பாலையும் அதைச் சேர்ந்த வஸ்துக்களையும் அதாவது வெண்ணெய், நெய், மோர் இவைகளையும், பட்டாணி, அவரை முதலிய பருப்பு தினுசுகளையும், கொட்டைகளையும், விதைகளையும், கீரை தினுசுகளையும், கிழங்கு வகைராக்களையும், பழங்களையும் சாப்பிட்டு ஆகாரக் குறைவுகளைச் சரிப்படுத்திக்கொள்ள வேண்டும். இல்லையேல் அவர்களது ஆரோக்கியத்திற்குக் கெடுதல் நேரிடும்.

வளரும் குழந்தைகளின் தேக எடைக்குத் தக்கபடி முதிர்ந்த வயதுள்ளவர்களைக் காட்டிலும் அதிக ஆகாரம் கொடுக்கப்படல் வேண்டும். நல்ல போஷிப்புள்ள ஆகாரத்தை உட்கொண்ட ஒருவனுக்கு நோயை எதிர்க்கும் சக்தி அதிகமுண்டு. ஆகாரத்தில் சரியான ஜீவஸத்துப் பொருள்கள் இல்லாதிருக்குமாயின், அதுதான் நோய்க்கும், பலஹீனத்திற்கும் காரணமாகும். எந்த ஆகாரமாயிருந்தாலும் சரி, அதில் தூசி படிந்து ஈக்கள் மொய்த்துக்கொண்டிருக்கக் கூடாது. எனவே, ஆகாரத்தை சரியானபடி மூடிபோட்ட பாத்திரங்களில் வைத்திருக்க வேண்டும்.

குழந்தைகளுக்குத் தக்க ஆகாரம் பின் கூறப்படுபவை தான் என்று மெக்காரிஸன் கூறியிருக்கின்றார். (1) பால் வகைராக்கள் அதாவது தயிர், மோர், வெண்ணெய், நெய். (2) முளைக்கவைத்த பருப்பு தினுசுகள் (3) எப்போதாகிலும் ஒரு சமயம் முட்டைகள், கல்லீரல், மாமிசம், மீன் முதலியன புசித்தல் (4) கிழங்குகள் (5) பச்சைக்கீரை தினுசுகள் (6) பழங்கள். இவைகளைக் குழந்தைகளுக்குக் கொடுத்துவருவது நலம். இதுவன்றி சுளுவில் ஜீரணமாகக் கூடியதாயும், நன்றாய்த் தயாரிக்கப்பட்டதாயும், ப்ரோடீன் கார்போ ஹைட்ரேட்டுகள், கொழுப்புகள், உலோக உப்புக்கள் முதலியன தக்க அளவில் அமைந்ததாயுமுள்ள வஸ்துக்களையும் கொடுக்கலாம். மானிடர்கள் தாங்கள் புசிக்கும் விஷயமாய் அடியிற் குறிப்பிடப்படுபவைகளை கவனித்தல் அத்தியா அவசியமாகும். (1) தகர டப்பாக்களில் அடைத்துவரும் ஆகாரங்கள்

பிரயோஜனமற்றவையாகும். (2) எவ்வளவு சுத்திகரிக்கப்பட்ட ஆகாரமாகவிருந்தாலும், அது இயற்கையில் கிடைக்கக்கூடிய ஆகாரத்திற்குச் சமமாகாது. (3) பத்திரப்படுத்தப்பட்டிருக்கும் ஆகாரமானது, புதிதாய்த் தயாரிக்கப்பட்ட ஆகாரத்தைப்போல் அவ்வளவு சுகமானதல்ல. (4) புதிதாய்த் தயாரிக்கப்படும் ஆகாரம் அகப்படும்போது, டப்பாவில் அடைத்துவரும் ஆகாரம் சிலாக்கியமானதாக ஆகமாட்டாது. (5) உப்பு சர்க்கரை தித்திப்புப் பண்டங்கள் இவைகளை மட்டாய் உண்ணவேண்டும். (6) கீரை வகைறுக்களைப் பச்சையாய் உண்ணுவதானால், அவைகளை கொதிக்கும் ஜலத்தில் செவ்வையாய்க் கழுவி பின்னர் புசிக்க வேண்டும். அவைகள் பயிராகும் இடம் சுத்தமானதா என்பதை கவனிக்கவேண்டும். அவைகளை, செவ்வையாய் மென்று தின்னவேண்டும். (7) பாலை உபயோகப்படுத்துமுன் கொதிக்க வைக்க வேண்டும். (8) மோரையாவது தயிரையாவது உபயோகப்படுத்த வேண்டும். (9) சுத்தமான ஜலத்தை மிதமாய்ப் பருகவேண்டும். (10) ஒழுங்கான இடங்களில் ஆகாரத்தை உண்ணவேண்டும். (11) ஆகாரத்தைவிழுங்குமுன் நன்ருய் மெல்லவேண்டும்.

இயற்கையாக வஸ்துக்களிலிருந்து கிடைக்கக்கூடிய ஜீவசத்துப்பொருள்களே சிரேஷ்டமானதாகும். இதுவன்றி இக்காலை ரஸாயன வர்த்தகர்கள் தயாரிக்கும் ஜீவஸத்துப் பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்கி உண்பதில் அவ்வளவு பிரயோஜனமில்லை. தவிர கீழே குறிப்பிடப்படுபவைகள் தேகாரோக்கியத்திற்குக் கெடுதியை விளைவிப்பனவாக விருக்கின்றன. அதாவது;—(1) அதிகமாகவோ, அல்லது மிகக் குறைவாகவோ உண்ணுதல் (3) உலோகங்கள், ஷெல் மீன், பால் வகையரு, மாமிசம், மீன் முதலியவற்றில் உள்ள விஷ பதார்த்தங்களையும், அழுகிக் கெட்டுப்போன ஆகாரங்களையும் உண்ணுதல் (3) விஷக்கிருமிகள் அல்லது க்ஷய ரோகக் கிருமிகள் சம்பந்தப்பட்ட பாலையாவது மாமிசத்தையாவது உண்ணுதல் (4) ஜுரம், காலரா, சீதபேதி முதலியவைகளின் விஷக் கிருமிகள் சம்பந்தப்பட்ட ஆகாரம் அல்லது பாலை உண்ணுதல் (5) சாராயம், காப்பி, தேயிலை முதலியவற்றைக் குடித்தல் ஆகிய இவையாவும் கெடுதலானவைகளாகும். ஆனதுபற்றி, நமது தினசரி ஆகாரத்தை நாம் தெரிந்துகொள்வதில், அவற்றுள் போதுமான போஷணை குணமுள்ள வஸ்துக்கள் இருக்கின்றனவா? கெடுதலான வஸ்துக்கள் இராமலிருக்கின்றனவா? என்பதைக்கவனித்து அதனைத் தெரிந்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

நமது தினசரி ஆகாரம், சுகாதார நிலைமையில் அமைந்திருப்பது ஒருபக்க மிருக்க, வேறு சில அம்சங்களும் நமது வாழ்விற்கு அவசியம் வேண்டற்பாலனவாக யிருக்கின்றன. அவையாவன:— சுத்தம், உடை, தூக்கம், பழக்க வழக்கங்கள் முதலியனவாகும்.

சுத்தம்:—இது ஆரோக்கியத்திற்கு மிகவும் அத்தியா அவசியமாகும். நாம் உண்ணும் உணவு, நாம் சுவாசிக்கும் காற்று, நாம் குடிக்கும் பானம் இவற்றின் பரிசுத்தம் அத்தியா அவசியமாகும். சர்மத்தின் சுத்தத்தைக்குறித்து நன்ருய்க் கவனிக்கவேண்டும். ஏனெனில் நுரையீரல்செய்யும் தொழில்களில்அநேகமானதை சர்மம் செய்கின்றது. சர்மத்திலுள்ள வியர்வைக் கோளங்களும், கொழுப்புக்கோளங்களும் முறையேவியர்வையையும், சீபம் என்னும் கொழுப்பையும் உற்பத்தி செய்கின்றன. வியர்வையில், ஜலம், மூத்திரம், கொஞ்சம் திராவகம், கந்தகம், உப்பு முதலியன கலந்திருக்கின்றன. இது ஸர்மத்தையும் ரோமத்தையும் ஈரமாகவும் பழ பழப்பாகவும் வைத்துக்கொண்டிருக்கின்றது. சர்மத்தின் மேல்பாகத்தில் அழுக்குகள் உண்டு. இதில் வியர்வை கலந்து அசுத்த மேற்படுகின்றது. இந்த அழுக்குச் சேர்ந்து கோளங்களின்சந்துகளை அடைத்துவிடுகிறது. இதனால் சர்மத்தின் இயற்கைத் தொழில் நடைபெறுகிறதில்லை. அதனால் ஆரோக்கியம் கெட்டுப்போகிறது. தவிர இந்த வியர்வையின் அழுக்கு அக்குள் முதலிய ஸ்தானங்களில் திரண்டு நாற்றமெடுத்துப் போகிறது. இந்த அழுக்கைப்போக்க ஸோப் ஜலம் தேவையாகும். கடுகெண்ணெய் தேங்காய்யெண்ணெய் எள்ளெண்ணெய் முதலியவற்றை இந்தியர்கள் தேய்த்து ஸ்நானஞ் செய்யும்பழக்கம் மிகவும் சிலாக்கியமானதாகும். இதனால் தேகம் குளிர்ச்சியடைந்து, சர்மம் மிருதுவாகி, அழுக்குகள் கரைந்து தேகத்திற்கே ஒருவித உத்தீபனம் உண்டாகிறது. உள் அவயவங்களுக்கும் ஓர்வித உணர்ச்சி ஏற்பட்டு, இரத்த

ஓட்டம் துரிதமாகி ஒருவிதமான மனக் கிளர்ச்சியும் சுகமும் உண்டாகிறது.

சுத்தத்திற்காக ஸ்நானம் செய்யவேண்டியது அவசியமாகும். இதனுல் உள் அவயவங்களுக்கும் பலன் உண்டு. காலையில் ஸ்நானஞ் செய்வது நலம். சர்மமானது மிகவும் நட்பமான உறுப்பானதுபற்றி, ஸ்நானத்தின் சீதோஷ்ணமானது தேகம் பொருக்கும் படியான தாயிருக்கவேண்டும். தவிர ஸ்நானத்தினுல் சுகமும் வலுவும் ஏற்படுவதுடன், மனமும் தேகமும் சுறுசுறுப்பாய் வேலை செய்யும்படியாயும் இருக்கவேண்டும். இவை ஏற்படா விட்டால், தலை பளுவு, மயக்கம், மார்பில் இறுக்கம் முதலிய உணர்ச்சிகள் உண்டாகும். அப்போது அந்த ஸ்நானம் தகுதியல்ல வென்று அதை விட்டுவிட வேண்டும்.

வாயை தினம் 5, 6 முறையாகிலும் சுத்தஞ் செய்யவேண்டும். பற்களை நன்ருய்த்தேய்த்து (மிஸ்வாக்) ப்ரஷால், சுத்தஞ் செய்யவேண்டும். பற்களின் இடையில் ஆகாரம் ஒட்டிக் கொண்டிருந்தால், அவற்றை அப்புறப்படுத்தவேண்டும். பற்களையும் ஈறையும் கவனிக்க வேண்டும். வாயைக் கொப்புளிக்க உபயோகிக்கும் ஜலம் சுத்தமானதாகவிருக்கவேண்டும்.

நாக்கு:—இதை எப்போதும் சுத்தமாகவே வைத்திருக்கவேண்டும். அதை நன்ருய் வழித்து அலம்பவேண்டும்.

மூக்குத் துவாரங்கள் :—சுத்த ஜலத்தைக் கொண்டு தினம் இவற்றை சுத்தஞ் செய்ய வேண்டும். இவை மூலமாய்த்தான் அநேகத் தொத்து வியாதிகள் தேகத்தினுள்ளே புகும்படி நேரிடுகின்றது.

நகங்கள் :—நீண்டு வளரும்போது, அவற்றைக் கத்தரிக்கவேண்டும். மேலும் அவற்றை சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். இல்லாவிட்டால், அவற்றுள் அழுக்குசேர்ந்துவிடும்.

ரோமம் :—இதை தினம் சீவி, வாரி சுத்தமாய் வைத்திருக்கவேண்டும்.

படுக்கை யறைகள், சமயலறை, வீடுகள், அவற்றின் சுற்றுப்புறங்கள் இவை யாவும் சுத்தமாயிருக்கவேண்டும். குப்பையைச் சுத்தஞ்செய்யும் விஷயத்தில் தகுந்த கவனத்தைச் செலுத்தவேண்டும்.

உலகின் முன்னேற்றம் எங்கிருக்கின்றது?

இதுகாலை நம் முஸ்லிம் சோதிரர்கள் இஸ்லாத்தின் உண்மைத் தத்துவங்களை ஒழுங்கான முறையில் அறிந்துகொள்ளாது மதி மயங்கியவர்களே போன்று தட்டுத்தடுமாறி, தாங்கள் மேன்பதவி அடைவதற்குச் சிலர் ரஷியாவின் ஏதேச்சாதிகாரத்தையும், சிலர் ஐரோப்பிய நாகரீகத்தையும் எதிர்பார்த்துக் கொண்டு, அதனைப் பின்பற்றி நடக்க முற்பட்டிருக்கின்றனர். இந்நிலைமையில் இஸ்லாத்தின் சட்டதிட்டங்கள் எவ்வாறிருந்தது? அதன் நிலைமை யாதாகும்? என்பதைக் கடைக்கண்ணால்கூட பார்ப்பதற்கு மனமில்லாதவர்களாகவே யிருக்கின்றார்கள். எனவே, எக்காலத்தில் இஸ்லாம் மார்க்கமானது, தனதுபரிபூர்ண சக்தியோடும், இஸ்லாமியக் கட்டளைகளென்னும் கிரகமானது தனது முழுபலத்தோடும் பிரகாசித்துக்கொண் டிருந்ததோ, அக்காலத்தில் நிகழ்வுற்ற சம்பவங்களைநன்கு நோட்டமிட்டுப் பார்ப்பார்களாயின், தாங்கள் செல்லும் வழிகள் மிகமிகத் தப்பானதென்பதை நன்குணர்ந்து கொள்வார்கள். ஆனுல் துரதிருஷ்டவசமாய் நாம் நம்முடைய பழைய நிலைமையின்பக்கல் அறவே கண்ணெடுத்துங் கூட பார்க்காது இதரர்களிடம் பிச்சை கேட்பதற்காக அவர்களின் வாசற்படி யண்டை காத்துகொண்டு நிற்கிறோம்.

ஒருகாலத்தில் ஐரோப்பாவானது, இஸ்லாத்தின் நாகரீகத்தைப் பின்பற்றி நடந்து முன்னேற்றமடைந்து வந்தது. இக்காலத்திலோவெனில், உபாத்தியாயர், மாணுக்கர்களிடஞ் சென்று சீர்திருத்த மடைய முற்படுவதேபோல், காரியாதிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாம் சரித்திரங்களைப் படித்தபோதிலும், அதில் தக்க முறையில்

கவனஞ்செலுத்தாததால், முஸ்லிம்கள் முற்காலத்தில் தங்கள் காரியாதிகளில் ஜெயசீலர்களாகத் திகழ்ந்து வந்ததற்குள்ள உண்மைக் காரணங்களைத் தக்கமுறையில் தெரிந்து கொள்ள முடியாதவர்களாகவே யிருக்கின்றோம். எனவே, நாம் சரித்திரங்களை ஒழுங்கான முறையில் ஊன்றி கவனிப்போமாகில், அக்காலத்தில் நமது சன்மார்க்கம் உயிர்ப்பித்திருந்ததென்பதையும், முஸ்லிம்கள் அதன் நமூனாவாய்த் திகழ்ந்தார்களென்பதையும், இதுதான் இஸ்லாம் முன்னேற்றமடைந்து விளங்கியதற்குக் காரணமென்பதையும் நன்கு தெரிந்துகொள்வோம். இம் முன்னேற்றத்தின் காரணமாய்த்தான் முஸ்லிம்கள் அடிமைத்தன மென்னும் சங்கிலியை முறித்தெறிந்துவிட்டு, உச்சஸ்தானத்தை அடைந்திருந்தனர். இதுபொழுது கூட மார்க்கத்தின் உண்மையான கட்டளைப் பிரகாரம் முஸ்லிம்கள் நடந்து வருவதுடன் சொல்லளவிலன்றி செய்கையிலும் முஸ்லிம்களாய்விடுவார்களாயின், முந்திய நிலைமையைப்பெற்றுய் வார்களென்பது திண்ணம். ஆதலின் நஞ் சோதிரர்கள் மேலான உச்சஸ்தானத்தை அடைவதற்கு கலீபாக்களின் காலத்தில் இஸ்லாம் எவ்வாறு சிறப்புற்று சீர்திருத்தம் பெற்று கீர்த்தியோடு விளங்கிற்றென்பதை நன்கு கவனித்துப் பார்த்து, அதனை முன்மாதிரியாகக்கொண்டு திகழ்வார்களாயின், மேன்பதவியின் உச்சஸ்தானத்தை அடைந்து மேன்மைபெறுவார்களென்பது திண்ணம்.

நாம் இக்காலப் போக்கை நன்கு கவனித்துப் பார்ப்போமாகில், உலகின்கண் காணப்படும் இராஜாங்கங்களெல்லாம் குடிஜனங்களை திருகையில் வைத்து அறைத்துச் சாரகப் பிழிந்து அதிகாரவர்க்கத்தினரின் தொப்பையை நிறைத்து வருகிறதென்பதையும், சக்தி அற்றோர் அளவிலாக் கஷ்டத்தை அடைந்து வருகின்றன ரென்பதையும், பலவகையிலும் அவர்களது இரத்தங்கள் உறிஞ்சப் படுகிறதென்பதையும், அதனல் குடிகள் கூக்குரலிடுகின்றன ரென்பதையும் நன்கு தெரிந்து கொள்கின்றோம். இந் நிலைமையில் அவர்களுக்குப்பரிந்து பேசுவார்யாருமில்லை என்பது திண்ணம்.

இவ்வாறான சம்பவ மொன்று சமீபகால முதற்கொண்டு "ஷர்க அர்தனில்" நடைபெற்று வருவதை, அரப் தேசத்தில் பிரக்யாதி பெற்று விளங்கும் ஷேக் மித்கால் பாஷா அவர்கள் நல்ல விதமாக எடுத்துக் காண்பித்திருக்கின்றார்கள். அதாவது, ஷர்க அர்தனின் சேனைத்தலைவராக ஓர் அராபியரும், ரவிடெண்டாக ஒரு வெள்ளையரும் நியமிக்கப் பட்டிருக்கின்றார்கள். இவ்விருவருக்கும் கொடுக்கப்பட்டு வரும் சம்பள முதலியவைகளே அத்தேசவாசிகளின் இடுப்புகளை ஒடித்துக் கொண்டிருக்கின்றது. அச் சிறிய அரசாங்கத்தின் நிலைமை அவ்வாறிருக்குமாயின், பெரும் பெரும் இராஜங்கங்களின் நிலைமைகளெல்லாம் எவ்வாறிருக்குமென்பதை நாம் நன்கு யூகித்துக்கொள்ளலாம். ஒரு பக்கத்தில் பார்த்தோமாகில், ஒரு நேரத்திற்குக் கூட சாப்பாட்டிற்கு வழியில்லாதவும், மர்மஸ்தானங்களை மறைத்துக் கொள்வதற்குள்ள உடுபிடவைகளுக்கு வகையற்றவுமான எத்தனையோ கோடான கோடி ஜனங்கள் பரிதபித்துக் கொண்டிருப்பதைக் காண்கின்றோம். மற்றொரு புறத்திலோ வெனில், வைஸ்ராய், கவர்னர்கள், கமிஷனர்கள், சீப் கமிஷனர்கள், ஜட்ஜ்கள், முனிஸிபுகள் முதலானோர் பலவாறான சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டு உல்லாசமாய் வாழ்க்கை நடத்திவருவதைப் பார்க்கின்றோம். இன்னோரெல்லாம் ஏழைகளின் இடுப்புகளை ஒடித்து அவர்களை சம்மதையில் அறைத்து அவர்களின் உதிரங்களை எல்லாம் சாரகப்பிழிந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு அன்னோர், ஏழைகளின் ஐசுவரியங்களை எல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு, தங்கள் சுகபோகங்களை அனுபவிக்கச்செய்வதானது அவர்களிட முள்ள அதிகார மென்னும் சக்தியே யாகும்.

முஸ்லிம் அரசர்களுக்கு ஏற்பட்டிருந்த சம்பளம்.

உலக நாகரீகத்தைத் தேடிப் பலவாறான வெளிப் பூச்சுக்களைக் கண்டு மதிமயங்கி கிடப்பவர்களே! அதிகார வர்க்கத்தின் சம்மதையில் அறைபட்டுக் கிடப்பவர்களே! நீங்கள் முஸ்லிம்களின் பழைய நிலைமையையும், முஸ்லிம் கலீபாக்கள் அரசாக்ஷி புரிந்துவந்த வரலாறுகளையும் சற்று கடைக்கண் கொண்டு பார்ப்பீர்களாகில், இஸ்லாம் மார்க்கமானது உலக மானிடர்கள்மீது கிருபை புரிந்திருக்

கின்றதா? இல்லையா? என்பதை நன்கு தெரிந்துகொள்வீர்கள்.

இதன் உண்மைகளை மெய்ப்பிப்பதற்தாக நாம், மகான்களான கலீபாக்கள் அரசு புரிந்துவந்த காலத்தில் நிகழ்வுற்ற சம்பவங்களில் கவனஞ் செலுத்தவேண்டியதிருக்கின்றது. அக்காலத்தில் தான் இஸ்லாம் சரியான தனது உண்மை நிலையிலும், கடைசிவரை அதனை உலக மானிடர்கள் பின்பற்றி நடந்து வருவதற்குள்ள முன்மாதிரியிலும் காணப்பட்டது. எனவே மாபெரும் கலீபாவாகத் திகழ்ந்த அமீருல் மூமினின் ஹஸ்ரத் உமரிப்னுகத்தாப் (ரலி) அவர்கள் அரசாக்ஷி புரிந்துவந்த காலத்தில், அவர்களுக்காக மெய்க் காவலாளர்களோ, பிரத்தியேகமான ஏறுவாகனங்களோ, தனிஅரண்மனையோஏற்படுத்தப்பட்டிருந்ததா? அவர்களுக்காகத் தனியே ஸ்நான விடுதிகளோ, சமயல் அறைகளோ இருந்தனவா? பிரத்தியேகமாக இராஜ வைத்திய நிபுணர்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தனரா? ஒருக்காலுமில்லை என்பது திண்ணம். இந்நிலைமையில் மகான் அவர்களுக்கு கைஸர், கிஸ்ரா போலொற்ற மன்னாதி மன்னர்களெல்லாம் பயந்து நடுநடுங்கிக் கொண்டிருந்தார்களென்பது உலகறிந்த உண்மையாகும். தவிர மகான் அவர்கள் இவ்வாறான சுகானுபோவங்களை அனுபவிக்காதபோதிலும், தக்க சம்பளத்தையாகிலும் பெற்று வந்தார்களா என்பதை ஆராய்ந்து பார்ப்போமாகில், அவர்கள் கலீபாப் பதவி வகித்து இராஜிய பரிபாலனஞ் செய்துவந்ததற்காகப் பெற்று வந்த ஊதியம் இன்னதென்பது நமது சரித்திரத்தின் முன்னிருக்கின்றது.

எனவே, ஹஸ்ரத்உமரபாரூக் (ரலி) அவர்கள் அரசாக்ஷி புரிந்துவருங்காலை, சஹாபாக்கள் யாவரையும் ஒன்று கூட்டி தங்களுக்குத் தேவைப்படுவனவற்றைத் தெரிவித்து, தங்கள் செலவுக்காக (பைத்துல்மால்) பொது பண்டிலிருந்து எவ்வளவு எடுத்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டார்கள். அதுவிஷயமாய் சஹாபாக்கள் பலவாறான யோசனைகள் புரிந்து முடிவாக சாதாரண உடையும், சாப்பிடுவதற்குத் தேவையானவற்றையும் பொது பண்டிலிருந்து எடுத்துக் கொள்ளலாமென ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அறிவித்தார்கள். அதன்படியே சிலகாலம் நடைபெற்று வந்தது. அதற்குச் சிலகாலத்திற்குப்பின் ஹஸ்ரத் அவர்களின் பெண்சாதி பிள்ளைகளுக்காகவும் பொதுப் பண்டிலிருந்து உடுபிடவையும், சாப்பாடும் கொடுத்துவர ஏற்பாடாயிற்று. யாருடைய அதிகாரத்தின் அமலியைக்கண்டு ரூம்தேசம் முதல் ஈரான் வரையிலுள்ள நாடுகளெல்லாம்நடுங்கிக்கொண்டிருந்ததோ, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த சம்பளம் இதுவேயாகும்? இதற்குச் சிலகாலத்திற்குப் பின் சேனைத் தலைவர்களுக்கெல்லாம் சம்பளம் திட்டப்படுத்தப்படுங் காலை, கலீபா அவர்களுக்காகவும் வருஷமொன்றுக்கு ஐயாயிரம் திர்ஹம் (திர்ஹம் என்பது சற்றேறக்குறைய கால் ரூபாயாகும்) ஏற்பாடு செய்யப்பட்டது. எந்த கலீபாவுடைய காலத்தில், வருஷத்தில் கோடிக்கணக்கான ரூபாய்கள் வரும்படி வந்துகொண்டிருந்ததோ, அவர்களது சம்பளத்தின் ஸ்திதி எவ்வாறிருந்ததென்பதை நன்காலோசித்துப் பார்ப்பீர்களாக.

ஆகவே கலீபத்துல் முஸ்லிமீன் ஹஸ்ரத் உமரபாரூக்(ரலி)அவர்களின்சம்பளமானது, தற்காலையுள்ள சாதாரண ஒரு மாஜிஸ்ரேட்டுக்குள்ள சம்பளத்தைப்பார்க்கினும் மிகக் குறைவாக யிருந்திருக்கிறதென்பதை நன்கு தெரிந்துகொள்கின்றோம். எனவே ஹஸ்ரத் அவர்கள் சாதாரண எளிய முறையிலேயே தான் காலக்ஷேபம் நடத்திவந் திருக்கின்றார்கள். அவர்கள் வார்க்கோதுமையின் சலிக்காத மாவின் ரொட்டிகளையும் சிர்காவையும் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். ஒருநேரத்தில் இரண்டுவிதமான சாப்பாடுகள் அவர்களுக்கு முன் வைக்கப்பட்டதுகிடையாது. எத்தனையோ மாதங்கள்வரைகோதுமைரொட்டி தின்பதற்குள்ள வசதிகூட ஹஸ்ரத் அவர்களுக்குக்கிடைக்காதிருந்தது. அவர்கள் அணிந்திருக்கும் உடுப்புகளை யாரும் பார்த்து இவர்களுக்குஅதிகாரத்தில் சம்பந்த மிருப்பதாகக் கருதவே மாட்டார்கள். அநேகமாக பூமியிலேயே துயல்புரியும் பழக்கத்தைக் கைக்கொண்டிருந்தார்கள். முடிவாகக் கூறுமிடத்து, ஹஸ்ரத் அவர்கள் கஷ்டத்தோடு காலக்ஷேபத்தை நடத்திவந்தார்களெனக் கூறுவது பொருந்தும்.

தவிர பொதுநிதியானது,ஹஸ்ரத்அவர்கள் கைவசமிருந்துவரும் நிலைமையில், தேவையுற்றோர்கள் அதிலிருந்து தங்களுக்குத் தேவைப்

படுபவைகளைப்பெற்றுவரும்போது, ஹஸ்ரத் அவர்களும் தங்களுக்குத் தேவைப்படுபவைகளை அதிலிருந்து எடுத்துக்கொள்வார்களெனக்கருதிவிடாதீர்கள். எனவே, ஹஸ்ரத் அவர்கள் பொதுநிதியை, பொதுமுஸ்லிம்களுடையதெனக்கருதியிருந்தமையால், அதனையெடுத்து உபயோகிப்பது முஸ்லிம்களுக்குச் சதிசெய்வதற்கொப்பாகும் என நினைத்திருந்தார்கள். இதனை உண்மையாக்கி வைப்பதற்குக்கீழே குறிப்பிடப்படும் ஒரு சம்பவமே போதியசான்ருகும். அதாவது, கலீபா அமீருல்மூமினீன் அவர்கள் வியாதிஸ்தராக ஆய்விட்டார்கள். அதற்காகத் தேன் உபயோகிக்கும்படி யாவரும் கூறினர்கள். அதுபொழுது பைத்துல்மாலில் தேனிருந்தும், ஹஸ்ரத் அவர்கள் அதில் கைவைக்கவேயில்லை. ஆனல் மஸ்ஜிதுக்குச்சென்று அங்குள்ள மானிடர்களை நோக்கி, 'மானிடர்காள்! எனக்குச் சற்றுத் தேன் தேவைப்படுகிறது அனுமதியளிப்பீர்களாயின், பொது பண்டிலிருந்து கொஞ்சம் தேன் எடுத்துக்கொள்கின்றேன்' என்றுகூறி அனுமதிகோறினர்கள். உடனே அனுமதிபெற்று அதிலிருந்து கொஞ்சந் தேன் எடுத்து உபயோகப்படுத்திக் கொண்டார்கள். இதனல், பொது பண்டிலிருந்து எடுத்துச் செலவு செய்ய கலீபாக்களுக்கும் பாத்தியதை இல்லாதிருந்த தென்பதை நன்கு தெரிந்துகொள்கின்ருேம்.

இதுவன்றி, மற்ருெரு சம்பவத்தையும் உற்றுநோக்குவீர்களாக. அதாவது, ஒரு தடவை யுத்தகளங்களிலிருந்து சிறைவாறப்பட்ட அநேக ஐசுவரியங்கள் கொண்டு வரப்பட்டு, அதனை பங்கிடு வதற்காக யாவரும் பள்ளியில் வந்து கூடியிருந்தார்கள். ஹஸ்ரத் அவர்களின் புதல்வியும், எம்பெருமானர் (ஸல்.) அவர்களின் மனைவியாருமாகிய ஹஸ்ரத் ஹப்ஸா (ரலி.) அவர்கள் இதனைக் கேள்விப் பட்டு அங்கு வந்து, அந்த ஐசுவரியங்களிலிருந்து ஏதாகிலும் தங்களுக்குத் தரும்படி தந்தை அவர்களிடம் கேட்டுக்கொண்டார்கள். இதனைப் பார்த்து ஹஸ்ரத் அவர்கள் மகளை நோக்கி ஈரல் துண்டாகிய மகளே! தாம் என் சொத்திலிருந்து பாத்தியதை அடைய வேண்டும்; இது யுத்தகளங்களிலிருந்து சிறைவாறப்பட்ட முதலாகயிருப்பதால், தாம் அதிலிருந்து எவ்வாறு பாத்தியதை அடைய முடியும்? எனக் கூறி கொடுக்க முடியாதென அறிவித்து விட்டார்கள். இதனைக் கேட்டு ஹஸ்ரத் ஹப்ஸா (ரலி.) அவர்கள் எழுந்து போய் விட்டார்கள். இது வல்லவோ நீதிபரிபாலனத்தின் முறை?

இக்காலை மேல்நாடுகளானது ஏழைகளின் நரம்புகளிலுள்ள உதிரங்களை எல்லாம் உறுஞ்சிச் சாப்பிடுவதற்கு முற்பட்டிருப்பதைக்கண்டஞ்சி தட்டுத்தடுமாறி இதை விட்டு விரண்டோடி போல்ஷிவிக் இயக்கத்தின் கீழ் விடுதலை பெறுவதற்கு முயற்சிகள் செய்யப் பட்டு வருகின்றது. ஆனல் கிலாபத் அரசாக்ஷி காலத்தில், மானிடர்களுக்குச் சௌகரிய மேற்பட்டிருந்ததுபோல, போல்ஷிவிக் இயக்கத்தினல் சௌகரிய மேற்பட்டிருக்கிறதா? வெனக் கேழ்க்கின்றேன். எனவே ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் காலத்தில் குடிபதிகளுக்கு எவ்வாருன சௌகரியங்கள் ஏற்பட்டிருந்ததோ, அவ்வாருன சௌகரியங்களிற் பத்திலொரு பாகங்கூட ரஷியாவிலேற்பட்டிருக்கிறதாக யாராலும் எண்பிக்க முடியுமா? ஆகவே, கிலாபத் ஆக்ஷிகாலத்தைப்போல் அதற்கு முன்னுவு மேற்பட்டிருந்ததில்லை, அதற்குப்பின்னும் இக்காலைவரை ஏற்பட்டவுமில்லை, இனியும் ஏற்படப் போகிறதுமில்லை என்பது திண்மை. அதற்குக் காரணம் கிலாபத் அரசாட்சி காலத்தின் நடவடிக்கைகள் யாவும், குர்ஆன் ஷரீன் அஸ்திவாரத்தின் மீது ஏற்பட்டிருந்ததேயாகும் எதுவரை உலகமானது, கிலாபத் அரசாக்ஷி காலத்தில் ஏற்பட்டிருந்த நடவடிக்கைகளை ஏற்று நடக்க முற்படவில்லையோ, அதுவரை உலகினருக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்ட சங்கடங்கள் முடிவடையா தென்பது திண்ணம்.

பினங் சந்தா நேயர்கட்கு!

அவ்விடத்திலுள்ள நமது சந்தா நேயர்கள் தங்களுடைய சந்தா ரூபாயை அவ்விடத்திய நமது ஏஜெண்டு ஜனப் N. K. முஹம்மத் கவ்ஸ் சாஹிப் (113, சோலியா ஸ்ட்ரீட்) அவர்களிடம் கொடுத்துவிடும்படி கோருகிருேம்.

மானேஜர்,

சுயமரியாதை இயக்கத்தினரின் விபரீதக் கூற்று.

இவ் வியக்கத்தினர் ஆரம்பத்தில் ஹிந்து சயத்தில் காணப்படும் அநாகரீகக் கொள்கைகளையும் ஆபாசக் கூற்றுக்களையும் கண்டித்து வந்தனர். அதனால், தாங்கள் ஹிந்துக்களைச் சீர்திருத்த முனைந்திருப்பதாகவும் கூறிவந்தனர். இங்கிலைமையில் சிற்சில சமயங்களில் இஸ்லாத்தையும் அதன் திருத்தூதர் அவர்களையும் வாயாரப் போற்றிப் புகழ்ந்து வந்தனர். என்றாலும் அவர்களின் போக்கானது கடாசியில் நாஸ்தீகத்தில் கொணர்ந்து சேர்த்துவிடுமென்பது ஆரம்பத்திலேயே யூகிக்கப்பட்டதாகும். அதனால் இவ்வியக்கத் தலைவரான ஈ. வெ. ராமசாமி நாய்க்கருடைய பற்பல கூற்றுகளும் கண்டிக்கப்பட்டதென்பது வெள்ளிடை.

ஹிந்துமதமானது உருவ வழிப்பாட்டையும் விக்கிரஹ ஆராதனையையும் வலியுறுத்துகின்றது; ஒதுக்கப்பட்டவர்கள் ஆலயங்களில் பிரவேசிக்கக் கூடாதென்றும், குளங்களில் புழங்கக் கூடாதென்றும் உபதேசிக்கின்றது; அவர்கள் அடிமைவேலைகள் செய்வதற்காகவென்றே இப்பூஉலகின்கண் தோன்றியிருப்பதாகவும் கருதுகின்றது; பெண்களுக்குச் சொத்துரிமை கிடையாதெனவும் மறுக்கின்றது. எனவே இவ்வாறான மதங்கள் சுயமரியாதைக் காரர்களால் தாக்கப்படுவதற்கு உரித்தானவையே. எனவே ஹிந்துக்களின் புராணங்களையும் அவர்களின் கிரியைகளையும் சு. ம. கள் தாக்குவதற்குக் காரணங்கள் இல்லாமற்போகவில்லை. கற்களினாலும், மரங்களினாலும், உலோகங்களினாலும் தயாரிக்கப்படும் விக்கிரகங்கள் கடவுள்களல்லவென்று மறுக்கப்படுங்காலை, உண்மையான கடவுளையும் மறுக்கத் துவங்கினர். உண்மையான இறைவனை அறிந்து கொள்ள சக்தியற்று கடவுளே கிடையா தென்றும், கடவுள் உண்டென்று கூறுவது பூச்சாண்டி காட்டுவதாகுமென்றும் வாயில் வந்தவாறெல்லாம் உளறிக் கொட்டுகின்றனர் இக்குளாத்தினர்.

எனவே இவ்வறிவிலிகள் இப்பொழுது பரிசுத்த இஸ்லாத்தைக் குறித்து தப்பும் தவறுமாயுள்ள கட்டுரைகளை வறைய ஆரம்பித்திருக்கின்றனர். இஸ்லாத்தை நன்காராய்ந்தே இவ்வாறு எழுதத் துணிந்திருப்பதாகவும் பறை சாற்றுகின்றனர். ஆனால் இவர்கள் சன்மார்க்கத்தைப் பற்றி ஒரு சிறிதளவுங்கூட உணர்ந்துகொள்ளவில்லை என்பது திண்ணம். உலகத்தின் கண்ணுள்ள எத்தனையோ சீர்திருத்தக்காரர்களும், சீர்திருத்தச்சங்கங்களும் ஏற்பட்டு அவர்கள் மானிட வர்கங்களுக்கு இன்றியமையாத சாதனங்களைத் தேடுவதிலீடுபட்டு, ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றனர். அம்முடிவு யாதென்பதை உற்று நோக்குவோமாகில், அவை ஏற்கனவே இஸ்லாம் மார்க்கத்தில் அருளப்பட்ட முடிவாகவேயிருப்பதைக் கண்டுகொள்கின்றோம். உதாஹரணமாக, மதுவிலக்கை எடுத்துக்கொள்வோம். தற்காலை பல தேசங்களிலும் மது வருந்தலைத் தடுப்பதற்குப் பிரசாரம் புரிந்து வருகின்றனர்; பல்லாயிரக் கணக்கான தொகைகளையும் அதற்கெனச் செலவிடுகின்றனர். ஆனால் அதனால் கோரிய பலனை இதுவரை அடைந்ததாகத் தெரியவில்லை. ஆனால் எமது இஸ்லாம் இச்சேவையை 1300 வருடங்களுக்கு முன்னரே வெகுநுண்ணிய முறையில் செய்து முடித்துத் தக்கப் பிரயோசனமடைந்திருக்கிறது.

இங்கு தீண்டாமையையும் கவனிப்போம். இதர மார்க்கங்கள் தாழ்த்தப்பட்டோர், அவர்களுடைய பிறப்பைக்கொண்டே ஒதுக்கப்பட்டவர்களாக இருக்கின்றார்களெனக் கருதுகின்றது. அதனால் அவர்கள் இதர மானிடர்களைப்போன்று எவ்வித உரிமைகளையும் அடைய முடியாமற் பரிதவிக்கின்றனர். அவர்கள் இத்தீண்டாமை என்னும் விலங்கை விட்டுவெளியேற முயற்சிக்கின்றனர். ஆனால், அஃது எந்த ஹிந்து மதத்தாலும் கிறிஸ்தவ மதத்தாலும் முடியாதென்பது திண்ணம். எத்தனை மஹாத்மாக்கள் ஒன்று சேர்ந்தாலும் அதனைச் செய்து முடித்துவிடமுடியாதென்பது பிரத்தியக்ஷம். ஆனால் இஸ்லாத்தின் அதிபர், நபிகள் திலகம் (ஸல்) அவர்கள், இதுசம்பந்தமாய் அருளியிருக்கும் விஷயத்தை உற்று நோக்குங்கள். "மனிதன் பிறக்கும்போதே சன்மார்க்கத்திலேயேபிறக்கிறான். அவனது தாய்தந்தையர்கள் அவனை வழி கெடுத்து விடுகின்றனர் என எம்பெருமானார் (ஸல்.) அறிவித்துள்ளார்கள். எனவே

பிறப்பைக் கொண்டே. மனிதன் நல்லவன் அல்லது கெட்டவனுக ஆய்விடுகின்ருன் என்று இஸ்லாம் கூறவில்லை என்பது திண்ணம். எந்த மக்களையும் தன்னகத்தே சேர்த்துகொண்டு நன்மக்களாக ஆக்கிவிடக்கூடி மதம் இஸ்லாமே யன்றி வேறெந்த மதத்தாலும் முடியா தென்பது திண்ணம். இவ்வாறு சகல சீர்திருத்தங்களையும், மானிடனது முன்னேற்றத்தையும் அடிப்படையாகக் கொண்ட அனுபவசாத்தியமானமதம் தான் உலகேற்கும் உண்மை மதமாகும்.

இவ்வாருன அருமை பெருமை பொருந்திய மதத்தை ஒரு சில நாஸ்திகக் குழுக்கள் தூற்ற முற்பட்டிருப்பது அவர்களின் அறிவீனமே யன்றி வேறில்லை என்பது திண்ணம். இஃதோ கலியுகம். இக்காலை கலாஞானங்களும் அனுபவங்களும் அதிகரித்துவரும்போது, மடமைத் தனத்தையே அஸ்த்திவாரமாகக் கொண்டுள்ளநாத்திகக் கொள்கைகளைப் பிரசாரஞ் செய்ய ஒரு சிலர் முற்படுவது பெரும் விந்தைக்குரியதேயாகும்.

இக் கோஷ்டியினர், பரிசுத்த இஸ்லாத்தைப்பற்றி குடிஅரசுப் பத்திரிகையிலும், திராவிடனிலும் பல ஆபாசக் கட்டுரைகளை வெளியிட்டிருக்கின்றனர். அதில் இஸ்லாம் மதத்தைப் பற்றி தாங்கள் ஏதோ ஆராய்ச்சி செய்ய வேண்டிய சந்தர்ப்ப மேற்பட்டு ஆராய்ச்சி செய்து வந்ததாகக் குறிப்பிடுகின்றனர். இஸ்லாத்தைப்பற்றிய சிறியதோர் ஆராய்ச்சியேனும் அவர்களுக்கிருக்குமாயின், இவ்வாருன தீயப் பிரசாரத்தில் அன்னுேர் செல்லமாட்டார்களென்பது திண்ணம். இஸ்லாத்தைப் பற்றி துர்ப்பிரசாரஞ் செய்து கொண்டிருந்த கிறிஸ்தவர்களிற் சிலர், மென்மேலும் தக்க முறையில் அப்பிரசாரத்தை நடத்திச் செல்ல வேண்டு மென்னும் எண்ணத்தோடு இஸ்லாம் மதத்தை நன்காருயப் புகுந்து ஆராய்ச்சிசெய்ததின் பயனுக, அச் சன்மார்க்கத்தின் உண்மை அன்னுேருக்குத் தெரிந்துவிடவே, அதன் தன்மை அவர்களது மனதில் பதிந்து அவர்கள் கோறிச் சென்ற தீயவழியினின்று பின் வாங்கினுர்க ளென்பது சரித்திரக் குறிப்பாகும்.

இவ்வறிவிலிகளாம் சு. ம. குழாத்தினர், பொதுவாய்ச் சகல மதங்களையும் ஒழித்துவிட பிரயத்தனப் பட்டிருக்கும் போது, முஹம்மதிய மதத்திற்குமட்டும் எங்கிருந்து யாதுகாப்பளிக்க முடியுமென்று வரைகின்றனர். இஸ்லாம் மதத்திற்குப் பாதுகாப்பளிக்கும்படி இக் காக்கைக் கூட்டத்தினர்களை எவரும் கேட்டுக்கொள்ளவில்லை. உலகமே இஸ்லாத்தின் சீர்திருத்தத்தைவேண்டி நிற்கும் இச்சமயத்தில், அதனுடைய ஒரு சிறிய முளையையுங்கூட இவ்றிவறிவிலிகளால் அசைத்துவிட முடியாதென்பது திண்ணம்.

மேலும் 15-11-32ல் வெளியான திராவிடன் பத்திரிகையில் கீழ்காணுமாறு கூறப்பட்டிருக்கின்றது.

சிட்டி ஆப் மார்ஸேல்ஸ் என்ற கப்பலில் வடதுருவத்தை நோக்கி சில கிறிஸ்தவர்களும் சில லஸ்கர் வேலைக்காரர்களான முஸ்லிம்களும் பிரயாணஞ் செய்தார்கள். அந்தச் சமயம் ரம்ஜான் விரதகாலமாகும். உண்மையான மதப்பற்றுடைய முஸ்லிம்கள் இத்தினத்தில் பகலில் உணவு உட்கொள்ளவே கூடாது. ஆகையால் சூரியன் அஸ்தமானமாகும் என்று முஸ்லிம்கள் எதிர்பார்த்துக் கொண்டே யிருந்தார்கள். ஆனுல் துருவத்தில் ஆறுமாதம் இரவு ஆறுமாதம் பகல் என்பது அவர்களுடைய மதப் புத்தகத்தில் கிடையாது. விரதம் மிகக்கடுமையாக அனுஷ்டிக்கப்பட்டதின் பலன் பதினேழு முஸ்லிம்களும் இறந்தார்கள். கூடச் சென்றிருந்த கிறிஸ்தவர்கள் பரிகசித்தார்கள். இச்செய்தி 1919-ம் ஆண்டு எப்ரல்மீ 4-ந்தேதி டைம்ஸ் பத்திரிகையில் வெளியாயிருக்கின்றது.

இம்மாதிரி மதம் மக்களுக்குத் தேவை தானு? என்று கேழ்க்கவே சுயமரியாதை இயக்கம் ஏற்பட்டிருக்கிறது.

இதனுல் இஸ்லாம் மதம் ஆராய்ச்சியற்றதும், அனுபவசாத்திய மற்றதுமாகுமென்று எண்பிக்க வியாசகர்த்தா முற்படுகின்ருர். ஆதலால் முதலாவது இவர் வெளியிட்டிருக்கும் பழங்கதை உண்மைதானு வென்று ஆராயவேண்டியிருக்கின்றது. எனவே ஆறுமாதம் பகலாகவும் ஆறுமாதம் இரவாகவும் யிருக்கக்கூடிய துருவம் உண்டென்பது உண்மையே. ஆனுல் அத்துருவத்தை நோக்கிச் சென்ற கப்பல் எத்தனை மாதம், நாள் சென்று கொண்டிருந்ததென்பதை விளக்காமல், பழைய பாட்டிக் கதைக்கொப்ப வரைந்து, 17 முஸ்லிம்களும் விரதம் அனுஷ்டித்ததால் மரணமடைந்துவிட்டார்களென்றும் அறிவிக்கின்ருர். இது இஸ்லாத்தின் விரோதிகளால் கட்டிவிடப்பட்ட அபாண்டப் பொய்க் கதையாகுமென்பதில் எவ்

வித சந்தேகமுமில்லை. மேலும் இக் கதை உண்மையாக யிருப்பதாகவே வைத்துக் கொண்டாலும், அவ்வாறு முஸ்லிம்கள் மரணம் ஏற்படும்வரை நோன்பு நோற்றது இஸ்லாமிய மார்க்கச் சட்டப்படி தவறுனதாகும். ஏனெனின், பிரயாண காலங்களில் நோன்பு நோற்பதைப்பற்றி எம்பெருமானர் (ஸல்.) அவர்களிடம் வினவப்பட்டபோது, அதுபொழுது நோன்பு நோற்பது உசிதமானதல்ல வென்று அறிவித்திருக்கின்றுர்கள். மேலும் நோன்புநோற்றுக்கொண்டிருப்பவர்கள் தங்கள் உயிருக்கு அபாயம் நேரிடுமெனக் கருதுவார்களாயின், உடனே நோன்பை முறித்துவிடவேண்டுமென்று சன்மார்க்கம் கட்டளையிடுகின்றது. ஆகவே அக்கப்பலில் நோன்பு நோற்றவர்கள் இவ்விரண்டு வகையிலும் தவறிழைத்து விட்டார்களென்றே கூறவேண்டி யிருக்கின்றது. ஆகவே, இது இஸ்லாம் மார்க்கத்தின் தவறன்று. எச்சமயத்தும், எக்காலத்தும், எத்தேசத்தவரும் அனுஷ்டிப்பதற்கு இலக்கான மதம்இஸ்லாம் என்பதில் ஐயமில்லை. மேலும் துருவங்களைப்பற்றிய ஆராய்ச்சி இஸ்லாத்தில் இல்லை என இவ்வறிவிலிபுகலுகின்றுர். இதுவும் இவருடைய அறியாத்தன்மையேயாகும். ஏனெனில் துருவங்களில், இராப்பகல்காலங்களில் ஏற்படும் வித்தியாசங்களையும், அது சமயம் மார்க்க கிறியைகளை எவ்வாறு அனுஷ்டிக்க வேண்டுமென்பதையும் விபரமாய் இஸ்லாம் மார்க்கக் கிரந்தங்களில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே விஷயங்களை நன்குணர்ந்து கொள்ளாது சன்மார்க்கத்தின்மீது குறை கூற முற்பட்டிருப்பது அவ்வறிவிலியின் தவறேயாகுமென்பதை நண்பர்களுணர்ந்து கொள்வார்களாக.

தவிர சென்னையில் சு.ம. காரர்களும் ஆரிய சமாஜத்தார்களும், புத்தர்களும், பிரம சமாஜத்தார்களும் ஒன்றுசேர்ந்து ஆயிரக் கணக்கான இளைஞர்களைத் தயார்செய்து விட்டதால், வைதீகமதங்களுக்கு இனி செல்வாக்குக்குறைந்துவிடும் என்னும்பீதி வைதீக முஸ்லிம்களைப்பிடித்துக்கொண்டதென்றுஇக் குழுக்ககள் பிதற்றித்திரிகின்றனர். ஆரிய சமாஜத்தார்கள் இச் சென்னையின்கண் தக்க வாயாப்புப் பெற்று வருகின்றன ரென்பதை இவர்கள் அறியார் போலும். தவிர சு. ம. காரர்களின்தைரியத்தை ப்பற்றித்தான்சிலாகிக்க வேண்டியிருக்கின்றது? எனவே இவ்வியக்கத்தை ஸ்தாபித்த வரும், கு. அ. பத்திராதிபருமாகிய ஈ. வெ. ராமசாமி நாய்க்கர் என்பார், சமீபத்தில் சென்னையில் நாஸ்திகப் பிரசாரஞ் செய்ய முற்படுகிறு ரென்பதை அறிந்த முஸ்லிம்களும், ஆஸ்திக ஹிந்துக்களும் செய்த கிளர்ச்சியைக் கண்டு பயந்து, மகா ஆர்பாட்டத்தோடு முன்னறிக்கைசெய்திருந்த கடற்கரை மீட்டிங்குக் கூட வராது ஓட்டம் பிடித்து விட்டா ரென்பது உலகறிந்த உண்மையாகும். இக் காக்கைக் கூட்டத்தினரைக் கண்டா முஸ்லிம்கள் பீதியடையப் போகின்றனர். ஈதெல்லாம் இவர்களது வீண் புரளியாகு மென்பதிலய்ய மில்லை. ஆகவே, அக்குழாத்தினர்ஆராய்ச்சியில்லாது இஸ்லாத்தின் மீது வீண் கட்டுரைகள் வரைந்து, வீண் விதண்டாவாதஞ் செய்ய முற்படாது சத்தியத்தைக் கடைபிடித் தொழுகுவார்களாக.

அன்பீர் !

சந்தா நேயர்கட்கு !

நம் அரும்பெரும் மாசிகையைத் தாங்கள் மிக அன்போடு ஆதரித்துவருவது பாராட்டத்தக்கதேயாகும். வருஷ ஆரம்பத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்துள்ள உங்களிலநேகர் ஆரம்பத்தில் சந்தாத்தொகையை செலுத்தியிருந்தும் சிலர், வருஷமுடிவடைந்தும் இதுவரை சந்தா செலுத்தாமலேயிருக்கின்றீர்கள். அன்னோர்க்கு இதுபொழுதுள்ள வருஷக்கடைசி மாசிகையை வி. பி. செய்யலாமென்று முடிவுசெய்திருந்தும் அதனலேற்படும் வீண் செலவுகளைக்கருதி அவ்வாறு செய்யாமல் சாதாரணமாகவே மாசிகையை அனுப்பியிருக்கின்றேம். ஆதலின் நேயர்கள் தாமதியாது தங்கள் சந்தாக்களை உடனே அனுப்பிவைப்பார்களென்று எதிர்பார்க்கின்றேம். தவிர, சந்தாக்களை முன்பணமாக அனுப்பி ஆதரித்துவந்தால்தான் மாசிகையை தக்க முறையில் நடத்திக்கொண்டுபோவதற்குச் சௌகரியமாயிருக்கும் என்பதை அறிந்த தாங்கள், 1933-ம் வருஷத்திற்குள்ள சந்தாத்தொகையையும் முன்னடியே அனுப்பிவைப்பீர்களென எதிர்பார்க்கின்றேம்.

மானேஜர்,

ஆசிரியர் குறிப்பு

ஆரிய சமாஜப் பிரசாரம்:—இக்கோஷ்டியினர் சிறிது காலமாய் சென்னைமா நகரிலும் தங்கள் கொள்கையைப் பிரசாரஞ் செய்யத் துவங்கியிருக்கின்றனர். இதற்கிடையே இதர சமூகங்களையும் சமயோசிதமாய்த்தாக்கிப்பிரசங்கம் புரிந்துவருகின்றனர். எனவே, அவர்கள் இஸ்லாத்தில் அமைந்துகிடக்கும்பற்பல இரகசியங்களைத்தெரிந்துகொள்ளாது அதன் மீதும் அபாண்டப் பொய்க் கூற்றுகளைப் பரத்தி வருகின்றனர். இதுவிஷயமாய் அன்னோர்க்கு முஸ்லிம்களால் பலவாறு எச்சரிக்கை செய்யப்பட்டும் மீண்டும் அவர்கள் அத்துறையிலேயே பிரவேசித்து வருவதாகவே தெரிகிறது. ஆரிய சமாஜத்தினருக்கு ஒரு குறிப்பிட்ட கொள்கைகளோ, மானிடர்களை முன்னணிக்குக் கொண்டு செல்லக்கூடிய வேதங்களோ கிடையாதென்பது திண்ணம். மனிதர்களில் நல்லோர் கெட்டோர் என்னும் வித்தியாசத்தைத் தவிர்த்து வேறு எவ்வகையிலும் வித்தியாசங் கிடையாது என்பதை போதிக்கவேண்டியது அருள் வேதங்களின் லக்ஷணமாகும். உலகம் எக்காலத்தும் இவ்வாருன சமத்துவத்தைத்தான்கோரி நிற்கின்றது. இக்கொள்கையைப் பிரகடனப்படுத்துவதற்கே சகல சீர்திருத்தக்காரர்களும் அரும் பெரும் முயற்சி எடுத்து வந்திருக்கின்றனர். இந்நிலைமையில் ஆரிய சமாஜத்தார்களின் முக்கிய நூலெனக் கருதப்பட்டு வரும் "சத்தியார்த்தப்பிரகாச"த்தில்,சூத்திரர்கள் அநாரியர்கள் (அதாவது ஆரியரல்லாதவர்கள்) என்றும், சூத்திரர்களை சமையல் முதலிய வேலைகளுக்கு ஏற்படுத்திக் கொள்ளலாமென்றும், அவ்வாறு அவர்கள் வேலை செய்யுங்காலை வாயிலிருந்து மூச்சுக் காற்று ஏற்பட்டு அதில் வந்து கலவாதமடி வாயைத் துணியால் மூடிக் கொள்ள வேண்டுமென்றும், பிராமணர்கள் வித்தையை ஓதிவைப்பதிலும், க்ஷத்திரியர்கள் இராஜபரிபாலனத்திலும், வைசியர்கள் வியாபாரத்திலும் பராக்காக யிருக்க வேண்டுமென்றும்வரையபட்டிருக்கின்றது. இதுதான் இவர்களது வேதக் கட்டளையாகும். இவ்வாறு மானிடர்களுக்கிடையே பாகுபாடுபடுத்திக் கூறும் ஒரு நூலை, மக்களுக்கு நலம் தரும் பிரதான நூலெனக் கருத முடியுமா? அவ்வாறு கட்டளை ஏற்படுத்தியிருக்கும் ஒரு சமயத்தை ஒரு மார்க்கமென்று அழைக்க முடியுமா? இதன்படி குறிப்பிட்ட வகுப்பார் இதர வேலைகளைச் செய்வது பாவமான காரியமாகுமென்றல்லவோ ஏற்பட்டு விடும் இற்றைக்கு எத்தனை பிராமணர்கள் வேதம் ஓதுவதிலேயே ஈடுபட்டிருக்கின்றனர்? எத்தனை க்ஷத்திரியர்கள் இராஜிய பரிபாலஞ் செய்து வருகின்றனர்? என்று இவர்களை வினவுகின்றேன். மேலும் ஆரியர்களின் தின்பண்டங்களில் சூத்திரர்களுடைய காற்றுங்கூடப் படக்கூடாதென்று கூறுவது அவர்களை ஏகதேசத்தில் ஒடுக்கப்பட்ட சாதியாராகவல்லவோ ஆக்கிவிடுகின்றது.எனவே ஒரு சூத்திரன் நல்லவனுகவும் வேதமுணர்ந்தவனுகவும் பரோபகார சிந்தையுள்ளவனுகவும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். இக்கூற்றுப்படி அவனும் ஒடுக்கப்பட்டவனுகவும், தாழ்த்தப் பட்டவனுகவும் கருதப்படுவான். இது எத்துணைதூரம் பொருத்தமுள்ளதென யாரால்கூறமுடியும்? ஒரு வேதம் இவ்வாறு கட்டளையிடுகிறதென்ருல், இதைவிட அநியாயமுண்டோ? இதனுலேயே இவர்களுடைய கொள்கை அசத்தியமானதென்று கூறலாம். இவ்வாருன அசத்தியமான கொள்கையுடையவர்கள் உண்மையா சத்தியமார்க்கத்தைத் தாக்க முன்வந்திருப்பதுஅவர்களின் அறிவீனமேயன்றிவேறில்லை என்பது திண்ணம். நிறவித்தியாசம், ஜாதிப் பாகுபாடு, குலவேற்றுமை உயர்த்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் எனக் கூறப்படுவது முதலியவற்றை வேருடன்கெல்லி எறியவேண்டியதுதான் அருள்வேதங்களின்முக்கியச்சேவையாகும். குர்ஆன்இதைத்தான் வலியுறுத்தி நிற்கின்றது எனவே, வேதங்களின் அம்சங்களையே இன்னதெனத் தெரிந்து கொள்ளாது ஆரியசமாஜத்தார் பரிசுத்தஇஸ்லாத்தின்மீது வீண்குதர்க்கப்பிரசங்கங்களைச் செய்து வருவது அவர்களின் அறியாமையேயாகும். ஆகவே அவர்கள் தங்கள் அறியாமையை உணர்ந்து கொண்டு அதைவிட்டுப் பின்வாங்காதிருப்பார்களாயின், கவர்ன்மெண்டார் அவர்கள் மீதுதக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களென எதிர்பார்க்கின்ருேம்.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு	... ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு ...	,,	4 0 0
தனிப் பிரதி	... ,,	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்பட மாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

48, அங்கப்ப நாய்க்கன் தெரு,

G. T., மதராஸ்.

இஷா அத்துல் ஹஸனாத்

பீதர்ஜுமத்தில் பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்

வேலூர் மத்ரஸயே பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் அராபிக் கலாசாலையின் ஸ்தாபகரும், ஷம்ஸுல் உலமாவுமாகிய அஃலா ஹஸ்ரத் கிப்லா மர்ஹூம் வ மக்பூர் அல்ஹாஜ் ஷாஹ் அப்துல் வஹ்ஹாப் சாஹிப் கிப்லா, அவர்களினது கட்டளைக்கேற்ப ஷை கலாசாலையின் ஆசிரியரும், கியாதிவாய்ந்த வாயிஜுமாகிய மௌலானா மௌலவீ அல்ஹாஜ் அப்துல் காதிர்பாதுஷா சாஹிப், மர்ஹூம் வ மக்பூர் அவர்களால் உர்துவிலியற்றப் பெற்றுள்ள "அல்பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்" என்னும் அரும் நூலின் மகிமையை இவ்வுலகு நன்கறிந்திருக்கின்றது. ஆனால் அதன் அரும்பெரும் பிரயோசனங்களை உர்து பாஷை மட்டுங் கற்றுள்ள ஒரு சாரார் மட்டும் அடைந்து வருவதைப் பார்த்த, அக் கலாசாலையின் நாஜிர் மௌலானா மௌலவீ அல்ஹாஜ் ஜியாவுத்தீன் முஹம்மத் சாஹிப் கிப்லா அவர்கள், இவ்வரும் நூல் நந்தென்னாட்டில் மிகுதமாயுள்ள முஸ்லிம்களின் பழக்கத்திலுள்ள தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு அச்சிடப்படுமாயின், அளவற்ற பிரயோசன மேற்படுமெனக் கருதியதாலும், அதனை தமிழில் மொழி பெயர்த்து அச்சிடுமாறு பன்முறையும் பல கனவான்கள் வேண்டிக் கொண்டதற்கிணங்கவும் அதனை மொழி பெயர்த்து அச்சிடப் பட்டிருக்கின்றது.

இவ்வரும் நூலில் நம்மவரின் நித்திய அலுவல்களாகிய உணவு, உடை, கைத்தொழில், வர்த்தகம் முதலிய விஷயங்கள் சம்மந்தமாக நம் சன்மார்க்கம் என்ன சட்ட திட்டங்களை ஏற்படுத்தி யிருக்கிற தென்பதையும், அவைகளிலெது வஸ்த்து சன்மார்க்கத்திற்கு முரண்பட்டிருக்கிறதென்பதையும் நன்கு விளக்கப் பட்டிருக்கிறது. எனவே இஃது நம்மவர்களுக்குத் தக்கப் பிரயோசன மளிக்கவல்ல நூல் எனத் தைரியமாய்க் கூறலாம். இதில் 2000-க்கு அதிகமான "மஸ் அலாக்கள்" அடங்கியிருக்கின்றன. இதனை ஒவ்வொருவரும் வாங்கிப் பார்த்து பயனடைவார்களென மிக மிக எதிர் பார்க்கின்றோம்.

கிரயம் காலிக்கோ பைண்டு ரூ. 1—8—0

கிடைக்குமிடம் :— மானேஜர்,
மத்ரஸா பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்,
அரபிக் காலேஜ், வேலூர்.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.